கல்கி



KALKI 21-4-1957 30 நயா பைசா


ஸ்நானத்தின் புதுமை யின்பத்தை
நாள் முழுதும் அனுபவித்திட
ஹிமாலயா புக்கே
டால்கம் பவுடர்
Himalaya Bouquet
Erasmic
Himalaya
Bouquet
TALCUM POWDER
Erasmic
Himalaya
Bouquet
TALCUM POWDER
ரெக்ஸோனா உறைகளைக் கொடுத்
தீர்களானால், குறைந்த
விலையில் கிடைக்கும்
லண்டனிலுள்ள இராஸ்மிக் கம்பெனி
லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது
HB. 16A-50 TM

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

தக்ஷிண ரெயில்வே

மலை வாசஸ்தலங்களுக்கான ரிட்டர்ன் டிக்கெட் சலுகைகள்

1957-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து 1957 அக்டோபர் 31-ம் தேதி வரையில் கீழ்க்கண்ட மலை வாசஸ்தலங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது வகுப்புகளுக்குள்ள கட்டணத்தில் ஒன்றரை மடங்கு தொகைக்கு ரிட்டர்ன் டிக்கெட்டுகள் பிரயாணத்திற்கேற்றபடி, இரண்டாவது மூன்றாவது வகுப்புகளுக்கு மெயில்/எக்ஸ்பிரஸ் அல்லது சாதாரண கட்டணங்கள் வசூலிக்கப்படும். 150 மைல்கள் அல்லது அதற்கு அதிகமான தூரமுள்ள இடங்களுக்கு தக்ஷிண ரயில்வே ஸ்டேஷன்களி லிருந்து கொடுக்கப்படும். பிரயாணம் தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாதங் களுக்கு ரிட்டர்ன் டிக்கெட்டுகள் செல்லும். சாதாரணமாக ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடம் பிரயாணம் செய்வதற்கு என்னென்ன நிபந்தனைகள் உண்டோ, அந்த நிபந்தனை களின் கீழ் ரிட்டர்ன் டிக்கெட்டுகளை முன்னதாகவே வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

1. பதன்கோட்
2. சிம்லா
3. சோலன்
4. தரம்பூர் (பஞ்சாப்)
5. டேராடூன்
6. காத்கோடம்
7. குர்சியாங்க்
8. டார்ஜிலிங்
9. ஷில்லாங் அவுட் ஏஜன்ஸி
   (கௌஹாத்தியின் பாண்டுவைச் இணைக்கப்பட்டது)
10. ஆபு ரோடு
11. உதகமண்டலம்
12. கூனூர்
13. கொடைக்கானல் ரோடு
    (கோடைக்கானல் அவுட் ஏஜென்சி உட்பட)
14. கோத்தகிரி அவுட் ஏஜன்ஸி
    (மேட்டுப்பாளையத்துடன் இணைக்கப்பட்டது)

மூன்று வயதுக்கு மேல் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இந்த விசேஷ சலுகைக் கட்டணத்தில் பாதி கட்டணம் வசூலிக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட அவுட் ஏஜன்ஸிகளிலுள்ள இடங்களுக்கு ரயில் வழியாக மாத்திரம் போய்வர ஒன்றரைக் கட்டணமும் ரஸ்தா வழியாகப் போய்வர இரட்டிப்பு கட்டணமும் செலுத்தி ரிட்டர்ன் டிக்கெட்டுகள் பெறலாம்.

மேற்படி பிரயாணத்தில் போகும்போது நடுவில் தங்கிச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது. ஆனால் திரும்புகையில் நடுவில் தங்கிச் செல்ல அனுமதிக்கப் படுவார்கள். அப்படித் தங்கிச் செல்லுவோர், சாதாரண டிக்கெட்டுகள் வாங்குவோர் நடுவில் தங்கிச் செல்லும்போது என்ன நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டுமோ, அதே நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

மேற்கொண்டு விவரங்களறிய, ஸ்டேஷன் மாஸ்டர்கள் அல்லது சீப் கமர்ஷியல் சூபரின்டென்டெண்ட், தக்ஷிண ரயில்வே, சென்னை-3 என்ற விலாசத்துக்கு எழுதவும்.

சீப் கமர்ஷியல் சூப்பரின்டென்டெண்ட்



மலர் 16 | இதழ் 38

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

ஹேவிளம்பி ௵ | சித்திரை 9உ

வரவேற்கிறோம்!

தமிழ்ப் புத்தாண்டு பிறந்த புனித நாளில், தமிழ் நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த புதிய மந்திரி சபை உருவாகி விட்டது.

சென்னையில் அன்று ஏற்பட்ட புதிய மந்திரி சபை பெயரளவில் மாத்திரம் அவ்விதம் இராமல், நாலு பழைய மந்திரிகளுடன் நாலு புதிய மந்திரிகளுக்கு இடம் கொடுத்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

ஸ்ரீ கே. காமராஜ நாடார், ஸ்ரீ எம். பக்தவத்சலம், ஸ்ரீ சி. சுப்பிரமணியம், ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு இந்த நால்வரும் மந்திரி சபைக்குப் புதியவர்கள் அல்ல. ஏற்கெனவே மந்திரி பதவிகள் வகித்து அநுபவம் பெற்றவர்கள். அவர்கள் மீண்டும் மந்திரிகளாகப் பதவி ஏற்றுக் கொண்டிருப்பதைப் பொது மக்கள் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

புதிய மந்திரிகளாகப் பதவி ஏற்றுக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஆர். வெங்கடராமன், ஸ்ரீ பி. கக்கன், ஸ்ரீ வி. ராமையா, ஸ்ரீமதி லூர்தம்மாள் இந் நால்வரும் மந்திரி சபைக்குத்தான் புதியவர்களேயன்றி, மற்றப்படி பல்வேறு துறைகளில் அநுபவம் வாய்ந்தவர்களேயாவர்.

ஸ்ரீ ஆர். வெங்கடராமன் சென்ற நாலு வருஷ காலமாகப் புது டில்லி மக்கள் சபை அங்கத்தினராகத் தமது கடமையைத் திறம்பட நிறைவேற்றிப் புகழ் பெற்றவர். பல பொது ஸ்தாபனங்களிலும், குறிப்பாகத் தொழிலாளர் தலைவர் என்ற முறையிலும் உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் தொண்டு புரிந்தவர். மந்திரி பதவியில் அவரால் பல நன்மைகள் ஏற்படுமென்று பொது மக்கள் எதிர்பார்க்கலாம்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரான ஸ்ரீ கக்கன் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்து பல ஆண்டுகளாகப் பொது நலப் பணியில் அடக்கத்துடன் ஈடுபட்டு வந்தவர். மந்திரி சபையிலும் அவர் தமது கடமைகளைத் திறம்பட நிறைவேற்றிப் பொது மக்களின் அபிமானத்துக்குப் பாத்திரர் ஆவார் என்று எதிர்பார்க்கிறோம்.

மற்றொரு மந்திரியான ஸ்ரீ வி. ராமையா அரசியல் நிர்ணய சபையிலும் காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் பொறுப்பான ஸ்தானங்களை வகித்தவர். அவரது அநுபவமும் திறமையும் நிதானமும் மந்திரி பதவியைப் போற்றத்தக்க முறையில் வகிப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறோம்.

புதிய மந்திரி சபையில் பெண் குலத்துக்கு இடமில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இடம் கொடுக்காமல் ஸ்ரீமதி லூர்தம்மாள் நியமிக்கப்பட்டிருப்பது விவேகமான காரியமாகும். கன்யாகுமரியில் பிறக்கும் பாக்கியம் பெற்ற ஸ்ரீமதி லூர்தம்மாள், பெண்மணிகள், குழந்தைகள் நலப் பாதுகாப்பிலும் மாதர் சங்கங்களிலும் அக்கறை கொண்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர். அவர் தமது பதவி காலத்தில் பெண்கள், வருங்காலப் பிரஜைகளான குழந்தைகள் நலனுக்காகப் பல நல்ல காரியங்களைச் செய்து புகழ்பெற வேண்டுமென விரும்புகிறோம்.

பொதுமக்கள் வரவேற்கத்தக்க முறையில் ஒரு நல்ல மந்திரி சபையை அமைத்துள்ள முதன் மந்திரி ஸ்ரீ காமராஜரைப் பாராட்டுகிறோம். தேர்தலில் நடந்துவிட்ட அக்கிரமங்களை மறந்து புதிய மந்திரி சபையை மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

பேராசை கொண்ட கொள்ளை

அரியலூரில் ஏற்பட்ட ரயில் விபத்தின் பயங்கரமான விவரங்கள் மக்கள் மனத்திலிருந்து அகலுவதற்குள், மற்றொரு கோரமான விபத்து பொதுமக்களைத் திடுக்கிடச்செய்திருக்கிறது. பத்ராசலத்தில் ஸ்ரீராமநவமி உற்சவத்தைக் கண்டு களித்து விட்டுத் திரும்பிய பக்தர்கள் கோதாவரி நதியைக் கடந்தபோது படகுகள் கவிழ்ந்து வெள்ளத்துக்குப் பலியானார்கள் என்ற செய்தியைக் கேட்டவர்கள் பதைபதைத்து விட்டார்கள். அக் கொடுமையை, கோதாவரி வெள்ளம் கொண்ட கொள்ளை என்று கூறுவதைக் காட்டிலும் பேராசை கொண்ட பெரும் கொள்ளை என்று கூறுவதே முற்றிலும் பொருந்தும்.

மேற்படி கொள்ளை அரியலூர் விபத்தைக் காட்டிலும் பலவிதத்திலும் பயங்கரமானது. கோதாவரி படகு விபத்தில் நூறு பேருக்கு மேற்பட்ட பெண்மணிகளும் பல பச்சிளங் குழந்தைகளும் மாண்டார்கள் என்ற செய்தியைக் கேட்டுக் கண்ணீர் வடிக்காதவர்கள் இருக்க முடியாது. அவ்விபத்தில் இருநூறு பேருக்கு மேல் உயிர் துறந்தார்கள்.

அரியலூர் விபத்து பெரிதும் இயற்கையின் உற்பாதம் காரணமாக, அதாவது பெருமழையினால் ஏற்பட்ட விபத்தாகும். ஆனால் கோதாவரி விபத்து முற்றிலும் மனிதனின் மிருகத்தனமான பேராசையினால், அதிகாரிகளின் அசிரத்தையினால் ஏற்பட்டதாகும். பக்தர்களை ஏற்றிச் சென்ற இரண்டு படகுகளில் ஒன்று ஓட்டைப் படகு என்று கூறப்படுகிறது. இது முதல் குற்றம்; திட்டத்துக்கு மேல் மிகவும் அதிகமாகப் பிரயாணிகளைப் படகுகளில் ஏற்றிச் சென்றது இரண்டாவது பெரிய குற்றம்; நடு ஆற்றில் படகுகளை நிறுத்திக் கொண்டு கட்டணம் வசூலிக்க முற்பட்டது மூன்றாவது குற்றம்; வழக்கத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிகக் கட்டணம் வசூலித்துப் பக்தர்களான ஏழை மக்களுக்கு மனக்கொதிப்பை உண்டாக்கியது நாலாவது குற்றமாகும். விழாக் காலங்களில் படகுகளில் திட்டத்துக்கு மேல் அதிகப் பிரயாணிகள் ஏறாமல் கண்டிப்பாகக் கவனிக்க வேண்டியது அதிகாரிகளின் கடமை யல்லவா ?

படகு விபத்து நடந்த இடத்துக்கு நேரில் சென்று பார்த்த ஆந்திர சர்க்கார் கல்வி மந்திரி ஸ்ரீ பட்டாபிராம ராவ் கூறியுள்ள விவரங்கள் எல்லோருடைய மனத்தையும் உருக்குவதாக இருக்கின்றன. படகுகளின் சொந்தக்காரர்களும் அதிகாரிகளும் சிறிது முன்ஜாக்கிரதையாக இருந்திருந்தால், விபத்து நேர்ந்திராது. மூட்டைகள் எதுவுமின்றி 250 பேர்களையே தாங்கும் படகுகளில் 450 பிரயாணிகள் ஏராளமான தங்கள் பெட்டி படுக்கைகளுடன் ஏறி விட்டார்களாம். அத்தனை அதிகப் பிரயாணிகள் ஏறுவதைப் படகு சொந்தக்காரர்களோ, அதிகாரிகளோ ஏன் தடுக்கவில்லை என்பதுதான் விந்தையாகும்.

மன்னிக்க முடியாத மேற்படி குற்றங்களை இழைத்தவர்களுக்கு எவ்வளவு தண்டனை விதித்தாலும் தகும். ஆந்திர சர்க்கார் அவ் விபத்துக்குக் காரணத்தைத் தீர விசாரிக்க வேண்டும். வெள்ளத்தின் மீது குற்றத்தைச் சுமத்தித் தங்கள் கடமையைக் கழித்துக் கொண்டு விடாமல், குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை விதிக்க வேண்டும். அப்படியானால்தான் சம்பந்தப்பட்டவர்கள் எதிர்காலத்திலாவது தங்கள் கடமையை உணர்ந்து ஜாக்கிரதையாக இருப்பார்கள். இனியாவது அத்தகைய விபத்துகள் ஏற்படாமல் தவிர்க்க அதுதான் உற்ற வழியுமாகும்.


முன்னேற்றக் கழகம்

முன்னேற்றக் கழகத்தாருடைய மனமாறுதலைப் பற்றித் தலைவர் ம. பொ. சி. அவர்கள் சந்தேகத்துடன் வரவேற்பு அளித்து எழுதியிருக்கிறார். ஐயப்படுவது இயற்கை. எந்தக் கட்சியினரும் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளும்போது, சந்தேகங்களையும் குற்றங்களையும் பிறர் காண்பது இயற்கை. இது வாழ்க்கை நியதி. ஆனால் அறிவும் நாட்டின் நன்மையில் ஆசையும் கொண்டவர்கள் எல்லாரும் ஒரே முடிவுக்குத்தான் வர வேண்டும் என்பது உண்மையாயினும் பலர் பல வழியாகவும் படிப்படியாகவும்தான் வந்து சேருவார்கள். நாம் கோரும் அபிப்பிராய மாறுதலை எதிர்க்கட்சியாளர்கள் ஒப்புக் கொள்ளும்போது அந்த மனமாறுதலுக்கு உற்சாகமும் உதவியும் நாம் தர வேண்டும். சந்தேகப்பட்டும் பழைய நிகழ்ச்சிகளைக் குத்திக் காட்டியும் வந்தால் நாம் விரும்பும் முடிவுகளை நாமே தள்ளிப் போடுவதாகும். பல காரணங்களினால் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாக நடைபெற்று வரும் ஏதேச்சாதிகாரப் போக்கைச் சட்டசபையில் புகுந்திருக்கும் காங்கிரசைச் சேராத கட்சியாளர்கள் எதிர்த்து வேலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இதற்கு ஜனநாயக உணர்ச்சியுள்ளவர்கள் அனைவரும் மனமுவந்து உதவ வேண்டியது முக்கியமான கடமையாகும்.

மலைச்சாரல் மாதவி

இர்தக் கதையில் பின்னால் வரப்போகும் ஒரு சம்பவம் இவ்வாரம் அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது

நமது மந்திரிகள்



காமராஜ்: சமுதாயநலத்திட்டம்
சி. சுப்பிரமண்யம்: நிதி
பக்தவத்ஸலம்: போலீஸ்
ராமய்யா: மின்சாரம்
ஆர். வெங்கடராமன் போக்குவரவு
லூர்தம்மாள் ஸ்தல ஸ்தாபனங்கள்
கக்கன்: மராமத்து
மாணிக்கவேலர்: வரி வசூல்

விநாயகர் பேட்டி

[நமது அரசியல் நிருபர் அனுப்பு]

"திரு காமராஜரும் அவரது மந்திரி சபை சகாக்களும் இன்று பதவி ஏற்புப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்கள்!" என்று விநாயகரை நோக்கி மூஞ்சூறு கூறவே, "ஆமாம்! அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?" என்று கேட்டார் விநாயகர்.

"வேறு ஒன்றுமில்லை. அந்தக் காட்சியைப் பார்த்து விட்டு வரலாமா...என்பதற்காகவே கேட்டேன்!" என்றது மூஞ்சூறு.

"'வேண்டாம்' 'முடியாது' என்ற வார்த்தைகளைத் தமிழ் வருஷப் பிறப்பு தினமாகிய இன்று நான் உச்சரிக்க மாட்டேன் என்ற தைரியத்திலேதானே இவ்வாறு கேட்கிறாய்? ஹும்! உன் யுக்தியே யுக்தி! கிளம்பு போவோம்!" என்றார் விநாயகர்.

கோட்டையிலுள்ள சர்க்கார் காரியாலயத்தை விநாயகர் அடைந்ததும், "நூற்றுக்கு நூறு பர்சென்டு தமிழ் மந்திரி சபையாகவே அமைத்து விட்டேன். உங்களுக்குத் திருப்திதானே?" என்று கேட்டுக் கொண்டே முதல் அமைச்சர் காமராஜ் எதிர்நோக்கி வந்து கொண்டிருந்தார்.

"விளக்கம்தேவை...!" என்றார் விநாயகர்.

"அதாவது, இதற்கு முன்னெல்லாம் தமிழரல்லாதவர்களுக்கும் மந்திரி சபையில் இடம் தரவேண்டியிருந்தது. இப்போது அந்தத் தொல்லை இல்லை பாருங்கள். இது நமக்கெல்லாம் சந்தோஷத்தைத் தரக்கூடிய காரியம் அல்லவா?" என்று கேட்டார்.

"உண்மைதான். ஆனால்.....!" என்று விநாயகர் கூறி நிறுத்தவும், "என்ன? அப்படி ஒரு 'ஆனால்' போட்டு விட்டீர்களே?" என்று கேட்டார் முதல் மந்திரி.

"தமிழ் மந்திரி சபைப் பதவி ஏற்ற வைபவத்தில் நீங்கள் ஆங்கிலத்தில் பிரமாணம் எடுத்துக் கொண்டது இங்கு வரும் போது என் காதில் விழுந்தது!" என்றார் விநாயகர்.

"நான் ஆங்கிலத்தில் பிரமாணம் எடுத்துக் கொண்டதைக் கூறுகிறீர்களா? நான் என்னவோ ஏதோவென்று நினைத்து விட்டேன். இதெல்லாம் இருக்கட்டும். புது மந்திரி சபை அமைப்பு எப்படி? திருப்திதானே?" என்று வினவினார் காமராஜ்.

"புது வருஷ ஆரம்பத்தில் 'இல்லை' என்ற சொல்லை நான் வெளியிட மாட்டேன். மொத்தத்தில் புது மந்திரி சபையைப் 'புது மந்திரி சபை' என்றும் சொல்ல முடியாமல், பழைய மந்திரி சபை என்றும் சொல்ல முடியாமல் ரொம்பக் கணக்காகத்தான் அமைத்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது!" என்று விநாயகர் கூறவும், "அதைத்தான் கேட்கிறேன். சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று கேட்டார் காமராஜ்.

"பழைமை, புதுமை இரண்டுக்கும் சமத்துவம் கொடுத்திருக்கும் ஏற்பாட்டைத்தான் கூறுகிறேன். எட்டு மந்திரிகளில் தங்களைச் சேர்த்து நால்வர் பழைமை; மற்ற நால்வர் புதுமை..." என்றார் விநாயகர்.

"ஆமாம். 'புதுமை வேண்டும். மாறுதல் வேண்டும்' என்றுதான் மாற்றுக் கட்சிக்காரர்கள் அடுக்குமொழிகளை அள்ளி வீசுகிறார்களே? அவர்கள் இனிமேல் அந்த மாதிரி சொல்லுவார்களானால், புது மந்திரிகளை முன்னால் கொண்டு போய் நிறுத்தி விடலாம் பாருங்கள்! இது மட்டுமா? இலாகா பிரிவினையிலேயும் சில புதுமைகளைச் செய்திருக்கிறேன். நிதி, உள்நாட்டு இலாகா இவ்விரண்டும் இதற்கு முன் ஸ்ரீ சுப்ரமணியத்தினிடமே இருந்து வந்தன. அவற்றைப் பிரித்து ஸ்ரீ பக்தவத்ஸலத்தினிடம் ஒன்றைக் கொடுத்திருக்கிறேன்" என்று காமராஜ் கூறி முடிப்பதற்குள் மூஞ்சூறு குறுக்கிட்டது.

"ஆமாம், ஆமாம். பத்திரிகையில் நானும் படித்தேன். நிதியை ஸ்ரீ பக்தவத்ஸலத்தினிடமும், உள்நாட்டை ஸ்ரீ சுப்பிரமணியத்திடமும்தானே,.." என்றது மூஞ்சூறு.

"இல்லை, இல்லை, தப்பு. நிதியைப் பக்தவத்ஸலத்தினிடம் அல்ல, உள் நாட்டு இலாகாவைத்தான்" என்று விநாயகர் திருத்தினார்.

"நல்லது. விநாயகரே! மந்திரி சபை அமைத்தாகிவிட்டது. அது எப்படி இருந்தாலும் சரி, தங்கள் ஆதரவு வேண்டும்!"

"பேஷாகத் தருகிறேன். ஆனால்...!"

"மீண்டும் ஒரு ஆனலைப் போடுகிறீர்களே, அடாடா! ஏன்?" என்றார் காமராஜ்.

"வேறொன்றுமில்லை. விநாயகராகிய எனக்கும் திரு ஈ. வே. ரா. வுக்கும் அவ்வளவாக ஆகாதென்பது உங்களுக்குத் தெரியாதது அல்லவே? என் ஆதரவைப் பெற்று அவர் ஆதரவை இழக்க நேர்ந்தால்...?"

"ஓஹோ! தேர்தலில் அவர் ஆதரவு அளித்ததைக் கூறுகிறீர்களா? அவையெல்லாம் தேர்தல் சமாசாரங்கள். தேர்தல் முடிந்ததோடு அவற்றை விட்டு மேலே ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டும்!" என்றார் திரு காமராஜ்.

"நேர்மையான நிர்வாகத்துக்கு விநாயகரின் ஆதரவு கேட்கப்படாமலே அளிக்கப்படுவது உண்டு!" என்று கூறி விட்டு விநாயகர் தமது விமானத்தில் அமர்ந்து பறந்தார்.

"போடட்டுமா? போட்டு விடட்டுமா?" என்று ஒரு குரல் வந்தது. எங்கிருந்து வருகிறது என்று விநாயகர் குனிந்து பார்த்தார். கேரளம் தெரிந்தது. ஒரு பெரிய கல்லைத் தூக்கிக் கையில் வைத்துக் கொண்டிருந்த பிரஜா சோஷலிஸ்டுத் தலைவர் ஸ்ரீ பட்டம் தாணுப்பிள்ளைதான் மேற்கண்ட விதம் கத்திக் கொண்டிருந்தார். அவரை நெருங்கி, "யார் மீது இந்தக் கல்லைப் போடட்டுமா என்று கேட்கிறீர்கள்?" என்று கேட்டார் விநாயகர்.

"கம்யூனிஸ்டுசர்க்கார்மீதுதான். ஆமாம்!"

"இதனால் நீங்கள் அடையும் பயன் என்ன?"

"பயன் எல்லாம் பார்த்தால் முடியுமா அரசியலில்? கம்யூனிஸ்டுக் கொள்கைகள் எப்படி எங்களுக்கு முரணானதோ, அவ்வாறே காங்கிரஸ் கொள்கைகளும் முரணானவையாகும். இத்தநிலைமையில், பதவியில்யாரும் அமரவொட்டாதபடி தடுக்க வேண்டியது அவசியமல்லவா?" என்று வினவினார் தாணுப்பிள்ளை.

"அவசியம்தான். தங்களிடமிருந்து நான் கிளம்பவேண்டியதும் அவசியம்தான்!" என்று கூறிவிட்டு விநாயகர் திரும்பினார்.

அன்பார்ந்த நேயர்களுக்கு

சென்ற இரண்டு வார காலமாக அன்பும் பண்பும் கலந்த உற்சாகமான கடிதங்களும், கோபமும் தாபமும் நிறைந்த காரமான கடிதங்களும் நேயர்களிடமிருந்து நமக்கு வந்து கொண்டிருக்கின்றன.

எல்லாம் கல்கியின் விலை உயர்வைப் பற்றித்தான். "நாலு அணாவுக்கு 25 நயா பைசா தானே. நீங்கள் 30 நயா பைசாவாக உயர்த்தி விட்டீர்களே, இது நியாயமா?" என்று சில நேயர்கள் கேட்டிருக்கிறார்கள்.

"சூயஸ் கால்வாய் தகராறுதான் முடிந்து விட்டதே! இனிமேல் தாராளமாகப் பத்திரிகைக் காகிதக் கப்பல்கள் வரலாமே. அதற்காக விலையை உயர்த்த வேண்டியதில்லையே?" என்று சில நேயர்கள் கேட்டிருக்கிறார்கள்.

கல்கியின் விலை உயர்வுக்கான உண்மையான காரணத்தை நேயர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

நயா பைசா நாணய முறை அமுலுக்கு வந்ததால் கல்கியின் விலையை உயர்த்தவில்லை.

சூயஸ் கால்வாயில் ஏற்பட்ட தகராறினாலும் கல்கியின் விலையை உயர்த்தவில்லை.

பின் ஏன் விலையை உயர்த்த வேண்டும்? பத்திரிகை தயாரிப்பதற்கு வேண்டிய பண்டங்களின் இன்றைய விலைவாசிகளின் உயர்வு காரணமாகத்தான் கல்கியின் விலையை மிகுந்த மனவேதனையுடன் உயர்த்த வேண்டி வந்தது. அப்படி விலையை உயர்த்தாமல் தொடர்ந்து நஷ்டப்பட்டுக் கொண்டு பத்திரிகையை நடத்துவதற்குச் சாத்தியப்படாது; அதற்குள்ள வசதியும் நமக்கு இல்லை.

பத்திரிகை தயாரிப்பதற்கு அவசியமாக வேண்டியது "நியூஸ் பிரிண்ட்" என்று சொல்லப்படும் பத்திரிகைக் காகிதம். இந்தக் காகிதத்தின் விலை சென்ற இரண்டு ஆண்டுகளாகவே மாதத்துக்கு மாதம் ஏறிக் கொண்டே வந்திருக்கிறது. இன்னமும் விஷம் போல ஏறிக் கொண்டுதான் போகிறது.

கல்கியை அச்சடிக்க நாம் அதிகமாக உபயோகப் படுத்தும் காகிதம் பின்லாந்து தேசத்தில் தயாராகும் நியூஸ் பிரிண்ட். இந்தக் காகிதத்தின் விலை 1955ம் வருஷம் முற்பகுதியில் பவுண்டு ஒன்றுக்கு ஆறு அணாவாக இருந்தது. அதே வருஷ பிற்பகுதியில் ஆறே கால் அணாவாக உயர்ந்தது. 1956ம் ஆண்டு முற்பகுதியில் ஆறரை அணாவாக ஆயிற்று; அந்த வருஷ இறுதியில் ஆறே முக்கால் அணாவாகி இப்போது பவுண்டு ஒன்றுக்கு ஏழு அணாவில் வந்து நிற்கிறது. இன்னமும் எங்கு போய் நிற்குமோ! எல்லாம் வல்ல இறைவனுக்குத்தான் வெளிச்சம்!

வாரா வாரம் ஒரு லட்சம் பிரதிகள் விற்பனையாகும் கல்கிப் பத்திரிகைக்குக் காகித விலை ஏற்றத்தின் ஒவ்வொரு காலணாவும் சாதாரண விஷயமல்ல; நாளடைவில் பொருளாதார நெருக்கடியை உண்டுபண்ணக் கூடிய மிகப்பெரிய விஷயமாகும்.

சுமார் ஒரு வருஷத்துக்கு முன்பே நமது ஆடிட்டர்கள் 'அபாயச் சங்கை' ஊதினார்கள். பத்திரிகையின் விலையை உடனே உயர்த்த வேண்டும் என்று யோசனை கூறினார்கள். அவர்கள் சொன்னது ஏதோ யூகமாகச் சொன்னதல்ல, கற்பனையில் கூறியதும் அல்ல, கணக்குப் போட்டுப் பார்த்துத்தான் கூறினார்கள். "பத்திரிகைக் காகிதத்தின் விலையும், கூடவே பத்திரிகை தயாரிப்பதற்கு வேண்டிய இதர பண்டங்களின் விலையும் மளமளவென்று உயர்ந்துகொண்டே போகின்றன. கல்கியோ ஒரு லட்சம் பிரதிகளுக்கு மேல் செலவாகிறது. இந்த நிலையில் கல்கி இதழை நாலணாவுக்கே விற்று வந்தால் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவது கஷ்டமாக முடியும்" என்று எச்சரித்தார்கள்.

ஆடிட்டர்களின் இந்த எச்சரிக்கையை ஒரு முறைக்குப் பல முறை பரிசீலனை செய்து பார்த்தோம். வேறு வழி தோன்றவில்லை. ஆகவே கல்கியின் விலையை ஐந்து அணாவாக உயர்த்துவது என்ற முடிவுக்கு வந்தோம். நயாபைசா நாணய முறை அமுலுக்கு வருவதற்குப் பல மாதங்களுக்கு முன்னமேயே செய்யப்பட்ட முடிவு இது. பிறகு நயா பைசா நாணய முறை இந்த ஏப்ரல் மாதம் முதல் அமுலுக்கு வருவதாகத் தெரிந்தவுடன் ஐந்து அணாவுக்குப் பதிலாக 30 நயா பைசாவாக அதாவது நாலே முக்காலணாவாகக் கல்கியின் விலையை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தோம்.

ஆகவே நயா பைசா முறை அமுலுக்கு வந்ததால் கல்கியின் விலை உயரவில்லை.

சில மாதங்களுக்கு முன்பு சூயஸ் கால்வாயில் ஏற்பட்ட தகராறால் நமக்கு வரவேண்டிய பத்திரிகைக் காகிதக் கப்பல்கள் வரத் தாமதப்பட்டன. அப்போது தரம் குறைந்த காகிதத்தைத் தொடர்ந்து சில வாரங்களுக்கு உபயோகப்படுத்த நேர்ந்தது. அதைக் குறிப்பிட்டுத்தான் 31-3-57 கல்கி இதழில் மனம் வருந்தி எழுதியிருந்தோம். விஷயங்களின் சிறப்பை மட்டுமே மனத்தில் கொண்டு காகிதத்தின் தரக் குறைவையும் பொருட்படுத்தாத நமது நேயர்களுக்கு நன்றி கூறி எழுதியிருந்தோம்.

ஆகவே சூயஸ் கால்வாய் தகராறுக்கும் கல்கியின் விலை உயர்வுக்கும் தொடர்பு இல்லை.

மேலே சொன்ன பத்திரிகைத் தாளின் விலையேற்றம் ஒருபுறமிருக்க, அச்சு இயந்திரச் சாமான்களின் விலையும், அச்சடிக்கும் மையின் விலையும், பிளாக்குகள் தயாரிப்பதற்கு வேண்டிய ரசாயனச் சாமான்களின் விலையும்-இப்படியாகப் பத்திரிகை தயாரிப்பதற்கு வேண்டிய ஒவ்வொரு பொருளின் விலையும் நாளுக்கு நாள் ஏறிவிட்டது.

கல்கியின் விலை உயர்வுக்கும் நயா பைசா நாணய முறைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் இந்த நயா பைசா முறையினாலும் ஒரு சிறு குழப்பம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது.

முன்பெல்லாம் ஒரு ரூபாய்க்கு 64 கல்கி பிரதிகள் தபாலில் அனுப்ப வசதியிருந்தது. நயாபைசா முறை அமுலுக்கு வந்த பிறகு அதே ரூபாய்க்கு இப்போது 50 கல்கி பிரதிகள் தான் அனுப்பலாம். ஒரு வாரத்துக்குச் சுமார் முப்பதினாயிரம் கல்கி பிரதிகளைத் தபால்

மூலம் அனுப்பி வருகிறோம் என்பதையும் நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

''நாலணா விலையுள்ள இதர பத்திரிகைகள் இன்னமும் 25 நயாபைசாதானே வைத்திருக்கின்றன. நீங்கள் மட்டும் அவசரப்பட்டு எங்கள் கல்கிப் பத்திரிகையின் விலையை 30 நயாபைசாவாக உயர்த்தி விருப்பது விந்தையாக இருக்கிறதே'' என்று உரிமையுடன்கேட்டுச் சில நேயர்கள் வியப்படைந்திருக்கிறார்கள்.

ஒரு பழைய சம்பவத்தையும் இந்தச் சமயத்தில் நேயர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறோம். 1941-ம் வருஷம் கல்கிப் பத்திரிகையை நாம் தொடங்கிய போது அதன் விலை இரண்டணாவாகத்தான் இருந்தது. பிறகு இரண்டாண்டுக்குள் பத்திரிகையின் விலையை இரண்டரை அணாவாகவும், மூன்று அணாவாகவும், பின்னர் நான்கு அணாவாகவும் உயர்த்தினோம். அதற்குப் பிறகு மற்றவர்களும் உயர்த்தினார்கள்.

கல்கியின் விலையை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் அதன் உண்மைக் காரணத்தை நேயர்களுக்கு எடுத்துச் சொல்லி மிகுந்த மன வருத்தத்துடன்தான் கல்கியின் விலையை 30 நயா பைசாவாக, அதாவது நாலே முக்காலணாவாக உயர்த்தியுள்ளோம்.

பத்திரிகைத் தொழில் சம்பந்தமான சாமான்களின் விலை குறைந்து பத்திரிகையைக் குறைந்த விலையில் விற்கும் நிலைமை ஏற்பட்டுக் கல்கியைக் குறைந்த விலைக்கு விற்கும் பொற் காலத்தை அன்பார்ந்த நேயர்களுடன் சேர்ந்து நாமும் எதிர்பார்க்கிறோம்.

ஒரு புறம் கல்கியின் விலை உயர்வைக் கண்டித்துக் கோபமும் தாபமும் வருத்தமும் கொண்டு பல நேயர்கள் எழுதியிருப்பது போலவே, மற்றொருபுறம் உலகத்தின் இன்றைய நிலையை நன்றாக உணர்ந்த எண்ணற்ற நேயர்கள் கல்கியின் ஐந்து நயா பைசா விலை உயர்வை மனமுவந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

''இதர பல பொருள்களின் விலை உயர்வுடன் கல்கிப் பத்திரிகையின் விலை உயர்வை ஒப்பிட்டுப் பார்த்தால் அப்படி ஒன்றும் அதிகமில்லை'' என்று அவர்கள் குதூகலத்துடன் எழுதி யிருக்கிறார்கள்.

நாம் எதிர்பார்த்ததற்கு மேல் நேயர்கள் கல்கிப் பத்திரிகையிடம் காட்டி யிருக்கும் அளவற்ற அன்புக்கும் ஆதரவுக்கும்,

புத்தம் புதுமலர்கள் பூக்குமே வண்டினங்கள்
சித்தம் மகிழ்ந்துண்ணச் சேருமே—நித்தமும்
பல்கிவரும் பசுந்தமிழ்ச் சோலையாம்
'கல்கி' படர்ந்து வருங்கால்

என்ற கவிமணி அவர்களின் பாடலை நினைவு கூர்ந்து பரிவுடன் எழுதி யிருக்கும் அன்பர்களுக்கும் எமது நன்றி.

வணக்கம்,

— ஆசிரியர்

ஆகாச வெடி

'' குடந்தை நகரசபைக் கூட்டத்தில். ஒரு அங்கத்தினர் வீட்டுக்கு ஒரு கொசுவலை வாங்கிக் கொடுத்து விட்டால் கொசுக் கடித் தொல்லை தீரும் என்று வெளியிட்ட யோசனை நிராகரிக்கப்பட்டது.''

— பத்திரிகைச் செய்தி.

மேற்படி யோசனை வலையில் நகரசபை விழுந்து விடாததைப் பாராட்டிக் கொசுக்கள் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறுமானால் ஆச்சரியமில்லை!

★

''நன்றாக எரியக்கூடிய நிலக்கரி கிடைப்பதில்லை. இதனாலேயே பல ரயில் வண்டிகள் நேரப்படி ஓடுவதில்லை.''

— உதவி ரயில்வே மந்திரி

''எங்களுடைய கண்ணில் விழும் நிலக்கரி மட்டும் நன்றாக எரிகிறதே. அவை எங்கிருந்து கிடைக்கிறது?'' என்று வினவுகிறார் ஒரு ரயில் பிரயாணி.

★

''ஆண்டு ஒன்றுக்குப் பல்லாயிரக்கணக்கான உயர்தர மூக்குக் கண்ணாடிகளை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையைப் பீஹாரில் அமைக்க முடியும் என்று, சோவியத் கோஷ்டி ஒன்று இந்திய சர்க்காருக்கு அறிவித்திருக்கிறது.'' **—தினசரி.**

தொழில் துறையில் தமிழ் நாடு பின்தங்கி யிருப்பது மத்திய சர்க்காருக்குப் புலனாகாதிருப்பதன் இரகசியம், அவ்வித உயர்தர மூக்குக் கண்ணாடி இல்லாததன் பயனாக இருக்கலாமோ?

★

'' சிறைச்சாலைகள் ஆஸ்பத்திரிகளாக விளங்க வேண்டும்.'' **—கேரள மந்திரி**

ஆஸ்பத்திரிகளிலிருந்து விடுதலைபெறுவது சில சமயங்களில் கலபத்தில் முடிவதில்லை என்பது அவருக்குத் தெரியாது போலும்!

★

'' நான் குழந்தையா யிருந்தது முதல் கொண்டிருந்த ஓர் ஆசை நிறைவேறிற்று!'' என்று கல்கத்தா மிருகக்காட்சி சாலையில், யானை மீது சவாரி செய்யும் போது போலந்துப் பிரதமர் கூறினார். **—செய்தி.**

''இதற்கு இவ்வளவுகாலம் காத்திருப்பானேன்? என்னைப் போல் மாமன் முதுகில் யானை சவாரி எவ்வளவு வேண்டுமானாலும் அவரும்செய்திருக்கலாமே!'' என்கிறான் ஒரு வாண்டுப் பையன்.

Pan-Cake gives your beauty that exciting *plus* called glamour

the one and only

PAN-CAKE*

MAKE-UP by


MAX FACTOR

HOLLYWOOD

*Pan-Cake (trademark) means Max Factor Hollywood Cake Make-Up



IDA LUPINO
in RKO'S
"WHILE THE CITY SLEEPS"



GLORIOUSLY, It Reveals The True Beauty Of Your Own Natural Colorings

BEWITCHINGLY, It Veils Your Complexion With The Soft, Alluring Velvet Finish That Only Pan-Cake Can Create

Available at all Leading Cosmetic and General Stores

SOLE AGENTS IN INDIA: ORIENT COSMETICS PRIVATE LTD., MADRAS, BOMBAY, CALCUTTA.



11. உடற்பயிற்சி

"எங்கேடா போய் வருகிறாய்? தினந்தோறும் காலை மாலை இரண்டு வேளைகளிலும் தலை தெறிக்க இந்த வழியே போவதையும் — மறுபடியும் திரும்பி வருவதையும் பார்க்கிறேன். எங்கேயாவது வேலை..?"

"வி..வி..வியா..யா..ம மண்டல்போய்.....வவ்.."

"வியாயாம மண்டலா? அதென்னடா அது? புதுசா என்னமோ சொல்கிறாய்!"

"புபுப்புபுதுசி...இல்..ல்..லேஸார் ஒவ்..வொரு வர்ஷமா....ஆ....ஆ.. போறேன்..."

இது கற்பனையில் விளைந்த சம்பாஷணையல்ல. உண்மையிலேயே ஒருநாள் எனது நண்பர் ஒருவரின் மகனுடன் சம்பாஷித்ததின் ஒரு பாகம்.

எண்ணெய் தேய்த்துக் கொண்ட பின், எண்ணெய் உடம்பில் சிறிது தேகாப்பியாசம்—தேகப் பயிற்சி செய்வது ஆரோக்கிய நிலையிலுள்ளவருக்கு ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ள வகுக்கப்பட்ட தினசரி திட்டத்தில் ஒன்று. இதனால் நன்மையுண்டு.

உடல் இலேசாக இருத்தல், சிலருக்குத் தன்னுடல் தனக்கே பாரமுள்ளதாய்த் தோன்றுவதுண்டல்லவா? அவ்விதம் தோன்றுவதற்கு மாமிசம், மேதஸ் என்னும் கொழுப்பு ஆகியவை உடலில் அதிகரிப்பதுதான் காரணம். உடற் பயிற்சி செய்வதால் இந் நிலைமை உண்டாக வொட்டாது தடுக்கலாம். ஏற்கெனவே வந்தவர்களுக்கும் உடல் பாரம் குறைய உடற் பயிற்சி உதவும்.

இரண்டாவதாகக் குனிந்து நிமிர்ந்து சுருசுருப்புடன் வேலை செய்யும் வண்ணம் தேக நிலை ஏற்படும். மூன்றாவதாக நல்ல பசி யுண்டாகும். 'கல்லைச் சாப்பிட்டு ஜரிக்கும் வன்மை' என்பார்களே அந்நிலை உண்டாகும்.

வீண் பருமன் குறையும்—மேதஸ் என்னும் கொழுப்பு கரையும்.

கட்டுக் கட்டாய்த் தசைப் பற்றுகளுடன் இறுகிய சரீரம் முறுக்கேறிய கயிறுபோல் துலங்கும். தேக பலம் அதிகரிக்கும்.

"......பலம் பரவு மெய்யிறுகும் பன்னத் துலங்குபசி
யுண்டாம் : கபவாதமோடு வளி சூலையும் போம்
பண்டா மலமிறங்கும் பார்"

என்றபடி பழைய மல சந்தமும் நீங்கும்.

இவ்வளவு நன்மைகள் ஏற்படுமாயினும் எல்லோருமே தேகப் பயிற்சி செய்யலாகாது. ஆரோக்கிய நிலையிலுள்ளவர், போதுமான தேக பலமும் பெற்றவர், நெய் பால் போன்ற ஊட்டம் மிக்க, கொழுப்புச் சத்துள்ள ஆகாரங்களை ஏற்பவர் உடற் பயிற்சியையும் தினசரி திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம். அதுவும் ஒரளவு மட்டுந்தான் உடற் பயிற்சி ஏற்கத் தக்கது. நெற்றிப் பொட்டு, மார்புக்குழி, கக்கம் இங்கெல்லாம் சிறிது வியர்வை தென்படத் தொடங்கும் வரையில் இப் பயிற்சிகளைச் செய்து—அவ்விதம் வியர்வைத் துளிகள் தென்பட்ட உடனே உடற் பயிற்சியை நிறுத்திவிட வேண்டும். மேற்சொன்ன இனத்தோரும் மேற் சொன்ன அளவோடு ஹேமந்தம், சிசிரம்—வஸந்தம் என்ற ருதுக்களில் தான் செய்யலாம். அதாவது முன்பனிக் காலம் (மார்கழி, தை,) பின் பனிக் காலம் (மாசி, பங்குனி,) இளவேனிற் காலம் (சித்திரை, வைகாசி,) என்னும் பருவங்கள் (மாதங்கள்). மற்றுள்ள காலங்களில் செய்யக் கூடாது.

அளவுக்கு மீறி உடற்பயிற்சி ஏற்பது 'ஸாகஸம்' எனப்படும். ஆரோக்கிய நிலையிலில்லாதவர், ஊட்டமான ஆகாரம் ஏற்காதவர் உடற் பயிற்சி ஏற்பது சாகஸமாகும். முதுவேனில், கார், கூதிர்க் காலங்களில் உடற் பயிற்சி ஏற்பதும் ஸாகஸந்தான். இரவில் கண் விழித்தல், உடல் தளர்ச்சி ஏற்பட்ட பிறகும் பலாத்காரமாக மேன்மேலும் வழி நடத்தல், பளு வெடுத்தல் போன்ற தேக இளைப்பை அதிகரிக்கும் வேலைகளில் ஈடுபடுதல், அமிதமான அப்ரஹ்மசர்ய மேற்றல், அமிதமான கேளிக்கைகள், ஹாஸ்யங்கள், பேச்சு சொற்பொழிவாற்றல் ஆகியவை யெல்லாம் சாகஸங்களாகும். இச் சாகஸங்களால் திருஷ்ணை என்னும் அடங்காத தாகம்-வேட்கை-ரோகம், க்ஷயம், ரத்தம் துப்புதல், அல்லது ரத்தமாக வாந்தி யெடுத்தல், தீராத ஒய்ச்சல், மனத் தளர்ச்சி, ஜ்வரம் ஆகிய கொடிய வியாதிகள் ஏற்படலாம். ஆகவே கட்டுரையின் ஆரம்பத்தில் பிரஸ்தாபிக்

கப்பட்ட நபரின் போக்கை என்ன வென்பது என்ற கேள்வி எழலாம். இவர்கள் பொதுவிதிக்கு விலக்கானவர் என்றுதான் சொல்ல வேண்டும். இவ்விதம் பழக்கப்படுத்திக் கொண்டதால் இவரைப் பொதுவிதியைக் கடைப்பிடிப்போருடன் ஒப்பிட்டுப் பார்த்து விடலாகாது.


உடற் பயிற்சி ஏற்கத் தக்கவர், உரிய காலத்தில் குறிப்பிட்ட அளவோடு ஏற்ற பிறகுதான், முந்தின கட்டுரையில் தெரிவித்தபடி ஸ்நானம் செய்ய வேண்டியது.

பிறகு உற்ற காலத்தில் இதமான, ஆகாரத்தை அளவோடு புசித்தல் வேண்டும். ஆகார விஷயத்தை ஒரு தனிக் கட்டுரைக்காக நிறுத்திக் கொண்டு கல்கி வாசகருள் ஓரிருவருடைய கடிதங்களைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறேன். அதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

டில்லி வாசகர் ஒருவர் (கடிதம் 75) பல் துலக்கல் என்ற 7-4-57 கட்டுரையைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதி, தனக்குப் பல்லை அழுத்தித் தேய்க்கும் பொழுது ரத்தம் வருவதைப் பற்றியும் எழுதி, அந்த மாதிரி வருவதைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டிருக்கிறார்.

பல்லைப் பற்றியும், பல்லில் வரும் வியாதிகளைப் பற்றியும், அவற்றுக்குள்ள பரிகாரங்களைப் பற்றியும் தனிக் கட்டுரை காலக்கிரமத்தில் வரும். அதற்குள் நண்பரின் பரபரப்பு அதிகமாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால்


நிகழ்ச்சிச் சித்திரம் —



அக் கட்டுரை வரும் வரையில் நண்பர் நோயைச் சகித்திருக்க வேண்டுமா?

பல்லீரல் மிருதுவாகி விடுவதால் இவ் விதம் ஏற்படுகிறது என்று தற்போது தெரிந்தால் போதுமே. புங்கம் பட்டையை இடித்து, ஜலம் தெளித்து, மேலும் இடித்து ஜலம் விட்டுக் கஷாய மாகக் காய்ச்சிக் கொள்ளவும். 2¼ பலம் பட்டைக்கு ஒரு படி ஜலம் விட்டு ¼ படி கஷாயமாகக் காய்ச்சிக் கொள்ள வும். இதில் கடுக்காய்த் தோல் ¼ பலத்தை அரைத்துக் கல்க்கமாய்க் கூட்டி 5 பலம் நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி, கல்க்கம் மெழுகு பதமாகிக் கையில் ஒட்டாமல் உருட்ட வரும் பாகத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும். இதற்குப் புங்கந்தைலம், கரஞ்ஜாதி தைலம் என்று பெயர். இத் தைலத்தில் பஞ்சை நனைத்துப் பல்லீறு களின் மேல் பூசி, தடவித் தேய்க்கவும். சற்று நேரம் இவ்வாறு பஞ்சினால் தேய்த்திருந்து பிறகு வெந்நீரினால் வாயைக் கொப்பளிக்கவும். அல்லது இத் தைலத்தில் சிறிதளவு வாயில்விட் டுக் கொண்டு கொப்பளித்துக் கொப் பளித்துத் தைலமும் எச்சிலுமாய் வாய் நிறைந்தபின் துப்பி விட்டு மேற் சொன்ன விதம் வாயைக் கொப்பளித் துச் சுத்தமாக்கிக்கொள்ளவும். இதனால் பல்லீறு கெட்டிப்படும். பல்லாட்டம் நிற்கும். ஈறுகளில் சீழ் பிடித்தல் முதலியவை உண்டாகாது. ஆகவே வாயிலுள்ள துர்க்கந்தம் மாறும். பல் சுத்தமாகப் பிரஸ்தாபக் கட்டுரையில் சொன்ன பற்பொடியை உப யோகிக்கவும். (தொடரும்)

— விஜி



மக்கள் மனத்தில் நிறைந்து விட்டார்

தேடிப் பெற்ற திரண்ட செல்வத்தை யெல்லாம் கல்விப் பணிக்கு நாடி வழங்கிய கொடை வேந்தன் பத்மபூஷண் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களின் சடலம் சுமந்து வந்த வாகனம் 6-4-57 அன்று ஒரு மணிக்குக் கோட்டையூரை அடைந்தது. டாக்டர் செட்டியாரின் பூர்வீக வீட்டுக்குச் சடலத்தைக் கொணர்ந்ததும் ஓலமும் கூக்குரலும் விண்முட்ட எதிரொலித்தன.

6-4-57 அன்று டாக்டர் செட்டியாரின் பிறந்த நாள். தமது நாற்பத்தெட்டாம் வருட நிறைவோடு கண் மூடி விட்டார். பிறந்த நாள் விழாவில் வாழ்த்திப் பல்லாண்டு பாட இருந்த உள்ளங்கள், அவரைக் கால விடம் பறி கொடுத்துப் பிரலாபித்துப் புலம்ப நேர்ந்து விட்டன.

அன்று அதிகாலையில் வீட்டில் நடைபெற வேண்டிய இறுதிச் சடங்குகள் அனைத்தும் முடிந்தவுடன் கொடை வள்ளல் அழகப்ப செட்டியாரின் திருமேனி பிரும்மாண்டமான வாகனத்தில் கிடத்தப்பட்டது.

அழகப்பரின் பொன்னுடல் சுமந்த வாகனம் வான ரதம் போலிருந்தது; நல்லவர் ஒருவரைத் தன்பால் இணைத்துக் கொண்ட இறைவனின் அருள் அந்த வான ரதத்தைச் சூழ்ந்துவருவது போன்ற தேஜஸ் மிருந்தது. கல்லூரி மாணவர்களும், பேராசிரியர்களும், பெருமக்களும் வடம் தொட்டிழுக்க வள்ளலது புகழ் வளர்ந்த பொன் உடல் புறப்பட்டது. அவரது விருப்பப்படி, அவருக்கு மிகவும் பிடித்த பவநகர் விளையாட்டுத் திடலுக்கு எதிரில் தகன மேடை அமைக்கப்பட் டிருந்தது.

காலை ஏழு மணியிலிருந்தே பவநகர் ஸ்டேடியத்தில் மக்கள் கூட்டம் பெருகத் தொடங்கியது. கல்லூரிமாணவர்கள் பேராசிரியர்கள், பொது மக்கள் எனத் திரள் திரளாக மக்கள் கூடினர். ராணுவ வீரர்களும், போலீஸ் காரர்களும் அணிவகுத்து நின்றனர். அரசாங்க அலுவலர் முதல் மதகுருக்கள் வரை எல்லா வகை மக்களும் ஒருசேரக் குழுமியிருந்தனர். மலர் மாலைகளும் மலர் வளையங்களும் ஏந்தி அணி அணியாக நின்றனர். மக்கள் மனத்தில் ஏக்கமும் சோகமும் கொந்தளித்துப் பெருகின.

பவநகர் ஸ்டேடியத்தில் சர்வோதய பஜனை நடந்து கொண்டேயிருந்தது. தேவாரத் திருவாசகப் பாடல்கள் ஓதப் பெற்றன. சிவ புராணத்தைச் சிந்தையுருகப் பாடினார்கள். 'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க' என்ற வழிபாட்டுக் குரல் சோகப் பின்னணியோடு இசைந்து ஒலித்தது.


காரைக்குடி நகரிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலுமிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்தனர். பாண்டு வாத்தியங்கள் முழங்க மாபெரும் மௌன ஊர்வலமொன்று காரைக்குடி நகரிலிருந்து புறப்பட்டு ஸ்டேடியத்தை அடைந்தது.

இதற்குள் தகன மேடையில் எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. மேடைமீது சந்தனக் கட்டைகளும், அகில் கட்டைகளும் இதர மணப் பொருள்களும் பரப்பப்பட்டன. வெள்ளம்போல் திரண்ட கூட்டம் வெட்ட வெளியெங்கும் பரவி நின்றது.

ஸ்டேடியத்திலிருந்து டாக்டர் அழகப்ப செட்டியாரின் திருவுடலம் தகனமேடைக்குக் கொண்டுவரப்பட்டது. வழியெல்லாம் மலர் மாரி பொழிய வந்து முடிந்தது, இறுதி யாத்திரை. டாக்டர் செட்டியாருக்குத் தமது இறுதி மரியாதைகளைப் புலப்படுத்திக் கல்லூரி முதல்வர்களும், பேராசிரியர்களும், அரசியற் கட்சித் தலைவர்களும், இதர தொழிற் ஸ்தாபனத்தவர்களும், இயக்கத்தவரும், பல சங்கச் சார்பினரும் பேசினர். செட்டியார் அவர்களின் இதயம் இனிக்கப் பழகிய நண்பர்கள் கையறு நிலையில் கலங்கினர். இதரர் பேசினர்.

இறுதியாக அவருடைய பூதவுடலும் புகையாகப் போகும் நேரம் நெருங்கி விட்டது. சிதையில் சடலம் கிடத்தப்பட்டது. கடைசி முறையாக அனைவரும் கண்களைக் குளமாக்கித் தரிசித்தனர். வள்ளலின் உடல் சந்தனக் கட்டைகளின் மீது கிடத்தப்பட்டது. வைக்கோலுக்குப் பதிலாக விலாமிச்சை வேர் பரப்பப்பட்டது. மண்ணுக்குப் பதிலாகப் பன்னீரால் குழைத்த சந்தனம் பூசப்பட்டது. வள்ளல் அழகப்பாவின் சகோதரர் குமாரர் இறுதிக் கிரியைகளை நிறைவேற்றினர்.

டாக்டர் அழகப்ப செட்டியார் நரியுலவும் பொட்டலில், நற்கலைகள் பல வளர்த்தார். கள்ளிப் புதர்க் காட்டில் கலைப் பயிர் செழிக்க வளர்த்த கார்முகில் ஆனார். அந்தக் கலைக் கார்முகில் தான் ஈன்ற கலைநிலையங்களோடே காற்றில் கலந்து விட்டார். மக்கள் மனத்தில் நிறைந்து விட்டார். —க. குழந்தைநாதன்



வள்ளல் அழகப்பரின் கவர்ச்சிகர தோற்றம்

ஈழநாட்டுப் பிரயாணம் (15)

பாடுகின்ற



"புத்தம் சரணம் கச்சாமி!" என்று இனிய குரலில் பாடியது தாமரை மலர். "ஓம்! நமோ நாராயணா!" என்று ராகம் இழுத்தது செம்பரத்தை மலர். "ஓ! முருகா! போற்றி!" என்று நெஞ்சுருகிப் பாடியது இருவாட்சி மலர். "குட்மார்னிங்! ஹவ் டு யுடு!" என்று வாய்திறந்து கீதம் இசைத்தது சிறுவை மலர். இன்னும் எத்தனை எத்தனையோ விதமான மலர்கள் என்னென்னவோ விந்தை மொழிகளில் அற்புதமாகப் பாடிக் கொண்டிருந்தன. ஆமாம்! தலையை ஆட்டிக் கொண்டு பாடுவது போல்தான் அந்த வண்ண மலர்கள் எல்லாம் தோற்றமளித்தன. ஆனால் வாயைத் திறக்கவும் இல்லை; இனிய குரல் எடுத்துப் பாடவும் இல்லை. இயற்கையின் விந்தைகளில் மலர்கள் காட்டும் ஜாலங்கள் இப்படித்தான். வாயைத் திறப்பது போலவும் பலவிதமான ராகங்களில் பாட்டுகள் பாடுவது போலவும் காணப்படும்; கடைசியில் பாடாமல் ஏமாற்றிவிடும்.

நன்றாய்க் கவனியுங்கள். அந்த நீல ரோஜாமலர், பச்சை ரோஜா மலரைப் பார்க்கிறது. அந்தப் பார்வையில்தான் காதல் எப்படித் துள்ளி விளையாடுகிறது! இதோ வெள்ளை ரோஜா, மஞ்சள் ரோஜாவை நூண்டுவரும் இன்ப வெறியுடன் முத்தமிட அல்லவா நெருங்குகிறது! ஆகா! அதோ முல்லை தன் முத்துப் போன்ற பற்களைக் காட்டிக் கொண்டு தன்அருகில் இருக்கும் மல்லிகையைப் பார்த்துக் கண் சிமிட்டுகிறது! தேனில் விழுந்த வண்டுபோல ஆவலுடன் தழுவிக் கொஞ்சுகிறது! இதோ கொன்றை மலர்கள் கும்பல் கும்பலாகக் கூடி நின்று குலவி மகிழ்கின்றன! என்ன விந்தையோ! மாயாஜாலமோ! இந்த மலர்கள் எல்லாம் திடீர் என்று மறைந்து விடுகின்றன!

நம் கண் முன்னே வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாத விந்தைக்காட்சி தோன்றுகிறது! ஆசைக் கடலின் அமுதம்போல மலர்கள் எல்லாம் இளம் மங்கைகளாக உருவம் பெற்று விட்டன! மலர்கள் பெண் உருக்கொண்டால் அவர்கள் அழகை எந்த மொழியில் இயம்புவது? மலர் மங்கைகளின் கண்கள் ஆளை விழுங்கும் அதிசயத்தைச் சொல்வதா? மருளுகின்ற அந்தக் கரு விழிகளில் மிதந்த காதல் கவிதைகளைச் சொல்வதா? தூய சுடர் முத்தைப் போன்ற பற்களில், கனி இதழ்களில் பாய்ந்த நிலவினைக் கூறுவதா? இந்தத் தேனினியாளின் திருக்கூட்டத்தின் அழகினில் மயங்கி அவர்கள் அருகில் நம்மை யறியாமலேயே நெருங்குகிறோம். "ஐயா! தொடாதீர்!" என்று அதட்டும் குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிற்கிறோம்.

இதுவரையில் எதிரில் இருந்த அந்தப் பெண்தெய்வங்கள் மறைந்து விட்டனர். ஆங்காங்கு கொத்துக் கொத்தாய்ப் பூத்துக் குலுங்கும் மலர்க் கூட்டத்தைத்தான் பார்க்க முடிந்தது. "மலர்களைப் பறிக்காதீர்கள்!" என்று சொல்லிக் கொண்டு எதிரில் வந்து நின்ற தோட்டக்காரரைப் பார்த்தபோதுதான், "கக்கலைப் பூந்தோட்டத்துக்குள் நிற்கிறோம். இந்தத் தோட்டத்து அற்புதப் பூக்களின் அழகில் தோன்றிய ஈடறியா விந்தைக் காட்சிகள்தான் இதுவரையில் தோன்றியவை" என்ற உணர்வு ஏற்பட்டது.

கக்கலைப் பூந்தோட்டத்துக்குள் இருந்த ஒருசில மணி நேரத்தில் தான் மலர்கள் பாடும், பேசும், உறவாடும், காதல் புரியும், பலவித உருவங்களில் மாறி மாறித் தோன்றி மனத்தை மயக்கும் என்பதை யெல்லாம் தெரிந்து கொண்டோம்.

*** *** *** ***

மலர்கள் பாடுகின்ற இந்த அதிசயமான மலர் வனத்துக்குப் போகும்போது ஏற்பட்ட பிரயாண அநுபவங்களை இப்போது நினைக்கும் போதுகூட ஒரு பக்கம் திகைப்பாகவும் இன்னொரு பக்கம் இரக்கமாகவும் இருக்கிறது.

திசைமாறுமையிலிருந்து கார் புறப்பட்டது. 'விர்' 'விர்' என்று காரின் வேகத்தால் காற்று வீசியது. அசுர வேகத்தில் கார் செல்வதால் புதுப் புது காட்சிகள்

மலர்கள்

நம் கண்முன்னே தோன்றித் தோன்றி மறைகின்றன. அந்தக் காட்சிகள் நமக்குப் புதுப் புது இன்பத்தை அளித்து மகிழ்வூட்டுகின்றன.

நடந்து செல்வதற்கும் காரில் செல்வதற்கும் ஒன்றுக்கு ஒன்று முரணான இரண்டு அனுபவங்கள் நமக்கு ஏற்படுகின்றன. நடக்கும்போது நாம் காட்சிகளை நோக்கிச் செல்கிறோம். காரில் செல்லும்போதோ காட்சிகள் நம்மைத் தேடி ஓடி வருகின்றன. இதனால் நமக்குப் பிரயாண அலுப்பு தோன்றுவதில்லை. சுற்றுப்புறக் காட்சிகளின் அழகில் மயங்கி அதன் சுவையை ரஸித்து அநுபவிப்பதிலேயே பொழுதைப் போக்கி விடுகிறோம்.

நுவரேலியா செல்லும் சாலையில் இயற்கைத் தேவி பச்சை நிற உடை அணிந்த காடுகளாக இருபுறமும் நின்று முறுவல் செய்து கொண்டிருந்தாள். நாம் அவள் அழகைப் பார்த்துக் களிக்கிறோம். இந்த இன்ப அனுபவத்தை எழுத்திலே வடிக்கும்போது அது இலக்கியமாக, கலையாக மாறி நம்மை மீண்டும் இன்பத்தில் ஆழ்த்திவிடுகிறது.

''ஆமாம். எங்கோ பார்க்கும் காட்சிகளை எடுத்துக் கூறுவதால் யாருக்கு என்ன பிரயோசனம்? ஒருவாய் சோற்றுக்கு அதனால் வழியுண்டா?'' என்று சிலர் கேட்கலாம்.

சரியான கேள்விதான். இதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே நமது பெரியோர்கள் மறுமொழி கூறி வைத்திருக்கிறார்கள். நல்ல உவமையோடு வெகு அழகாக எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

ஒரு கிளையின்மீது இரண்டு பறவைகள் அமர்ந்திருக்கின்றன. அதில் ஒன்று கனியைச் சுவைத்துத் தின்கிறது. மற்றொன்று அதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறது. பார்க்கும் பறவையின் ஆனந்தம் இருக்கிறதே அது எல்லையற்றது; கட்டுக் கடங்காதது. கலப்பற்ற மகிழ்ச்சியைக் கொடுக்க வல்லது.

பிரயாண இன்பமும் இதுபோலத்தான். பிரயாணத்தில் காணும் காட்சியோ, பொருளோ முக்கியமல்ல. காணுகின்ற கண்கள்தான் முக்கியம். பிரயாணம் செய்து செய்து, பலவித அனுபவங்களைப் பெற்றுப் பல விஷயங்களைக் கண்ட கண்களை யுடையவர்கள் சிந்தனையில் எத்தனையோ எண்ணங்கள் ஏற்படும். அப்படிப்பட்டவர்கள் 'காட்சிகள் எவ்வாறு நிகழ்கின்றன? எவ்வாறு நிகழ வேண்டும்? எவ்வாறு நிகழ்ந்தால் மனத்துக்கு இன்ப மளிக்கும்?' என்பதைப் பற்றி ஆராய்வார்கள். அப்படி ஆராய்ந்து அதன் சுவையை வெளியிடுபவர்கள்தான் கலைஞர்கள். அவர்கள் சிந்தனைகளில் உண்டாகும் கருத்துக்கள்தான் அழியாத அமர இலக்கியம்.

இவ்வாறு பிரயாண இன்ப ரகசியங்களைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டே சென்ற போது இரு புறங்களிலும் கண்ட குரங்குக் கூட்டங்கள் பேச்சைத் தடை செய்தன. கூட்டம் கூட்டமாகக் குரங்குகள் கூனிக் குந்தியிருந்த கொலு நேர்த்தியிலும் அவை ஆடிக் குதித்த அழகிலும் எங்களை மறந்திருந்தோம். தாய்க் குரங்கின் வயிற்றைத் தாவிப் பிடித்திருக்கும் குரங்குக் குட்டிகளும், அந்தக் குட்டிகளுடனே வேகமுறப் பாய்ந்த தாய்க் குரங்குகளின் லாகவமும் அதைத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாகப் பாய்ந்து சென்ற குரங்குக்கூட்டமும் ''இது இலங்கைதான்! இது இலங்கைதான்!'' என்பதை நினைவூட்டிக்கொண்டிருந்தன. இவ்வாறு சாலைகள் இருபுறத்திலும் குரங்குகள் தாவிக் குதித்து விளையாடிய காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்த போதுதான் அந்த எதிர்பாராத அசம்பாவிதம் நடந்துவிட்டது.



பகீரதன்



கியர்" என்று ஒன்றன் பின் ஒன்றாகப் பல குரங்குகள் சாலையின் ஒரு புறத்திலிருந்து மறு புறத்துக்குத் தாவிக் குதித்து ஓட ஆரம்பித்தன. 'தட்'டென்று ஒரு சத்தம் கேட்டது. ஆ! என்ன சொல்வேன். அந்தக் கணம் வரையில் உற்சாகமாகத் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்த ஒரு குரங்கு காரில் அடிபட்டுவிட்டது. அந்த இடத்திலேயே மாண்டும் விட்டது!

ஒரு கணம் என் சாண் உடலும் ஒரு சாண் உடலாகக் குன்றிவிட்டது போன்று வேதனைப் பட்டோம். டிரைவரோ "பாவம்!" என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டுக் காரை நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டிருந்தார்.

"என்ன ஐயா! உமக்கு இரக்கமில்லையா? காரைக்கூட நிறுத்தாமல் போகிறீரே!"

"திரும்பிப் பாருங்கள்!"

திரும்பிப் பார்த்தால் அடிபட்ட குரங்கைச் சுற்றித் திமுதிமுவென்று நூற்றுக் கணக்கான குரங்குகள் வந்து கூடியிருந்தன.

"இத்தனை குரங்குகளும் ஒரு கணத்தில் எப்படி வந்தன?"

"எல்லாம் இருபுறமும் உள்ள இந்தக் காட்டுக்குள் இருந்துதான்."

"இந்தக் குரங்குகள் கூட்டமாகக் கூடி வந்து என்ன செய்யும்?"

"நாம் மட்டும் காரை நிறுத்தி யிருந்தால் உயிரோடு திரும்பி யிருக்க மாட்டோம்."

"அப்படியா?"

"ஆமாம்! நம்மை எல்லாக் குரங்குகளும் கூடிக் கொன்றே போட்டிருக்கும்."

"அதுதான் காரை நிறுத்தாமலேயே ஓட்டிக் கொண்டு வந்தீரோ?"

"ஆமாம்."

"செத்த குரங்கைச் சுற்றி நின்று மற்றக் குரங்குகள் என்ன செய்யும்?"

"என்ன செய்யும்? அந்தக் குரங்கைத் தூக்கிக் கொண்டு அலையும். அதன் உடல் கெட்டுப் போகும் வரையில் செத்த குரங்கை மற்றக் குரங்குகள் கீழேயே விடாது. கடைசியில் கீழே போடும். அவ்வளவுதான்."

இந்தக் கதையை அவர் சொல்லிக் கொண்டு வரும்போதே ஒரு கிராமம் குறுக்கிட்டது. அந்தக் கிராமத்தில் இன்னொரு அசம்பாவிதமும் நேர்ந்து விட்டது. ஒரு கோழி வந்து காரில் மாட்டிக் கொண்டது. "ஐயோ!" என்று அலறி விட்டார், உடன் வந்த நண்பர்.

"காட்டு வழியிலும் கிராமப் புறங்களிலும் பிரயாணம் செய்தால் இது போன்ற சங்கடங்கள் இல்லாமல் செல்லவே முடியாது" என்று நிதானமாகச் சொல்லி விட்டுக் காரை நுவரேலியாவை நோக்கி வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தார் டிரைவர்.

*** *** ***

சுமார் ஐந்து மணி நேரம் பிரயாணமானதும் சாலை கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏற ஆரம்பித்தது. மலைப் பிரதேசங்கள் வழியே செல்ல ஆரம்பித்தோம். 'சுள்' ளென்று வெய்யில் அடித்தாலும் 'ஜில்'லென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. அந்தப் பக்கத்து வரையே மின்சார இயந்திரத்தின் மூலம் குளிர் சாதனம் செய்து வைத்தது போலக் குளிர்ச்சியாக இருந்தது. 'ஜம்'மென்று தேயிலை மணம் வீசத் தொடங்கியது. "தோட்டக்காரர்களின் சொர்க்கம் இதுதான்!" என்று தேயிலைத் தோட்டங்களைக் காட்டிச் சொன்னார் மட்டக்களப்பு நண்பர்.

அரை மணி நேரம் சென்றதும் சாலை ஒரு இடத்தில் வந்து சற்று வளைவாகத் திரும்பியது. "இதோ! கக்கலைப் பூந்தோட்டம் வந்து விட்டது!" என்றார்.

"கக்கலைப் பூந்தோட்டம் எங்கே வந்தது? நாம் தானே கக்கலைப் பூந்தோட்டத்துக்கு வந்திருக்கிறோம்" என்று ஒரு ஹாஸ்ய வெடி குண்டைத் தூக்கிப் போட்டார் உடன் வந்த சென்னை நண்பர்.

எல்லா முகங்களும் 'களீர்' என்று வெடித்து மலர்ந்தன. பற்கள் கடகடவென்று தாளம் போட்டன. தாளம் போடாமல் என்ன செய்யும்? கக்கலைப் பூந்தோட்டம் கொஞ்சமான உயரத்திலேயா இருக்கிறது! சமுத்திர மட்டத்திலிருந்து ஐயாயிரத்து ஐநூற்று எண்பது ஓர் அடி உயரத்தில் அல்லவா இருக்கிறது! அதிலும் நாங்கள் சென்றிருந்த போது முப்பத்தெட்டு டிகிரிதானே உஷ்ணம் இருந்தது! எங்களை வரவேற்பதற்கென்று தேவர்கள் வான வீதியில் இருந்து மலர் கொட்டுவது போல் வெள்ளைப் பனியையல்லவா 'சிலுசிலு' வென்று உதிர்த்துக் கொண்டிருந்தார்கள்.

கக்கலைப் பூந்தோட்டம் சாமான்யமான தோட்டம் அல்ல. ஐம்பத்தைந்து ஏக்கர் சுற்றளவு உள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். நீளத்திலும் அகலத்திலும் பரந்திருப்பது போல உயரத்திலும் மிக உயர்ந்திருப்பது. உலகத்தில் எத்தனை விதமான பூச் செடிகள் உண்டோ அவ்வளவு செடிகளும் இத் தோட்டத்தில் இருக்கின்றன. இந்தத் தோட்டத்தை 'மலர்களின் சொர்க்கம்' என்று சொல்லுகிறார்கள். இந்தத் தோட்டத்தில் சுமார் நூறு மலர் ஆராய்ச்சி நிபுணர்கள் வேலை செய்கிறார்கள். கக்கலைப் பூந்தோட்டத்தின் சூப்பிரண்டு துரைக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் என்றால் தோட்டம் எப்படிக் காப்பாற்றப்பட்டு வருகிறது என்பதைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.


இந்தத் தோட்டத்தின் வெளிப்பகுதியைக் காரிலிருந்தும் உள்பகுதியை நடந்தும் பார்த்தோம். பார்க்குமிடமெங்கும் பூக்கள்! பூக்கள்! பூக்கள்தான்! அடடா! பூக்களில்தான் எத்தனை வகைகள்! எத்தனை நிறங்கள்! தண்ணீரில் மலரும் மலர்கள்! செடியில் பூக்கும் பூக்கள்! மரத்தில் மலரும் புஷ்பங்கள்! கிழங்கு வகைப் பூச்செடிகள்! கொடிவகைப் பூச் செடிகள்! மணலில் வளரும் பூச்செடிகள்! மலைப்பாறையில் வளரும் புஷ்பச் செடிகள்! மரப்பட்டையிலும், கரித்தூளிலும் தண்ணீரே இல்லாமல் வளரும் விந்தை மலர்ச் செடிகள்! கண்ணாடி வீட்டுக்குள் ஒய்யாரமாக வளரும் மலர்ச் செடிகள்! ஓயாத மழையில் மலரும் பூச் செடிகள்! என்று எண்ணத் தொலையாத அளவு பூச்செடிகள் இருக்கின்றன.

ரோஜாத் தோட்டத்திலேதான் எத்தனை விதமான ரோஜாக்கள்! ரோஜாக்களில்

ETERNA·MATIC

எடர்ஞ • மாடிக்

நீங்கள் மூச்சு விடும்பொழுதே தானாகச் சாவி கொடுத்துக்கொள்ளும்



எடர்ஞ-மாடிக் பால் பேரிங்கில் தானாகவே சாவி கொடுத்துக் கொண்டு இயங்குவது கடிகாரத் தொழி லின் நூறாண்டு சரித்திரத்தில் ஒரு செயற்கரிய சாதனையாகும். இந்த பால்பேரிங் ஐந்து நுணுக்க மான எஃகு குண்டுகள் கொண் டது. ஒரு மில்லிமீட்டரைக் காட்டி லும் சிறியது. தண்ணீரில் மிதக்கும் அளவுக்கு மிக இலேசாக இருக்கிறது.

படத்தில் காட்டியுள்ள Ref. 9783. $11\frac{3}{4}$ அளவுள்ளது. 17 ஜுவல்ஸ், லீவர் இயக்கம். அதிர்ச்சி, காந்தம் இவைகளால் பாதிக்கப் படாதது. வாட்டர் புரூப். முழுவதும் ஸ்டீல் கேஸ், கவர்ச்சிகர மான நவீன டயல்களில் ரூ. 374/-

Ref. 9786 மேலே உள்ளது போல்தான். ஆனால் தங்கம் மூடிய பெஸிலும் லூப் களும் கொண்ட ஸ்டீல் கேஸ் ரூ. 462/-

Ref. 9787. Ref. 9788 அப்போல். ஆனால் 18 காரட் தங்க கேஸ் ரூ. 1034/-

FAVRE-LEUBA

AND COMPANY PRIVATE LIMITED

பேவர்-லூபா & கம்பெனி பிரைவேட் லிமிடெட்

த. பெ. 845, பம்பாய் த. பெ. 474, கல்கத்தா

கிடைக்கும் இடங்கள்

ஏ. ஆர். கனீஸ் & சன்ஸ்
743, சிக்பேட், பெங்களூர்

கிருஷ்ணா நாயர் & சன்ஸ்
கோட்டயம்

கிருஷ்ணா நாயர்ஸ் வாட்ச் கம்பெனி
தபால் பெட்டி நெ. 93, எர்ணாகுளம்

கனியாம்புரம் பிரதர்ஸ் வாட்ச் கோ.
தபால் பெட்டி நெ. 82, எர்ணாகுளம்

கனி அண்டு சன்ஸ்
55-57, ராட்டன் பஜார், சென்னை-3

எ. எ. வாட்ச் கம்பெனி
ராட்டன் பஜார் ரோட், சென்னை-3

கே. சாமு அய்யர் பிரதர்ஸ், படத்துறை தெரு, கோட்டயம் போஸ்ட்

சிவப்பு நிற ரோஜாவைத்தான் சாதாரணமாக எல்லோரும் பார்த்திருப்பார்கள். சிலர் வெள்ளை ரோஜாவைப் பார்த்திருக்கலாம். இங்கே சிவப்பு; சிவப்பில் பல ரகங்கள். வெள்ளை, நீலம், பச்சை, ஊதா என்று எண்ணற்ற வகை ரோஜாச் செடிகள் இருக்கின்றன. அவை பூத்துக் குலுங்கி நிற்கும் அழகைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும்.

கிழங்கு வகைப் பூந்தோட்டம் ஒரு விசித்திரமான தோட்டம். இந்தத் தோட்டத்தின் மத்தியில் ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தை இலங்கைத் தீவு போல அமைத்திருக்கிறார்கள்! இதில் அல்லியும், நீலோற்பலமும், வெள்ளைத் தாமரையும், செந்தாமரையும் என்று பலவகையான கிழங்கு வகைப் பூக் கொடிகள் இருக்கின்றன. இதில் சில பூக்கள் பூத்து நின்று நம்மை மலர்ந்த முகத்துடன் வரவேற்கின்றன. இந்தக் காட்சியைப் பார்க்கும்போது இலங்கைத் தீவில் இப்போது நிலவிவரும் அரசியல் பூசல்கள் மறைந்து, தமிழர் சிங்களவர் தகராறு தீர்ந்து, தமிழ் மக்கள் எல்லா உரிமையும் பெற்று இந்தத் தோட்டத்து மலர்கள் போல ஒன்றாகநின்று மலர்ந்த முகத்துடன் வரவேற்கும் நாள் வராதா என்று தான் எண்ணத் தோன்றியது.

மலைத் தோட்டம். அடாடா! உண்மையாகவே மலை மீதே மலைத்தோட்டம் அமைத்திருக்கிறார்கள். இந்தத் தோட்டத்துக்குள் புகுந்து விட்டால் இரும்பு நெஞ்சில்கூட அன்பு தோன்றும். ரஸமற்ற இதயம் படைத்தவர்கள் பரம ரசிகர்கள் ஆகிவிடுவார்கள். 'சங்கீதம் விசை என்ன விலை?' என்று கேட்பவர்கள்கூடப் பாட ஆரம்பித்து விடுவார்கள். அப்படிப்பட்ட மயக்க நிலை ஏற்படுகிறது.

இந்த மலர் சொர்க்கத்தை அமைத்தவர் நிச்சயமாக மிகப் பெரிய கலை உள்ளம் படைத்தவராக இருக்கவேண்டும். அந்த மனிதரைப் போன்று பல மனிதர்கள் தங்கள் ஆயுள்காலம் எல்லாம் பாடுபட்டு இந்தமலர்த் தோட்டத்தை அமைத்திருக்க வேண்டும். இந்தத் தோட்டத்தை அமைக்க எத்தனை மக்கள் ஊக்கத்துடன் உழைத்திருப்பார்கள் என்பதை அங்குள்ள மலர்ச்செடிகளே சொல்கின்றன! இந்தத் தோட்டத்தை இங்கு அமைக்க வேண்டும் என்று என்ன என்ன யோசனை செய்திருப்பார்கள்! என்ன என்ன ஆலோசனைகள் நடைபெற்றிருக்கும்!

ஏதோ தேவலோகத்தில் இருப்பதுபோலவ்லவா இருக்கிறது. இந்தத் தோட்டத்தில் இருக்கும்போது, இந்த மலர் வனத்தை நிர்மாணித்த மகா கலைஞனுக்கு மானசீகமாக ஒரு வணக்கம் செலுத்திவிட்டு நுவரேலியா நகரை நோக்கிப் புறப்பட்டோம்.

கக்கலைப் பூந்தோட்டத்தை விட்டு வந்த பிறகும் அந்தத் தோட்டத்தின் அமைப்பும் அதன் அழகும் இன்னமும் கண்முன்னே காட்சி அளித்துக் கொண்டேதான் இருக்கின்றன. அங்குள்ள மலர்கள் பாடும் குரல் காதிலே கேட்டுக்கொண்டே இருக்கின்றது. கக்கலைத் தோட்டத்து மலர்கள் அழகின் மயக்கத்தால் உள்ளத்தில் தோன்றிய இன்ப போதை இன்னமும் இறங்கவில்லை!

ஈழநாட்டு சிங்கள மக்கள் தமிழை வெறுத்தாலும் கக்கலைத் தோட்டத்து மலர்கள் தமிழை விரும்பி வரவேற்கின்றன. அந்தப் பொல்லாத மலர்கள் தமது நாஞ்சில் நாட்டுக் கவிமணியின் பாட்டில் மூழ்கித் திளைத்திருக்கும் அதிசயத்தையும் பார்த்தேன்.

"மண்ணிலிருந்து பொருள் வரினும்—அதை
மாற்றி மணம் பெறச் செய்திடுவோம்!
கண்ணுக்கினிய நிறங்களெல்லாம் - விண்ணிற்
காணும் கதிரிடம் பெற்றிடுவோம்!"

என்று சில மலர்கள் கூடி நின்று 'கோரஸ்' பாடிய காட்சியும், இன்னும் சில மலர்கள்

"ஈசன் அடியில் பணிந்திருப்போம் - அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்
பூசனை செய்யும் அடியவரின் - உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டி நிற்போம்"


என்று மிகுந்த கர்வத்துடன் பாடிக் களித்த கோலமும் மனத்தை விட்டே மறையவில்லை.

*** *** ***

நுவரேலியாவுக்குச் செல்லும்போதே வழியில் சீதேலியாவையும் பார்க்கலாம். இங்குதான் சீதாதேவி இலங்கையில் சிறைப்பட்டிருந்தாராம். சீதை சிறைவைக்கப்பட்டிருந்த புனிதமான இடத்தையும், புகழ்பெற்ற அசோக வனத்தையும் பார்ப்பதற்கு நேயர்களை அழைத்துப் போக விரும்புகிறேன்.

இதோ வண்டி வந்து தயாராக நிற்கிறது. ஏறிக்கொள்ளுங்கள். (தொடரும்)

திருமணம்



இந்திய அரசாங்க காமர்ஸ் அண்டு கன்ஸ்யூமர் இண்டஸ்ட்ரீஸ் இலாகா பப்ளிகேஷன் ஆசிரியர் ஸ்ரீ S. R. S. ராகவன் அவர்கள் குமாரி சௌ. விமலாவுக்கும் ஸ்ரீ R. சுந்தரகிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி ராகவாச்சாரிக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள்!

தங்கத்தின் தண்டனை

தங்கம் அன்று காலைதான் வீட்டு வாசலில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.

தங்கம் ஏழை. பாடுபட்டு வேலை செய்து பிழைப்பவள். அவள் முகத்தில் இனந்தெரியாத ஓர் அழகு துலங்கும். ஒளி வீசும். எப்பொழுதும் சிரித்த முகமாயிருப்பாள். யாருடனும் இனிமையாகப் பேசுவாள். அப்படிப்பட்டவள் இன்று கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறாள் என்றால் இரக்கம் ஏற்படுவது இயல்புதானே?

அந்த வேளை 'ஏட்' ஏழுமலை அந்தத் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்.

தங்கம் தன் குடிசை வாசலில் உட்கார்ந்து அழுது கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவருக்குப் பரிதாபமாக இருந்தது.

"ஏன் அம்மா, தங்கம் அழறே?" என்று கேட்டார் ஏழுமலை.

"ஒரு ஆள் வந்து, 'மடியில் என்ன துட்டு வைச்சிருக்கே, கொடு! அவ்வளவும் என்னிடம் கொடு' என்று கேட்டார். 'என்னிடம் துட்டு மில்லே, ஒண்ணுமில்லே' என்றேன். 'கொடுக்கிறாயா? இல்லையா?' என்று மிரட்டினார். 'மிரட்டலுக்கெல்லாம் பயந்த ஆள் நான் இல்லே' என்றேன். உடனே என் கூந்தலைப் பிடித்து இழுத்து, முதுகிலே அடி அடி என்று அடித்து, என் கையிலிருந்த பணத்தையும் பறிச்சுக்கிட்டு ஓடி விட்டாரு" என்றாள்!

"யார் அம்மா, அவன்? எப்படி யிருப்பான்?" என்று கோபத்தோடு கேட்டார்.

"அவர் கறுப்பா உயரமா இருப்பாருங்க! பரட்டைத் தலையுங்க. அரும்பு மீசை வைச்சிருப்பாருங்க! இடது கன்னத்திலே ஒரு பெரிய மச்சம்கூட இருக்கும்!" என்று சொல்லிக் கொண்டு வந்தாள்!

உடனே 'ஏட்டு' ஏழுமலைக்குத் தாம்போலீஸ்காரர் என்பதும், நாட்டின் காவலர் என்பதும் நினைவு வந்தன. தமது கால் சட்டைப் பையிலிருந்து குறிப்பு எழுதும் நோட்டுப் புஸ்தகத்தை எடுத்தார். "ஆள் நிறம் - கறுப்பு" என்று குறித்துக் கொண்டார். அடுத்தாற்போல் உயரம் என்று எழுதினார். அவருக்கு ஒரு சந்தேகம் வந்தது.

"ஏன் அம்மா, தங்கம்! அந்த ஆள் உயரம் என்ன இருக்கும்? ஐந்து அடி இருப்பாரா?" என்று கேட்டார்.

"இருப்பாருங்க."

"ஐந்தரை அடி!"

"இருப்பாருங்க!"

"ஆறு அடி?"

"இருப்பாருங்க."

இந்த விஷயமாக அவளைக் கேட்டுப் புண்ணியமில்லை என்று தீர்மானித்தார். உயரம் உத்தேசமாக ஐந்தேமுக்காலடி என்று குறித்துக் கொண்டார். மற்ற அடையாளங்களையும் ஒன்று ஒன்றாக ஞாபகப்படுத்திக் குறித்துக் கொண்டார். கடைசியில் "தங்கம்! இனி நீ கவலைப்படாதே! நான் இந்த ஆளைக் கண்டு பிடிச்சுடறேன்!" என்றார்.

ஏட்டு ஏழுமலை 'கண்டுபிடித்து விடுவேன்' என்று சொன்ன மாத்திரத்திலேயே தங்கத்துக்கு ஒரே சந்தோஷம். "என்னங்க! கண்டு பிடித்து விடுவீங்களா!" என்று கேட்டாள்.

"ஓ! கண்டுபிடித்து விடுவேன்! அவனை உள்ளே தள்ளி ஆறுமாசம் கம்பி எண்ணச் செய்து விடறேன்! அயோக்கியப் பயல்! ஒரு பெண் பிள்ளையையா அடிச்சுட்டு ஓடறான்!" என்றார்.

இப்படி 'ஏட்' ஏழுமலை பெருமையோடு சொன்னவுடனேயே தங்கம் மீண்டும் அழ ஆரம்பித்து விட்டாள்.

"ஐயா! ஐயா! தயவு செய்து அவரை ஜெயிலிலே கிளிலே போட்டு விடாதீங்க!



உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று கூறினாள் தங்கம்.

தங்கத்தின் இந்த விசித்திரப் போக்கைக் கண்டு ஏட்டு ஏழுமலை ஒன்றும் புரியாமல் திகைத்தார். "ஏன் அம்மா அவனைத் தண்டிக்க வேண்டாங்கறே?" என்று கேட்டார்.

"அவர் என் பணத்தைப் பறித்தது மட்டுமல்ல. என் உள்ளத்தையும் பறிச்சுக்கிட்டுப் போய் விட்டாரு. என்னைக் கல்யாணம் கட்டிக்கிறதாகச் சொல்லியிருக்கிறாருங்க. இந்தச் சித்திரையிலே. அதனால் அவரை ஒண்ணும் செய்யாதீங்க. அவரைப் பார்த்தீங்க என்றால் என்னிடம் அனுப்பி வையுங்க!" என்றாள்.

ஏட்டு ஏழுமலைக்குத் தலை சுற்றியது. "தண்டனையை நீயே கொடுப்பதாக இருக்கிறாயே!" என்றார் வியப்புடன். —வெங்கு

தமிழ் கூறும் நல்லுலகம்

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் 23-3-57 24-3-57 ஆகிய இரு தினங்களில் "கம்பன் திருநாளை" இராமாயணத் திருவிழாவாகவே கொண்டாடியது. கல்கத்தா சர்வகலாசாலை ஆங்கிலப் பேராசிரியர் டாக்டர் ஸ்ரீ குமார் பானர்ஜி அவர்களால் ஆரம்பித்து வைக்கப் பட்ட இவ் விழாவில், வால்மீகி ராமாயணம் பற்றி ஸ்ரீ பட்டாபிராம சாஸ்திரிகள், கம்ப ராமாயணம் பற்றி ஸ்ரீ டி. வி. ராஜன், ஸ்ரீ ஒ. எஸ். வி. மணியம், தெலுங்கு மொழியிலுள்ள இராமாயணம் பற்றி ஸ்ரீ வேதாந்தம் சுப்பிரமணியன் ஆகியோர் பேசினர்.

வால்மீகி, கம்பன், குலசேகர ஆழ்வார், அருணாசலக் கவிராயர் ஆகியோருடைய பாடல்களை அடிப்படையாகக் கொண்டு திருவாரூர் துரைசாமி பாகவதர் அவர்களால் தயாரிக்கப்பட்ட "இராமகாதை" என்னும் இசைநிகழ்ச்சி விழாவுக்குச் சிகரம் வைத்தாற் போன்று அமைந்தது. இந்நிகழ்ச்சியில் ஸ்ரீமதி மங்களம் மணி, குமாரி விஜயலக்ஷ்மி, ஸ்ரீ இராம கிருஷ்ணன், ஸ்ரீ பண்டரிநாதன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

★

"**பெ**ன் ஸ்தாபனத்தின் மேற்கு வங்கக் கிளை ஸ்தாபனத்தின் ஆதரவில், மேற்கு வங்க மேல் சபைத் தலைவர் டாக்டர் சுநீத குமார் சாட்டர்ஜி தலைமையில் அண்மையில் நடை பெற்ற சிறப்புக் கூட்டத்தில் ஸ்ரீ ஸுதாம்சு மோகன் பானர்ஜி என்னும் அறிஞர் "தமிழர் வாழ்வும் இலக்கியமும்" என்னும் பொருள் பற்றிச்சொற்பொழிவொன்று நிகழ்த்தினர்.

தமது தலைமை உரையில் டாக்டர் சாட்டர்ஜி நாலாயிர திவ்ய பிரபந்தம் பற்றிக் குறிப்பிடுகையில், ஸ்ரீ ஜதீந்திர ராமானுஜ தாஸர் என்னும் வங்கப் பெரியார், பக்திப் பாசுரங்களான நாலாயிரம் பாக்களையும் வங்காளியில் மொழிபெயர்த்து, எளிய விளக்க உரையுடன் வெளியிட்டு வரும் செய்தியை வெளியிட்டார். ஒவ்வொரு பாசுரத்தின் மொழிபெயர்ப்புக்கு எதிரில் தமிழ் மூலத்தை வங்க லிபியில் வெளியிட்டிருப்பதின் மூலம் தமிழ் மூலத்தையும் வங்காளிகள் படித்துத் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பை அளித்தது குறித்து ஸ்ரீ ஜதீந்திர ராமானுஜதாஸரை டாக்டர் சாட்டர்ஜி மிகவும் பாராட்டினர்.

ஸ்ரீ ஸுதாம்சு மோகன் பானர்ஜி தமது ஒரு மணி நேரச் சொற்பொழிவில் சங்க காலம் தொட்டு இன்றுவரை தமிழில் தோன்றிய பல இலக்கியங்களில் பொதிந்து கிடக்கும் அரிய கருத்துக்களை அழகாக வெளியிட்டார்.

சமீப காலத்தில் பல வங்க அறிஞர்களிடையே பழம்பெரும் தமிழ் மொழியிலுள்ள தொன்மை பொருந்திய இலக்கியங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் உண்டாகியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை வங்க நாட்டிலுள்ள தமிழ் இலக்கிய ஸ்தாபனங்கள் நன்கு பயன் படுத்திக் கொள்ளும் என்று நம்புகிறோம்.

★

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் பீடாரோகண பொன் விழாவை 13-3-57 முதல் 17-3-57 முடிய ஐந்து தினங்கள் வங்காளிகளும் தமிழர்களும் சேர்ந்து மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். மேன்மை தங்கிய நீதிபதி கனம் ஸ்ரீ ராமப்பிரஸாத் முக்கர்ஜி அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இவ் விழாவில் டாக்டர் காளிதாஸ் நாக், ஸ்ரீ பட்டாபிராம சாஸ்திரிகள், டாக்டர் நளினி சென்குப்தா, ஸ்ரீ பி. வி. சட்டர்ஜி, ஸ்ரீ ஹீரா லால் சோப்ரா, ஸ்ரீ டி. எஸ். சீதாபதி, ஸ்ரீ எம். எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். — பாதி

★

காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமியின் பீடாரோகண பொன்விழாவை யொட்டி, கர்நூல் நகர ஈசுவர ஆலயக் கட்டடத்தில் மார்ச்சு மாதம் 14-ந் தேதி முதல் 16-ந் தேதிவரை மூன்று நாட்களுக்குக் கொண்டாட்டம் மிகவும் விமரிசையாக நடை பெற்றது. காலையில் கணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம், ருத்திர ஏகாதசி ஹோமம், சகஸ்ரநாம அர்ச்சனைகள் முதலியன பக்தி சிரத்தையுடன் நடைபெற்றன.

மூன்று தினங்களிலும் மாலையில் உபன்யாசங்கள் நடைபெற்றன. இதில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கடைசியாக, பொன்விழாக் காரிய தரிசி திரு பி. கே. முத்துசாமி அய்யர் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.



உங்கள் அழகை அதிகரிக்கிறது
பாதுகாக்கவும் செய்கிறது!
அற்புத நறுமணமூட்டப்பட்ட
சார்மிஸ் ஸ்னோ உங்கள் சரு
மத்தை அழகுறச் செய்கிறது.
பாதுகாக்கிறது. எல்லா பருவ
காலங்களிலும் சருமத்தை
மிருதுவாகவும், வெல்வெட்
போல வழவழப்பாகவும்
வைக்கிறது. பவுடருக்கு
ஆதாரமானது. எண்ணெப்
பசையில்லாதது. சார்மிஸ்
ஸ்னோ சொற சொறப்பும்,
வரிகளும், கோடுகளும்,
புண்களும் ஏற்படாமல்
சிறந்த முறையில் தடுக்
கிறது. பூச்சிக்கடிகள், வெடிப்பு
களினின்றும் பாதுகாக்கிறது.
Charmis SNOW
COLGATE
PROTECTS AND BEAUTIFIES THE SKIN
ஒரு கால்கேட்
உயர்தர சரக்கு
சார்மிஸ்
ஸ்னோ
CSG/3
சார்மிஸ் பலகாரிய க்ரீமையும் டால்கம் பவுடரையும் பரீட்சித்திருக்கிறீர்களா?

மாதர்குல திலகங்கள்




"செந்தமிழ் நாட்டில் பிறந்தேன். செந்தமிழ் நாட்டிலேயே வளர்ந்தேன். இந்த அருமைத் தமிழ் நாட்டிலேயே என் வாழ் நாட்களின் மிகுதியையும் அர்ப்பணம் செய்வேன்!" என்று பெருமிதத்தோடு கங்கணம் கட்டிக் கொண்டு எழுபது ஆண்டுகளுக்கு மேலாக அன்புப் பணியாற்றி வரும், இந்த அமெரிக்க அம்மையார்தான் வேலூரில் பிரசித்தி பெற்று விளங்கும், கிறிஸ்துவ மிஷன் வைத்தியசாலை, வைத்தியக் கல்லூரி, தாதிகள் பயிற்சி நிலையம் முதலிய ஸ்தாபனங்களைத் தோற்றுவித்த மிஸ் ஐடா ஸோபியா ஸ்கட்டர் அவர்களாகும்.

மிஸ் ஐடா ஸ்கட்டர் அம்மையார் ராணிப் பேட்டையில் 1870-ம் ஆண்டு டிசம்பர் 9-ந் தேதி பிறந்தார். அம்மையாரின் தகப்பனார் ஒரு மிஷனரி வைத்தியர். தாயார் ஒரு ராணிப்பேட்டை மிஷன் பள்ளியில் சேவை புரிந்து வந்தார். காந்திமகான் தேச மக்களுக்குக் கை ராட்டையை ஏற்குமாறு கூறியதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னமேயே ராணிப் பேட்டையில் ஐடா ஸ்கட்டரின் தாயார் பள்ளிக் குழந்தைகளுக்கு ராட்டைப் பயிற்சி அளித்து வந்தார். ஐடா ஸ்கட்டர் தமிழ் நாட்டு மண்ணில் விளையாட்டுப் பருவத்தைக் கழித்த பின், அமெரிக்காவுக்குக் கல்வி பயில அனுப்பப்பட்டார். அங்கு வைத்தியக் கல்வி பயின்று ஐடா திரும்பியதும், வேலூரில் தமது தகப்பனார் வீட்டிலேயே ஒரு சிறிய அறையில் ஒரே படுக்கையுடன் கூடிய வைத்திய சாலையை ஆரம்பித்தார். ஏராளமான நோயாளிகள் கூட்டம் அவரது வீட்டைச் சூழ்ந்து கொண்டு விடவே, சிறிய வாடகை வீடு ஒன்றை அமர்த்தி ஆறு படுக்கைகள் கொண்ட வைத்திய சாலை நிறுவினார். பிறகு இன்னும் ஒரு பெரிய வீடு வாடகைக்கு எடுத்து நாற்பது படுக்கைகள் கொண்ட வைத்தியசாலையாக அதை வளர்த்தார். நோயாளிகளின் முற்றுகையும், மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே வந்தது. அம்மையாரும் சளைக்கவில்லை. இந்த அன்புப் பணிக்கு உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் பொருள் உதவி கோரினார். கிடைத்த பொருளைக் கொண்டு வேலூர் தோட்டப் பாளையத்தில் இன்று பெரிய உருவிலே காட்சி தரும் சகல வைத்திய வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையை 1923-ல் அமைத்தார்.

சென்ற ஆண்டு அமெரிக்கக் கொடையரசர் நப்பீல்ட் பிரபு உபகாரநிதியிலிருந்து பதினாறு லட்ச ரூபாய் வைத்திய சாலையை விரிவாக்கும் திட்டத்துக்குக் கிடைத்திருக்கிறது. வைத்தியசாலையில் அரிய ஆராய்ச்சிகள் பல நடந்து வருகின்றன. அயல் நாட்டு வைத்திய நிபுணர்கள் பலர் இந்த வைத்திய சாலையில் சேவை செய்வதையே ஓர் பாக்கியமாகக் கருதிப் பணி புரிந்து வருகிறார்கள். சஸ்திர சிகிச்சையில் இந்த வைத்திய சாலையின் புகழ் பரவி, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நோயாளிகள் இங்கு வருகிறார்கள். வைத்திய சாலை எவ்வாறு சிறப்பாக இயங்கி வருகிறதோ, அதேமாதிரி ஸ்கட்டர் அம்மையாரால் தோற்றுவிக்கப்பட்ட வைத்தியக் கல்லூரியும் பல அரிய சிறப்புகளைப் பெற்றுத் தொண்டாற்றி வருகிறது. இம்மாதிரிதான் தாதிகள் பயிற்சிப் பள்ளியும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. இம் மூன்று முக்கியமான ஸ்தாபனங்களை டாக்டர் ஐடா ஸ்கட்டர் அம்மையார் போதிய பொருள் இன்றிப் பலவிதமான இடையூறுகளுக்கு மத்தியில் எவ்வாறு உருவாக்கி வளர்த்தார், அவற்றை எவ்வாறு கீர்த்தியுடன் விளங்கச் செய்தார் என்பவற்றை ஆராய்ந்தால், "அன்பு" என்னும் அரிய சக்திதான் அவருடைய சாதனைகளுக்கெல்லாம் துணை நின்றது என்பது வெளியாகும். அன்புப் பணியிலே இன்பத்தைக் காண்பவர் ஐடா அம்மையார். மனிதர்களிடம் மட்டுமல்ல; பிராணிகளிடமும் அன்புடையஅம்மையார்தான்அவர். ஐடா ஸ்கட்டர் மிக்க பரிவோடு வளர்த்து வரும் நாய்க்குட்டியே அதற்குச் சான்று.

ரகுபதி ராகவ



[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது.]

75

குழந்தைகளாவது, வாலிபர்களாவது, விருத்தாப்பியம் அடைந்தவர்களாவது மரணமடைந்து நம்மை விட்டு நீங்கினால் அதற்காக நாம் அமைதி இழக்கலாகாது. ஒவ்வொரு நிமிஷத்திலும் ஒரு உயிர் தோன்றுகிறது; ஒவ்வொரு நிமிஷமும் ஒரு உயிர் உடலை விட்டுப் பிரிந்து போகிறது. இந்த உலகத்தில் ஒரு குழந்தை பிறந்தது என்றாவது ஒருவர் இறந்து போனார் என்றாவது மகிழ்ச்சியடைவதும் அழுவதும் இரண்டுமே பைத்தியக்காரத்தனம். இந்துக்களும் முஸல்மான்களும் பாரசீக மதத்தினரும் எல்லாருமே இந்த உடல் வேறு, இந்த உடலில் குடி கொண்டிருக்கும் ஆன்மா வேறு என்று நம்புகிறார்கள். அந்த ஆன்மாவுக்கு மரணமில்லை என்றும் அறிவார்கள். உயிருடன் இருப்பவர்களுடைய ஆன்மாக்களும் மரண மடைந்தவர்களின் ஆன்மாக்களும் பேதப்படவில்லை. இரண்டுக்கும் ஒன்றும் வித்தியாசமில்லை. பிறப்பும் இறப்பும் இடைவிடாமல் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றில் நாம் வருத்தப்படுவதற்கோ மகிழ்ச்சியடைவதற்கோ காரணம் ஒன்றுமில்லை. மற்ற நாடுகளை மறந்து விட்டு நம்முடைய நாட்டை மட்டும் கவனித்தாலும் நாட்டில் எவ்வளவோ குடும்பங்கள். மரணத்துக்கு அழுவதென்றால் அதற்கு முடிவு இல்லை. இறந்து போனவர்களைப் பற்றி அழ ஆரம்பித்தால் கண்ணீரைத் துடைப்பதற்கே அவகாசமில்லாமற் போகும். மரணத்தைப் பற்றிப் பயப்படுவதையும் வருந்துவதையும் முற்றிலும் ஒழித்து விட வேண்டும்.

[யங் இந்தியா, 13—10—22]

இறப்பும் பிறப்பும் ஆன்மாவைப் பொருத்தமட்டில் ஒரு வேறுபாடுமில்லை. இரண்டிலும் மகிழ்ச்சிக்கும் காரணமில்லை; துயரத்துக்கும் காரணமில்லை. ஆன்மாவுக்குப் பிறப்பாவது இறப்பாவது இல்லை. [யங் இந்தியா, 20—11—24]

* * *

ஒரு பயனை அடைவதற்குப் பல வழிகள் உண்டு. பயனே முக்கியம், சாதனங்களைப் பற்றி எதுவானால் என்ன என்று சிலர் எண்ணுகிறார்கள். இது தவறு. என்னுடைய கொள்கையின் படி ஒரு பயனை அடைவதற்காக நாம் எடுக்கும் முறைகளே மிக முக்கியம். முறைகள் பிழைபட்டால் பயனும் பிழை பட்டதே. பயன் வேறு; பயனை அடையும் வழி வேறு என்பது பொய். முயற்சியே பயனும் ஆகும். நாம் எடுக்கும் முயற்சி மட்டுமே ஓரளவு நம்முடைய சுவாதீனம். பயன் என்பது ஆண்டவனுடைய ஆதீனம். ஆனபடியால் நாம் எடுக்கும் முயற்சியும் முறையுமே நம்முடைய பொறுப்பு. நாம் கையாளும் முறைகள் குற்றமான முறைகளானால் எந்தப் பயனும் நமக்குப் பயன்படாது. இது என்னுடைய உறுதியான கொள்கை. இதற்கு விதிவிலக்கை ஒப்புக் கொள்ளவே மாட்டேன்.

[யங் இந்தியா, 17—7—24]

* * *

மெய்ப் பொருளைக் காண வேண்டுமானால் தன் உயிரைப் போலவே பிற உயிர்களைக் காண வேண்டும். அற்ப ஜீவன்களையும் தன் உயிரைப் போலவே மதிக்க வேண்டும். நம் உயிரில் நாம் வைத்துக் கொண்டிருக்கும் பற்று பிற உயிர்களிடம் ஜீவகாருண்யமாகப் பரிமளிக்க வேண்டும். ஒருவன் தன் உயிரைப் போலவே பிற உயிர்களையும் மதித்தால் அவன் எந்த விவகாரத்தை இது என் பொறுப்பல்ல என்று புறக்கணிக்க முடியும்? முடியாது. ஆனபடியால்தான் உண்மையை உபாசிக்கும் நான் அரசியலில் வேலை செய்து வருகிறேன். அரசியல் விவகாரத்துக்கும் தெய்வ பக்திக்கும் சம்பந்தமில்லை என்று எண்ணுபவர்கள் அறியாமையால் அப்படி நினைக்கிறார்கள். பக்தி அல்லது சமயம் இன்னதென்று சரியாக உணராதவர்கள்தான் சமயம் வேறு, அரசியல் வேறு என்று எண்ணுவார்கள். இதைப்பற்றி எனக்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. வேறு அபிப்பிராயம் கொண்டவர்களிடம், இதை மிக வணக்கமாகச் சொல்லுகிறேன்.

[சுயசரிதம்]

இந்த அற்புதமான பரீட்சை பைலட் பேனாவின் உன்னத தரத்தை நிரூபிக்கிறது!



பைலட் பேனாவின் மிக உறுதியான நிப்பை மிருதுவான ஒரு பலகையில் குத்தியிறக்கியும்கூட அது ஒடியவோ அல்லது அதன் வாய் பிளக்கவோ செய்யவில்லை. பைலட் பேனா மிகக் கடினமான உபயோகத்திற்குகந்தது என்பதற்கு அத்தாட்சி!



மிகக் குறைந்த விலையுள்ள பைலட் பேனா அற்புதமான பரீட்சைகளில் வெற்றி கண்டுள்ளது! இதன் நிப் உறுதியாகவிருப்பதோடு, இதில் மையும் நிறையக் கொள்ளுகிறது. ஒருதரம் மை நிரப்பினால் இதைக்கொண்டு முழுத்தாளில் 40 பக்கங்கள் எழுதலாம். மற்றும் இந்தப் பேனா ஒழுகாது என்பதற்கு உத்திரவாதம் உள்ளது!

எவ்வளவு கடின உபயோகத்திலும்கூட, எழுத்தின் வடிவு குலையாமல், சீராக எழுதும் தன்மையே பைலட் பேனா பெற்றுள்ள தனி மதிப்பிற்குக் காரணம். பைலட் பேனாக்கள் விலை ரூ. 4/8லிருந்து ரூ. 27/- வரை பல்வேறு மாடல்களில் உள்ளன. ஒவ்வொரு மாடலும் நீங்கள் கொடுக்கும் பணத்திற்குச் சிறந்த பெறுமானம் அளிக்கும். அவைகளில் உங்களுக்குப் பிடித்தமானதொரு மாடலைத் தேர்ந்தெடுங்கள்!

சிறந்த முறையில் நீடித்த உழைப்பிற்கு

பைலட் பேனாவை வாங்குங்கள்

பைலட் பேனாவிற்குகந்தது பைலட் மையே



தி பைலட் பேன் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
கத்தோலிக் சென்டர், ஆர்மீனியன் தெரு, மதராஸ் 1

டிரேட் மார்க்

விற்பனை மற்றும் சர்வீஸ் செய்பவர்கள்:
ஜெம் அண்ட் கம்பெனி
325/326, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, மதராஸ் 1



மாலவல்லியின் தியாகம்

அத்தியாயம் 17

அன்பே சிவம்! அருளே சிவம்!

பூதுகன் சிரித்தான். "அந்தணனாவது? அந்தணன் என்றால் என்ன அர்த்தம்? ஒரு குலத்தில் பிறந்ததற்காக ஒருவன் அந்தணனாகிவிட மாட்டான். 'ஒருவன் அந்தணனாவது முடித்தலையாலல்ல, கோத்திரத்தாலுமல்ல, பிறப்பினாலுமல்ல. எவரிடம் சத்தியமும் தருமமும் நிலைத்துள்ளனவோ, அவன்தான் அந்தணன்' என்று புத்தபெருமான் சொல்லுகிறார். என்னைப் போன்ற சார்வக சித்தாந்திக்குச் சாதி, மதம், குலம், கோத்திரம் போன்ற பந்தங்கள் ஒன்றும் கிடையாது. ஒரு வேளை நீ என்னை அந்தணன் என்று நினைப்பதைத் தவிர வேறு விதமாக நினைக்க முடியவில்லையென்றால் நான் சத்தியத்திலும் தருமத்திலும் நிலைத்துள்ளவன் என்பதற்காக வேண்டுமானால் அப்படி நினைப்பதாக வைத்துக்கொள். நான் அக்னி ஹோத்ரம் போன்ற நித்யகருமானுஷ்டானங்கள் எதிலுமே பற்றுக் கொள்ளாவிட்டாலும், யக்ஞோபவீதம், கோபி சந்தனம் முதலிய குலச் சின்னங்களை அணிந்து கொள்ளாவிட்டாலும், நம்மை மீறிய பரத்துவம் ஒன்று இல்லையென்று சொன்னாலும், பேராசையும், வஞ்சனையும், பொய்யும், சூதும், கொலை உணர்ச்சியும் நிறைந்த இந்த உலகத்தில் சத்தியத்திலும் தருமத்திலும் நாட்டமுள்ளவனாக இருக்கிறேன் என்பதற்காக என்னை நீ அந்தணன் என்று சொன்னால் அதை நான் ஒப்புக் கொள்கிறேன். அந்தணன் என்ற பெயரில் நான் கோழையாக விரும்பவில்லை. அந்தணன் என்ற பெயரில் ஆயுத பலம் உள்ள எதிரிகளைக் கண்டு அச்சமடைய விரும்பவில்லை. பாரதம் பொய்யோ நிஜமோ, ஆனால் அதில் வரும் துரோணனைப் போலும்—அசுவத்தாமனைப் போலும்—தன் கைக்கோடரியால் ஆயிரக்கணக்கானவர்களின் தலையை வெட்டிக் குவித்த பரசுராமன் போலும் வீரத்

கி. ரா. கோபாலன்



தோடு நிகழ நினைக்கிறேன்" என்றான்.

எவ்வித அணியும் அணிந்து கொள்ளாத அவனுடைய அகன்ற மார்பும், திரண்ட புஜங்களும், பிரகாசம் நிறைந்த கண்களும், புன்சிரிப்பும், அலட்சியம் நிறைந்த கணீரென்ற பேச்சும், தேனார்மொழியாளின் மனத்தை ஆழம் நிறைந்த சுழலில் விழுந்த துரும்பு போல் சுழல வைத்தன. இத்தகைய அழகனைத் தன் காதலனாக அடைந்த வைகைமாலை உலகிலேயே சிறந்த பாக்கியவதிதான் என்ற எண்ணம் கண நேரத்தில் அவள் மனத்தில் எழுந்தது. அவள் அவனுடைய கம்பீரமான முகத்தை அள்ளிப் பருகுபவன் போல் ஒருவிதமாகப் பார்த்துக் கொண்டே, "பல்லவ சக்கரவர்த்தியின் சகோதரராகிய சிம்மவர்மருக்குக் கூட உங்களிடம் அச்சம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. உங்களை ஏதோ பழி வாங்க நினைப்பவர் போல் ஆவேசத்துடன் பேசிய அவர் உங்களுடைய நட்பை விரும்புகிறவர் போல் பின்னால் பேசியது எனக்கே கொஞ்சம் வியப்பாக இருந்தது. உண்மையாகவே நீங்கள் எல்லோருடைய மனத்தையும் கவரக் கூடியவராய்த்தானிருக்கிறீர்கள். உலகத்தில் புத்த பெருமானைப் பற்றிச் சொல்லுவார்கள், அவருடைய உபதேசத்தைக் காட்டிலும் அவரது உருவமே மக்களின் மனத்தைக் கவர்ந்து விட்டதாக. அவருடைய உபதேசங்களைக் கேட்கும் முன்பே அவருடைய பேரொளிமயமான உருவத்தைக் கண்டதுமே ஒவ்வொரு நகரத்திலுமுள்ள ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாகச் சீவர ஆடையணிந்த பிக்ஷுக்களாகவும், பிக்ஷுணிகளாகவும் ஆகிவிட்டார்கள் என்று சொல்லுவார்கள். ராஜக்கிருஹத்திலே புத்தபெருமான் தங்கியிருந்த சமயம் கபிலவஸ்துவிலிருந்த அவருடைய தந்தை சுத்தோதன மன்னர், ஒன்பது தடவைகள் தமது மந்திரி, பிரதானிகளில் மிகவும் பிடித்தவர்களையும், புத்திசாலிகளையும் அனுப்பி அவர் மனத்தை மாற்றி அரண்மனைக்கு அழைத்துவர முயன்றாராம். ஆனால் புத்தபிரானை அரண்மனைக்கு அழைத்துச் செல்ல வந்தவர்களெல்லாம் புத்த பெருமானின் தெய்விக உருவத்தைக் கண்டதும் தங்கள் எண்ணத்தை மறந்து அவருக்கு அடியார்களாகித் துறவறம் பூண்டு ராஜக் கிருகத்திலுள்ள வேணுவனத்திலேயே தங்கித் தவம் கிடந்தார்களாம். இதனால் மனம் உடைந்த சுத்தோதனர் கடைசி முறையாக, புத்த பெருமானோடு குழந்தைப் பருவத்தில் நெருங்கிப் பழகினவனும், அவர் பிறந்த நாளிலேயே பிறந்தவனும் சகல சாஸ்திரங்களையும் படித்து மேதை என்று திகழ்ந்தவனுமாகிய உதாயி என்ற அந்தண வாலிபனை, போதிசத்துவரிடம் அனுப்பினாராம். உதாயி போதிசத்துவரிடம் போகும்போதே, 'குழந்தைப் பருவம் முதல் அவரோடு பழகியவனாதலால் அவருடைய உருவம் என்னைக் குலைத்து விடாது. ஆனால் அவருடைய பேச்சு என் மனத்தைக் குலைத்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். அதற்காக அவருடையவார்த்தைகளைக் கேட்காத வண்ணம் காதில் பஞ்சை அடைத்துக் கொண்டு போகிறேன்' என்று சொல்லித் தன் இரு காதுகளிலும் பஞ்சையடைத்துக் கொண்டு புத்தபெருமானிடம் போனானாம். ஆனால் பாவம், அவனுடைய எண்ணத்துக்குப் பழுதாகப் புத்த பெருமானின் உள்ளம் கவரும் அழகு உருவம் காட்சியளிக்கவே அவனும் காஷாயதாரியாகி வேணு வனத்திலுள்ள ஒரு மரத்தடியில் கண்மூடி யோக நிஷ்டையில் அமர்ந்து விட்டானாம். இதைப்போல உங்கள் உருவமும் பேச்சும்...." என்றாள் இனிய குரலில்.



பூதுகன் சிரித்தான். "நீ சொல்வதைப் பார்த்தால் பெரிய விபரீதமாக இருக்கிறதே? பரம நாஸ்திகனான என்னையும் புத்த பெருமானையும் ஈடு கட்டாதே. என் உருவில் மயங்கி இது வரையில் யாரும் சீவர ஆடை அணிந்து பிக்ஷுக்களாகி விட்டதாகத் தெரியவில்லை. ஜாக்கிரதை: உனக்கு ஏதாவது என் உருவைக் கண்டதும் மயக்கம் ஏற்பட்டிருந்தால் அதற்காக பிக்ஷுணியாகிவிட வேண்டுமென்று தீர்மானித்து விடாதே. நான் உலகில் யாரும் பிக்ஷுவாவதையோ, பிக்ஷுணியாவதையோ விரும்பவில்லை" என்றான்.

"நான் பிக்ஷுணியாக விரும்பவில்லை. இந்த மனத்தில் ஆசையும் மோகமும் விடாத வரையில் ஒரு பிக்ஷுணி ஆவத



னால் என்ன பலன் இருக்கிறது? மாலவல்லியைப் போல் வாழ்விலொருபுறம் மோகமும், இன்னொரு புறம் துறவில் நாட்டமுமாகத் தடுமாறுவதற்கு நான் சித்தமாயில்லை. உங்களிடம் நான் கண்டதைப் பற்றிச் சொன்னேன், அதிருக்கட்டும். நீங்கள்தான் புத்த பிக்ஷுக் கோலத்தில் இருந்த ரவிதாசனைக் கொன்றதாகச் சிம்மவர்மர் சொல்லுகிறாரே? அவனைக் கொன்றதினால் தோஷமில்லை. ஆனால் அதை நீங்கள் செய்திருப்பீர்களா என்ற சந்தேகம்தான் எனக்கு...'' என்றாள்.

''நான் செய்திருக்க மாட்டேன் என்று நீ நம்பினால் சரிதான். செய்திருப்பேன் என்று நீ சந்தேகித்தாலும் அந்தச் சந்தேகத்தை நிவர்த்திக்க நான் தயாராயில்லை. நான் இப்பொழுது முடிவான தீர்மானத்துக்கு வந்து விட்டேன். ரவிதாசனைக் கொன்றவர்கள் கலங்கமாலரையனைச்சேர்ந்தவர்களல்ல. மாலவல்லியோ, அல்லது அவளைச் சேர்ந்தவர்களோ அல்ல. சிம்மவர்மனோ அவனைச் சேர்ந்தவர்களோ அல்ல. இவர்களெல்லோரையும் தவிர வேறு யாரோதான் அவனைக் கொன்றிருக்க வேண்டுமென்று நான் நம்புகிறேன். நான்தான் ரவிதாசனைக் கொன்றிருக்க வேண்டும் என்று சிம்மவர்மன் நம்பும் போது என்னிடமே அவன் நட்புக் கொள்ளப் பிரியப்படுவதுதான் விநோதம்'' என்றான் பூதுகன்.

''உங்களிடம் அவர் நட்புக் கொள்ள விரும்புவதும் ஒரு சூழ்ச்சியாக இருக்கக் கூடாதா?'' என்றாள் தேனார்மொழி.


''சூழ்ச்சியாக இருக்கக் கூடாதா என்ன? சூழ்ச்சியேதான்.''

''அவர் உங்களோடு நட்புரிமை கொள்ள விரும்புவது ஒரு சூழ்ச்சி என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும் போது அவருடைய சிநேகிதத்தை நீங்கள் ஏன் வரவேற்க வேண்டும்? அதனால் உங்களுக்கும் ஏதேனும் ஆபத்து ஏற்படாதா?''

''சிம்மவர்மனோடு நட்புரிமை கொள்வதால் மாத்திரம் எனக்கு ஆபத்து ஏற்படும் என்பதல்ல. எப்பொழுதுமே ஆபத்திடையேதான் நடமாடிக் கொண்டிருக்கிறேன். சிம்மவர்மனின் நட்பு ஒருவகையில் ஆபத்தானதுதான். மற்றொரு புறத்தில் அவனுடைய நட்பு என்னுடைய காரியசித்திக்குப் பல விதத்திலும் உதவியாக இருக்கும். அவனிடமிருந்து சில ரகசியங்களைத் தெரிந்து கொண்டு, அதனால் எனக்கு ஏற்படும் தீமையிலிருந்து ஜாக்கிரதையாக விலகிக் கொள்வதுதான் சாமர்த்தியம், எலியைப் பிடிக்கப் பொறிவைத்தால் சாமர்த்தியமான எலி அந்தப் பொறியில் வைத்திருக்கும் பண்டத்தை மட்டும் தின்று விட்டு ஓடிவிடுவது போல...'' என்றான் பூதுகன்.

''நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். உங்களுக்கு அத்தகைய சாமர்த்தியம் உண்டு. ஆனால் எனக்குச் சிறிது பயமாக இருக்கிறது. நீங்கள் மறுபடியும் சோழ சாம்ராஜ்யத்தை நாட்டில் நிலைநிறுத்தப் பாடுபடுவீர்களென்று அந்தச் சிம்மவர்மனுக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது அவன் உங்களைக் கொன்றுவிடத்தானே முயற்சி செய்வான்?'' என்றாள் தேனார்மொழி.

பூதுகன் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே, ''இவ்வளவு அனுபவம்



அடைந்தும் சிம்மவர்மனின் மனோ நிலையையோ சூழ்ச்சியையோ நீ அறிந்து கொள்ளாததுதான் விநோதம். சிம்மவர்மன் நந்திவர்மன் நாட்டையாளுவதை விரும்பவில்லை. தானே பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தைப் பெற நினைக்கிறான் என்பதை நீதானே சிறிது நேரத்துக்கு முன்னால் சொன்னாய்? பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எதிராளியாக இருக்கும் என்னைப் போன்றவர்களுடைய நட்பைச் சிம்மவர்மன் விரும்புவது இயற்கைதானே? என்னுடைய நட்பினால் அவனுடைய கனவு பலிக்காவிட்டாலும் என்னுடைய காரியத்துக்குச் சாதகமுண்டல்லவா? முதலாவதாக மாலவல்லி எங்கு மறைந்தாள் என்ற விஷயம் அவன் மூலமாகத் தெரியலாமல்லவா? அவனுக்கு அந்தரங்க நண்பன் போல் சிலகாலம் இருந்து எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். நீ அவன் கோரியபடி நாளையதினம் எப்படியாவது எனக்கும் அவனுக்கும் நட்பு ஏற்படுத்த முயற்சி செய்'' என்றான்.

தேனார்மொழியாள் ஒரு மோகனப் புன்னகை புரிந்தாள். அவளுடைய அழகான பார்வை ஏதோ கனவு உலகத்திலாழ்ந்திருப்பது போலிருந்தது. அந்தப் புன்னகையையும், பார்வையையும் பூதுகனைப் போன்றவர்கள் புரிந்து கொள்வது கடினமல்ல. அவன் நெடு நேரத்துக்கு முன்பே அதன் பொருள் விளங்கப் பெற்றவனாய்ச் சிறிது விழிப்போடுதான் இருந்தான். ''உங்களுடைய வார்த்தை ஒவ்வொன்றுக்கும் நான் கட்டுப்பட்டவளே. நீங்கள் எதைச் செய் என்றாலும் அதைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன். உங்களைப் பார்த்ததிலிருந்து என்னை உங்களுக்கு அர்ப்பணித்து விட்டேன். இந்த அடிமையின் அன்பை மாத்திரம் நிராகரிக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள்...'' என்றாள் தேனார்மொழியாள்.

அந்தச் சமயம் அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே பூதுகனுக்குப் புரியவில்லை. அவளால் அவனுக்குச் சில காரியங்கள் ஆகவேண்டியிருந்தன. உண்மைதான். அதற்காக அவள் விருப்பத்துக்கிணங்கித் தன்னுடைய நிலையான உள்ளத்திலும், பரிசுத்தமான வாழ்க்கையிலும் அவன் ஒரு களங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. அவன் சிறிது ஏளனமாகச் சிரித்துக் கொண்டே, ''இத்தகைய அன்புத் தளையில் என்னைக் கட்டுப்படுத்துவாய் என்று நான் நினைக்கவில்லை, தேனார்மொழி! வைகைமாலை உனக்குத் தோழி. அவளும் ஒரு பெண்; வாழ்வில் அவளுக்குரியவன் நான்தான் என்பதை மறந்து விடாதே. எனக்காக அல்ல. உன்னைப் போன்ற ஒரு பெண்ணுக்கு உரியதானதை நீ அபகரிக்க விரும்பாதே. இது உன் தோழிக்கு நீயே நினைக்கும் பெருந்துரோகமாகும் ......'' என்றான்.

தேனார்மொழி புன்னகையோடு பொற்கொடி போன்ற தன் உடலை நெளித்தாள். ''நான் தோழிக்குத் துரோகம் செய்யவில்லை. அவள் மிகவும் நல்லவள். என் மன நிலை அறிந்து என்னிடம் இரக்கம் காட்டி என்னுடைய விருப்பத்தை அங்கீகரிப்பாள். நல்ல தோழர்கள் தாங்கள் அனுபவிப்பதைத் தங்கள் தோழர்களும் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புவதில்லையா? ருசிகரமான உணவைத் தன்னுடைய நண்பர்களுக்கும் பகிர்ந்து அளிக்காமல்





இந்த அடையாளத்தை
கவனியுங்கள்
Mettur
Mulls
METTUR INDUSTRIES LTD
METTUR MULL
Long Cloth
மேட்டூர் மல்கள் &
லாங்கிளாத்கள்
நிர்ணயிக்கப்பட்ட, சிக்கனமான விலைகளில்
விற்கப்படுகின்றன.
தயாரிப்பவர்கள்:
மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,
மேட்டூர் அணை — சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜண்டுகள்:
W. A. பியர்ட்ஸெல் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட், மதராஸ்-1.

யாரேனும் சாப்பிடுவது உண்டா? பெருந்தன்மையுள்ள வைகை மாலை, என்னிடம் பேர்அபிமானம் வைத்துள்ள வைகை மாலை இதற்காக என்னை மன்னிப்பாள். உங்கள் மனத்தில்தான் அனுதாபத்துக்கும், இரக்கத்துக்கும், அன்புக்கும் கொஞ்சம் இடம் அளிக்க வேண்டும்'' என்று கொஞ்சும் மொழிகளால் சொல்லிப் பிறகு மெதுவாக அவனை நெருங்கி அவனுடைய திரண்ட புஜங்களைத் தொட்டாள்.

திடீர் என்று 'தேனார்மொழி' என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்கவே அவள் திகைப்புற்றுத் திரும்பினாள். பூதுகன் பரபரப்போடு விழித்தான்.

எதிர்பாராதவண்ணம் அங்கு வந்து காட்சியளித்த அந்த மனிதரின் உருவமும் அலங்காரமும் அவர் பரம சிவ பக்த சிரோமணி என்பதைத்தான் எடுத்துக் காட்டின. சிப்மவர்மனை வழியனுப்பி விட்டு வந்த தேனார்மொழியாள் கதவைத் தாளிடாமல் வந்துவிட்ட பிசகை அப்பொழுதுதான் உணர்ந்தாள். பரங்கிப் பழம் போன்ற சிவந்த குட்டையான உருவம்; மொட்டைத் தலை; இடையில் துல்லியமான ஒரே வெள்ளை வஸ்திரம்; கழுத்தில் பருத்த உத்திராட்ச மாலை; நெற்றியையும் உடம்பையும் பூரணமாக மறைத்திருந்த விபூதிப் பூச்சு. அவருடைய வயதை ஐம்பதுக்கு மதிப்பிடலாம். முதுமை காரணமாகச் சிறிது ஒளி மழுங்கியிருந்த அவர் கண்களில் அப்பொழுது ஏதோ கோபக் கனல் வீசியது போலத்தான் இருந்தது.

அந்த மனிதர் தேனார்மொழியாளிடம் நெருங்கிப் பழகினவராகத்தான் தோன்றினார். தேனார்மொழியாள் அவர் கண்களில் தெரிந்த கோபத்தைப் பார்க்கப் பயந்தவள்போல் தலைகுனிந்து கரம் குவித்துத் தன்னுடைய வணக்கத்தை அவருக்குத் தெரியப்படுத்தினாள். அந்த மனிதர் தேனார்மொழியாளுக்குச் சமீபமாக நின்ற பூதுகனை ஏற இறங்க ஒரு தடவை பார்த்தார்.

பூதுகன் அவருடைய எதிர்பாராத வரவைக் கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்தவனாகவோ லட்சியம் செய்தவனாகவோ தோன்றவில்லை. பார்ப்பதற்குப் பெரிய சிவ பக்தராகத் தோன்றும் அவருக்கு மரியாதையோ வணக்கமோ செலுத்த விருப்பமில்லாதவன் போல், தான் உட்கார்ந்திருந்த ஆசனத்தை விட்டு எழுந்திருக்காமல் வேறு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவன் போல் இருந்தான்.

சிவ பக்தி மிகுந்த நந்திவர்மனின் ஆட்சியில் இத்தகைய சிவபக்தர்களுக்கெல்லாம் பேராதரவும் மதிப்புமிருக்குமென்று அவனுக்கு நன்றாகத் தெரியும். அதிலும் அங்கு வந்துள்ள மனிதர் அரசனோடு நெருங்கிய உறவு கொண்டவராகத்தான் இருப்பார் என்றும் அவன் எண்ணினான். அரசரோடு மிக நெருங்கிய தொடர்பும், அரசாங்கத்தில் பெரு மதிப்பும் கொண்ட சிவபக்தருக்குத் தேனார் மொழியாள் போன்ற ஒரு இசைக் கணிகையிடம் அதிகாரம் செலுத்தக் கூடிய உரிமை ஏற்பட்டிருந்தால், அது அதிசயமான தல்லவா? ஏதோ அவர் தம் அதிகாரத்தைக் காட்டுவதற்குத்தான் தேனார்மொழியாளின் வீட்டை அடைந்திருக்கிறாரென்று அவன் தீர்மானித்தான்.

திடீரென்று 'தேனார் மொழி' என்று உரத்த குரலில் கூப்பிட்ட வண்ணம் தோன்றிய அந்த மனிதர் எதிர் பாராத வண்ணம் அங்கு ஏதோ காட்சியைக்



கண்டவர் போல் பிரமிப்படைந்து நின்று விட்டார். அவர் மறுபடியும் 'நமச்சிவாய' என்ற தொடக்கத்தோடு பேச ஆரம்பித்தார். ''தேனார்மொழி! பிறை சூடிய பெருமானையே தன் குல தெய்வமாகக் கொண்ட மன்னர் பிரானது இசைக் கணிகையாகிய நீ தகாத சில செய்கைகளில் ஈடுபட்டுள்ளாய் என்று கேள்விப்பட்டு நான் வந்தேன்.''

பூதுகன் அந்தச் சிவனடியாரின் பேச்சை மிகக் கவனத்தோடும் ஆர்வத்தோடும் கேட்டவனாகவோ, கேட்காதவனாகவோ தோன்றவில்லை. அவன் இன்னும் ஏதோ ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருப்பவன் போலத் தோன்றினான். தேனார்மொழியாள் குவித்த கரத்தோடு தலை குனிந்த வண்ணமே நின்று கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில் அவன் எப்படி அந்தச் சிவபக்தரின் வரவை எதிர்பார்க்க வில்லையோ, அப்

படியே அவர்களின் வார்த்தையையும் எதிர்பார்க்கவில்லை. வேறொரு சந்தர்ப்பமாக இருந்தால் தேனார்மொழி குற்றஞ் செய்தவளாக இருந்தாலும் அந்தக் குற்றத்தை மறுத்துப் பேசும் துணிவு அவளுக்கு ஏற்பட்டிருக்கும். ஆனால் இந்தச் சந்தர்ப்பம் அவளாக எந்தக் குற்றத்திலும் படாதவளாக இருந்தாலும் ஏதோ குற்றம் செய்து விட்டவள் போன்ற உணர்ச்சிதான் அவளை அழுத்தியது. பயம் நிறைந்த குரலில், ''சுவாமி! அன்பே சிவம் என்ற கொள்கையையுடைய நாம் யாரை உலகத்தில் வெறுக்க முடியும்? அதிலும் நான் பெண்—அடிமை. எனக்கு அரசாங்க சம்பந்தமாக நடக்கும் சூழ்ச்சிகளோ அதற்குக் காரணங்களோ தெரியாது. அரசாங்கத்தில் ஆதரவும் பெருமதிப்பும் பெற்றவர்களுக்கு நானும் மதிப்புச் செலுத்தத்தானே வேண்டியிருக்கிறது? ஆனால் அவர்களுடைய காரியங்களும் சூழ்ச்சிகளும் எனக்கும் தெரியாது. அதில் நான் கலந்து கொள்ளவுமில்லை'' என்றாள்.

அப்பொழுது அங்கு சிவனடியார் கோலத்தில் வந்த அந்த மனிதர் வேறு யாருமில்லை. பல்லவ மன்னனும் சிறந்த சிவ பக்தனுமான நந்திவர்மனின் அந்தரங்க நண்பரும் மதாச்சார்யன் போலவும் விளங்கிய அகத்தீசனடியார்தான். சிவபெருமானிடம் பெரும் பக்தி கொண்ட அவர் அரசனிடமும் பேரன்பு கொண்டிருந்தார். எப்பொழுதும் சிவனையே நினைந்திருக்கும் அவருள்ளத்தில் எதிராளிகளின் நடத்தைகளையும் சூழ்ச்சிகளையும் பற்றிய கவலையும் சிறிது உண்டு. சிவனை நினைந்து வாழ்நாளைக் கழித்துவிட வேண்டுமென்ற ஆசை கொண்ட அவருக்கு மன்னனைப் பற்றிய கவலையே உலகில் ஒட்டிய பந்தமாக இருந்தது. அவர் தன்னிடமும் அரசாங்கத்தினிடமும் எத்தகைய கவலைகொண்டிருக்கிறார் என்பதை மன்னன் அறிந்து கொள்ளாவிட்டாலும் அவன் அறியாத வண்ணமே மன்னனுக்கும் ஈசனுக்கும் தாம் கடமைப்பட்டவரென்று எண்ணி அரசாங்க நடவடிக்கைகளின் போக்கைக் கவனித்து வந்தார்.

அன்று மாலை பூதுகன் அந் நகருக்கு வந்ததும் அவன் தேனார் மொழியாளின் வீட்டை யடைந்ததும் அவனுக்குப் பின்னர் சிம்மவர்மன் தேனார் மொழியாளின் வீட்டுக்கு வந்து போன விஷயமும் அவர் காதில் எப்படியோ எட்டியிருக்க வேண்டும்.

சிம்மவர்மனின் சூழ்ச்சிகளில் அவருக்குக் கவனம் உண்டு. பூதுகனின் கொள்கைகள் பற்றியும் அவர் ஓரளவு அறிந்துதானிருக்க வேண்டும். இந் நிலையில் சிறந்த சிவபக்தை போல் விளங்கும் இசைக் கணிகையாகிய தேனார் மொழியாள் இத்தகையோரிடம் நட்பு கொண்டிருப்பதுபற்றி அவருக்குக் கவலை ஏற்படாதா? வரும்போது அவர் சிறிது கோபத்தோடு வந்தார். அதுவும் பூதுகனும் தேனார்மொழியாளும் இருந்த நிலைகண்டு அவருடைய கோபம் இன்னும் அதிகரித்தது. ஆனால் அவருடைய கோபம் படிப்படியாக எவ்வளவு அதிகரித்ததோ அப்படியே படிப்படியாகத் தணிந்தது. அதற்குக் காரணம் அங்கு அமர்ந்திருந்த பூதுகன் நிலையை அவர் பார்த்ததினால் தான் என்று சொல்லி விடலாம். பூதுகன் இருந்த நிலையிலிருந்து அவன் கொஞ்சங் கூட நெஞ்சை இளகவிடாத பக்குவ நிலையில் உள்ளவன் என்பதையும் கணப் பொழுதில் உணர்ந்து கொண்டார். ''தேனார் மொழி! பூம்புகாரிலிருந்து பூதுகனென்ற நாஸ்திகவாதி யொருவன் காஞ்சிக்கு வந்திருக்கிறான் என்று அறிந்தேன். அதிலும் அவன் உன் வீட்டில் தங்கியிருக்கிறான் என்பதை அறிந்ததும் எனக்கு மிகவும் சங்கடம் ஏற்பட்டது'' என்று சொல்லி அங்கு ஆசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்த பூதுகனைச் சந்தேகக் கண்களோடு பார்த்தார்.


அவர் சொல்லிய வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் வேறெங்கோ பார்த்தவண்ணம் அசையாமல் உட்கார்ந்திருந்தான் பூதுகன்.

தேனார் மொழியாள் சிறிது அச்சம் நிறைந்த குரலில், ''தாங்கள் சொல்லும் பூதுகன் இவர்தான். எங்கள் ஊராகிய குடந்தைக்குச் சமீபமுள்ள திருப்புறம்பயத்தைச் சேர்ந்தவர். எனக்கு ஒரு முறையில் அத்தை மகனாக வேண்டும். இசையில் மிகவும் பற்றுதல் உள்ளவர்.........'' என்று சொல்லிக் கொண்டு வரும்போதே பூதுகன் சட்டென்று எழுந்தான். ''ஆம், எனக்கு இசையில் மிகப் பற்றுதல் உண்டு. பாடுவதிலும் யாழ்வாசிப்பதிலும் சிறிது பயிற்சி உண்டு'' என்று சொல்லிக் கொண்டே அவருடைய பதிலை எதிர்பார்க்காமல் சட்டென்று அங்கு தேனார் மொழியாள் வைத்திருந்த வீணையை எடுத்து வைத்துக் கொண்டு மீட்டிய வண்ணமே ''அன்பே சிவம், அருளே சிவம், என் போல் ஈனர்க்கு இரங்கும் சிவமே'' என்று பாடத் தொடங்கினான். பூதுகனின் பொருளும் சுவையும் நிறைந்த இசையைக் கேட்டதும் அகத்தீசனடிகள் அப்படியே திகைப்படைந்து நின்று விட்டார். (தொடரும்)


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


நான் ஒருபொழுதும் அவை இல்லாமல் இருப்பதில்லை
WILLS'S
Berkeley

தற்பெருமை



தேவியின் கடிதம்

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

உன் கடிதம் கிடைத்தது. தற்பெருமையாகப் பேசுவது அப்படி என்ன பெரிய குற்றமா என்று கேட்டிருக்கிறாய்.

பொதுவாகத் தற்பெருமையாகப் பேசுவதில் பிறருக்குத் தீங்கு செய்தவர்களாக ஆக மாட்டோம், பெரிய குற்றமும் இல்லை. ஆனால் தற்பெருமையைப் பிறர் விரும்பிக் கேட்பதில்லை. நாகரிகம், பண்பு என்று நாம் சொல்வதெல்லாம் பிறர் மனம் மகிழ்ச்சியுறுமாறு எண்ணுவது, நடந்து கொள்வது, பேசுவது எல்லாமாகும். அதே சமயம் நம்மை ஒரு அறிவாளியாகவும், மரியாதை தெரிந்து பண்பட்டவர்களாகப் பிறர் மதிக்குமாறும் நம்மை உயர்த்திக் கொள்ளுகிறோம். பகுத்தறிவு பெற்ற ஒவ்வொருவரும் இவற்றை எளிதாகப் புரிந்து கொள்ளுகிறார்கள்.

ஒரு அறிஞர் ஒவ்வொருவரையும் மூன்று பேர்களாகக் கணக்கிட வேண்டுமென்றார். அதாவது ஒரு பெண்ணோ ஆணோ தன்னைப் பற்றி அவர்கள் நினைப்பது ஒன்று. பிறர் அவர்களைப் பற்றி நினைப்பது இரண்டு. உண்மையாகவே அவர்களுடைய நிலை மூன்று. அதைப்போல் நம்மைப்பற்றி அதிகப் பெருமையாக நினைக்கலாம். அதில் கெடுதல்தான் அதிகம். நம்முடைய குணங்கள் வளர்வதற்கு ஓரளவு அது தடையாக இருக்கும். அந்தப் பெருமைகளைப் பிறர் காதுகள் கசக்கும்படி சொல்வது பண்பாட்டுக் குறைவாக முடியும்.

சுஜாதா! ஒரு சின்ன விஷயத்தை நாம் நினைவுபடுத்திக் கொண்டால் போதுமானது. உண்மையாகவே நமக்குப் பெருமைகள் இருக்குமானால் அவற்றை யாராலும் மறைக்கமுடியாது. மூடிவைக்கும் விஷயமல்ல அது. கீர்த்தி தனக்குத் தானாகவே உயர்வைத் தேடிக் கொள்ளும். பெருமைகளை நாமே சொல்லிக் கொண்டு போனால் சிறுமையாகிவிடும்.

தன்னைப்பற்றிச் சொல்லிக் கொள்ளாமல் இருப்பது சாத்தியமா? அதுவும் இந்தக் காலத்தில் தானாகவே சொல்லிக் கொண்டு முன் வராவிட்டால் ஒருவரும் லட்சியம் செய்யாமல் இருக்கிறார்களே என்றெல்லாம் கேட்கலாம். தன்னைப்பற்றியே பேசாமல் இருப்பவர்கள் ஞானிகள். சாதாரணமாக நம்மைப் போன்றவர்களுக்கு அது அசாத்தியம்தான்! என்றாலும் எடுத்ததற்கெல்லாம் தற்பெருமை பேசிப்பிறரை அலுப்புறச்செய்து நம் மதிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டாமென்றுதான் நான் கருதுகிறேன். என் சிநேகிதியை உனக்கு நினைவு இருக்கலாம். அபூர்வமாக ஒரு பொருளைக் காட்டி வாங்கினதாகச் சொன்னால், உடனே இதைவிட நூதனப் பொருள்கள் தான் வாங்கி ஒரு காலத்தில் குவித்ததாகச் சொல்வாள். சாப்பிடும் பொருளைக் கொடுத்தால், தான் அவ்வளவு உயர்வாகச் செய்ததை உலகமே புகழ்ந்தது என்பாள்! யார் வீட்டிலாவது ஒரு குழந்தை அழகாக இருந்தது என்றால் உடனே என் பெரிய பெண் சுந்தரவடிவமாக இருந்தாள் என்று ஆரம்பித்து விடுவாள். ஒரு காலத்தில் தானிருந்த சீரையும் சிறப்பையும் பற்றியே பேசி அலுக்கச் செய்துவிடுவாள். அவளுடைய பெருமைகளைக் கேட்க நமக்குப் பொறுமை வேண்டும். மறைவில் மற்றவர்கள் ஏளனமாகப் பேசுவது அவளுக்குத் தெரியுமா?

இன்னொரு தோழிக்குத் தன்னுடைய அழகில் அபார நம்பிக்கை. சின்ன வயதில் அவள் தான் இருந்த அழகைப்பற்றியே வர்ணிப்பாள். ஆனால் அந்தச் சமயத்தில் அவள் அழகைப் பற்றிச் சொல்லிக் கொள்ள முடியாத தாபமாகவும் இருக்கலாமல்லவா?

சுற்றத்தில் யாராவது நல்ல நிலையில் இருந்தால் அவர்களைப் பற்றியும், தான் இருபத்தி நான்கு மணி நேரமும் கூடவே பழகுவது போலவும் பெருமைப்படுவது விரும்பத்தக்கதல்ல. உண்மை அப்படி அல்ல என்று பிறருக்குத் தெரிந்திருப்பதை நாம் மறக்கக் கூடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு மிகவும் பிரியமான ஒரு தோழியை உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். நன்றாக வடமொழி பயின்று தேர்ச்சி பெற்றவள், விவேகி; கஷ்டங்களைக் கண்டு மனம் தளராதவள். அந்தத் தோழி பிறருடைய சிறிய செயல்களைக்கூட அரிதாகப் பாராட்டுவாள். எல்லோரும் அழகாக இருப்பதாகச் சொல்லி சந்தோஷப் படுவாள். இவை சிறந்த அம்சங்கள். மிக அவையடக்கமுள்ள அந்தத் தோழியைப்பற்றி நான் பெருமைப்படுகிறேன்.


இப்படிக்கு,

பூமாதேவி

இது மேன்மையானது; அழகானது

உங்களுக்குச் சௌகரியம், சவாரி சுகம், மற்றும் ஆனந்தம் அளிப்பதற்கேற்றவாறு அபிவிருத்திகள் மற்றும் நாசூக்கான வேலைப்பாடுகளுடன் அமையப் பெற்ற இதன் நவீன அம்சங்களைச் சற்று கவனியுங்கள். இது ஓட்டவும், நிர்வகிக்கவும் செட்டாக உள்ளது. உங்கள் வியாபாரியிடம் இந்த பியட் தி எலிகென்ட் காரைப் பார்வையிடுங்கள்.

பியட் 1100 தி எலிகென்ட்



அதிக விலையில்லாமல் கீழ்க்கண்ட புதிய அம்சங்கள் கிடைக்கின்றன.

ஸ்பேர் வீல் லக்கேஜ் பூட்கீழ் எடுப்பதற்கு சுலபமாக உள்ளது.



பின் ஸீட் மடித்து லக்கேஜ் பெட்டிக்கு சமமாக வைப்பதற்கு சௌகரியமாக உள்ளது.



இன்ஸ்ட்ருமெண்ட் பேனலில் கிளியர் ஸ்கேல் ஸ்பீடா மீட்டர் மற்றும் ரப்பர் மோல்டிங் பாதுகாப்புள்ள க்ளெவ்பாக்ஸ்.



நடுவில் அமைக்கப்பட்டுள்ள பாக் லைட் டிராபிக்கேட்டர்ஸ், ஸைட் லைட்ஸ் கூடிய முன் க்ரில்.



படிப்படியாக தயாரிப்பவர்கள் :

தி பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் லிட் ஆக்ரா ரோடு, பம்பாய் 37

உங்கள் அருகாமையில் உள்ள டீலரை விசாரியுங்கள்


உங்களுடைய ஆடைகளுக்கும்
டினோபால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான்
கவனிக்கிறேன்
வெண்மையாக்க வேண்டிய வெள்ளை துணிகளுக்கு டினோபால்தான் பழமொழி. சிறிது அளவு டினோபால் நீண்டநாள் தாங்கும். மூன்று, நான்கு சலவைகளுக்கு ஒரு தடவை டினோபால் உபயோகித்தால் போதும்.
டினோபால்
அமால்கமேட்டட் கெமிகல்ஸ் அண்டு டைஸ்டப்ஸ் கம்பெனி பிரைவேட் லிட்.
பி. ஓ. பாக்ஸ் 965-பம்பாய்.

இலக்கியச் செல்வம்: 25

புதுமெருகு

பேராசிரியர்: அ. சீநிவாசராகவன்



பாட்டியும் பேரனும் தெருவிலே நடந்தனர். மஞ்சள் நிறக் குருவி ஒன்று பொன் இழைபோல விர்ரென்று அந்தியின் செவ்வொளியில் பாய்ந்து சென்றது.

'அது என்ன குருவி, பாட்டி?'

'அதுவா.....அது......அப்புறம் சொல்றேன்...'

'என்ன குருவி சொல்லேன்?'

குருவி போன திசையைப் பார்த்துக் கொண்டு பேரன் நின்று விட்டான். இதற்குள் கோயில் மணி அடிக்கத் தொடங்கியது, பாட்டிக்குப் பரபரப்பு.

'நேரமாகி விட்டது. வா! குருவியைப் பார்த்துக் கொண்டு நிற்காதே! கோயிலுக்குப்போவதற்குள் நீபாராதனை ஆகிவிடுமோ என்னவோ? மறுபடியும் பாரேன், அங்கே என்ன?'

பூக்கடையில் தொங்கிய கதம்ப மாலைகளைப் பார்த்துக் கொண்டு பேரன் நின்று விட்டான்.

'அடேயப்பா எத்தனை பூ! இது என்ன பூ, பாட்டி?' பாட்டி பதில் சொல்வதற்குள்—அவளுக்குப் பதில் தர நேரமில்லை—பேரன் வேறு கேள்விகளைக் கேட்கத் தொடங்கி விட்டான்.

'இவன் ஏன் பாட்டி, பிச்சை போடுங்க தரும ராசான்னு கத்தறான்?'

'தரும ராசான்னு யாரு?'

'அதோ அடிக்கிறானே, அது தவுல்

தானே? டமாரமா? அதுக்குள்ளே என்ன இருக்கு?'

'யானை...யானையடோய்..யானை ஏன் பெரிசா இருக்கு? அது மிட்டாய் தின்னுமா?' இப்படிப் பலப் பல கேள்விகள்.

பாட்டி பார்த்தாள். இந்தக் கேள்விகளுக் கெல்லாம் இப்போது பதில் சொல்லமுடியுமா? கோயிலுக்குப் போக வேண்டுமே! பேரனுடைய கையைப் பிடித்துக் கொண்டு 'நேரமாச்சு, வா போகலாம்!' என்று கோயிலுக்குள்ளே அவனை அழைத்துச் சென்றாள். திரும்பித் திரும்பி, பூவையும், பிச்சைக்காரனையும், தவிலையும், டானையையும் பார்த்துக் கொண்டு பேரனும் போனான்.

காவியம் என்ற தெருவிலே நடந்து செல்கின்ற போது, இந்தப் பேரனைப் போலத்தான் நாமும். போகின்ற வழியிலே, எத்தனையோ கிளைக் கதைகள். அந்த மஞ்சள் குருவியைப் போலச் சரேலெனத் தோன்றி நம்முடைய கவனத்தைக் கவர்ந்து, பிறகு போன திசை தெரியாமல் மறைகின்ற சிறு பாத்திரங்கள். பக்கத்திலே வந்து முகத்தைக் காட்டி, பிறகு எங்கேயோ தொலைவிலிருந்து மெல்லிய இனம் புரியாத குரலில் நம்மை அழைக்கின்ற கருத்துக்கள். இவற்றையெல்லாம் நின்று பார்த்து, ஒவ்வொன்றையும் விவரமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நமக்கு ஆசை. இந்த ஆசை உண்டாவதே, காவியம் எவ்வளவு ரஸமாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு அடையாளம். நம்முடைய மனத்தில் எத்தனையோ கேள்விகள். ஆனால் இவற்றுக்கெல்லாம் பதில் தருவதற்குக் கவிஞனுக்கு நேரம் இருப்பதில்லை. காவியக் கதையின் முக்கிய சம்பவங்களை நோக்கி, கோயிலை நோக்கிப் பாட்டி விரைந்தது போல், அவன் விரைகின்றான். வழியிலே நமக்குத் தென்படும்—அதாவது, அவன் அமைத்துக்காட்டும்—, கிளைக் கதைகளையும் காட்சிகளையும் முழுவதும் விரித்துக் காட்ட அவனுக்கு முடிவதில்லை. மேலெழுந்தவாறாக, சுருக்கமாக, குறிப்பாக, அவற்றைச் சொல்லிவிட்டு மேலே செல்கின்றான். அவனோடு செல்கின்ற நாமோ, அவற்றைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போகிறோம். அவை அவ்வளவு ரஸமாக இருக்கின்றன.


இப்படி ரஸமாக உள்ள கிளைக் கதைகள் பல இராமாயணத்திலும் உண்டு. அவற்றில் ஒன்று கலைக்கோட்டு முனிவரைப் பற்றிய கதை. அங்க நாட்டில் மழையே இல்லாமற் போயிற்று. கலைக்கோட்டு முனிவன் நாட்டிலே அடி வைத்தால் மழை பொழியும் என்று முனிவர்கள் சொன்னார்கள். கலைக்கோட்டு முனிவன் இளம் பிராயத்தினன். ஆனால் காட்டிலே, மனிதத் தொடர்பு எதுவுமின்றி வாழ்பவன், சமுதாய வாழ்வைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் கள்ளங் கபடற்ற சிந்தையோடு இருப்பவன். அவன் எப்படி அங்க நாட்டுக்கு வருவான்? 'அவனை நாங்கள் எப்படியாவது அழைத்து வந்து விடுகிறோம்' என்று பொது மகளிர் சிலர் புறப்பட்டுப் போகிறார்கள். இவர்களைப் பார்த்தவுடன், கலைக்கோட்டு முனிவன் முதலில் இவர்களையும் ஏதோ முனிவர்கள் என்று எண்ணுகிறான். அவர்களோடு மனத்திலே இளமையின் விகாரம் எதுவும் இல்லாமல் பழகுகிறான், போகிறான். அங்க நாட்டுக்கே போய் விடுகிறான். அங்கே மழை பெய்கிறது. இதுதான் கதை.

கம்பருடைய இராமாயணத்தில் இந்தக் கதை இருபத்தொரு பாடல்களில் சுருக்கமாகத் தரப்பெறுகிறது. கலைக்கோட்டு முனிவனை அழைக்கச் சென்றவர்கள் பொது மகளிர். மிகுந்த அழகு உடையவர்கள்.

சோதிநுதல், கருநெடுங்கண், துவரிதழ்வாய்,
தரளநகை, துணைமென்கொங்கை
மாதர்

[சோதிநுதல் - ஒளி பொருந்திய நெற்றி; துவரிதழ்வாய் - சிவந்த உதடுகள் கொண்ட வாய்; தரள நகை - முத்துச் சிரிப்பு.]

என்று அவர்களை அறிமுகம் செய்கிறார் கவிஞர். காட்டிலே நடந்தது என்ன என்பது பற்றி விரிவான செய்தி ஒன்றும் கம்பர் தரவில்லை. வான்மீக முனிவர் இயற்றிய ஆதிகாவியத்திலும் அதிகமாக ஒன்றுமில்லை. ஒருபுறம், தமது அழகாலும் ஆடல் பாடலாலும் ஆடவரை மயக்கும் பொது மகளிர்; மற்றொருபுறம் யௌவனப் பருவத்தில், ஆனால் குழந்தை உள்ளத்தோடு நிற்கும் முனிவன். இந்தச் சந்திப்பில் தான் மனத்தின் விசித்திரமான கதிகளையும், நுட்பமான உணர்ச்சிகளையும் காட்டுவதற்கு எவ்வளவு வாய்ப்பு இருக்கிறது! இது பெருங் கவிஞர்களான வான்மீகிக்கும் கம்பருக்கும் தெரியாதா? மனித உணர்ச்சிகளின் அடி ஆழத்தைத் தொட்டுப் பார்க்கும் அவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? நன்றாகத் தெரியும். ஆனாலும், அவர்கள் தங்கள் காவியத்தில் இராமன் அவதாரம் செய்த நிகழ்ச்சியை நோக்கி விரைகிறார்கள். தசரதன் புத்திர காமேஷ்டி யாகம் செய்வதற்குக் கலைக்



இப்போது இந்தியாவில் உங்களுக்கு கிடைக்கிறது
பாமாலிவ் டால்கம் டீ-லக்ஸ்
நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த டால்கம் பவுடர்! உண்மையிலேயே நேர்த்தியான டால்கின் சகல குணங்களுடன், ஒரு புதிய ரம்மிய வாசனையும் சேர்ந்தது! வெறியூட்டும் 17 செண்டுகளின் அற்புதக்கலவை சேர்ந்த பாமாலிவ் டால்கம் டீ-லக்ஸின் நறுமணம் உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம் அடையச் செய்யும்... மணிக்கணக்காக உங்களுக்கு குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கும்!
அக்குளில் சுத்தமும் சௌகர்யமும்
குழந்தைக்கு இதம் அளிக்க அதை தாராளமாகப் பூசுங்கள்
எரிச்சலைத்தடுக்க மேலெங்கும் அதை உபயோகியுங்கள்
சோர்ந்த பாதங்களுக்கு இதமும் புத்துணர்ச்சியும் அளிக்க
PALMOLIVE
Talcum Powder
DE LUXE
பாமாலிவ் டால்கம் டீ-லக்ஸ்



நோபெயின் உபயோகியுங்கள்
கால்கெமிகோ வின வலிநீக்கும் களிம்பு
நோபெயினை சற்றே தேய்த்து வியக்கத்தக்க வலிநிவாரணத்தைப் பெறுங்கள்
நோபெயின் களிம்பின் பல உபயோகங்களில் சில
NOPAIN
தசை வலி
மார்புச் சளி
இடுப்பு வலி
சுத்தமாக ஸீல்வைத்த டியூபுகளில் சப்ளை செய்யப்படுகிறது
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட். கல்கத்தா-29
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1

மக்ளீன்ஸ் *இப்போது* பற்களை முன்னைவிட அதிவெண்மையாக சுத்தம் செய்கிறது!



மகத்தான ஓர் செய்தி! மக்ளீன்ஸ் தயாரிப்பில் இப்போது வியக்கத்தக்கதோர் புதிய பொருள் சேர்க்கப்படுவதால் அதை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யும்பொழுது பற்கள் முன்னைவிட அதிவெண்மையாகவும் சுத்தமாகவும் விளங்குவதுடன் நல்ல ஆரோக்கியத்தைக் குறிக்கின்றது. நீங்களும் மக்ளீன் பற்பசையை உபயோகித்து உங்கள் பற்கள் எவ்வளவு வெண்மையாக விளங்குகின்றன 'என்று கவனியுங்கள்.

மக்ளீனால் வெண்மையாக்கப்பட்ட பற்கள்

ஆரோக்கியமானதுமட்டுமல்லாமல் பற் சிதைவினின்றும் காப்பாற்றப்படுகின்றன

மக்ளீன்ஸ் பற்பசையினால் பற்களை சுத்தம் செய்யுங்கள். முதலில் குளுமையும் புதுமை மணம் வீசுவதையும் உணர்வீர்கள். பின்பு பற்கள் முன்னைவிட அதிவெண்மையாக சுத்தம் செய்யப்பட்டிருப்பதை குறிக்கின்றது. உங்களுடைய பற்களின்மேல் படர்ந்திருக்கும் வழுவழுப்பான அசுத்தத்தில் 'லேப்பாமிட்ஸ்' என்று கூறப்படும் அசுத்தம் கலந்திருக்கிறது இந்த 'லேப்பாமிட்ஸ்' முறையே சரிவர அகற்றப்படா விட்டால் அமிலங்கள் பற்களின் இனாமலை அரித்து, பற்கள் சிதைவடைகின்றன. 'லேப்பாமிட்ஸ்'ஸை அறவே அகற்ற, இதை கரையச் செய்வதுதான் சரியான வழி. மக்ளீன்ஸ் பற்பசை ஒன்றில் மட்டுமே 'லேப்பாமிட்'டை கரைக்கக்கூடிய விசேஷ பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது 'லேப்பாமிட்டை' மிருதுவாக, அபாயமின்றி. சீக்கிரத்தில் கரைந்து அப்புறப்படுத்துகிறது. இதுவே பற் சிதைவினின்றும் பற்களைத் தவிர்ப்பதற்கான சிறந்த மார்க்கம்.

சுத்தமான, வெண்ணிற, ஆரோக்கிய பற்களை அடைய தினந்தோறும் காலையிலும் இரவிலும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யுங்கள்.

மக்ளீன்ஸ் பற்களை
அதிவெண்மையாக
சுத்தம் செய்கிறது



MTY 43 TAM

கோட்டு முனிவனை துணை செய்கிறான். அந்த அளவுக்கு முனிவனைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கம் தரவேண்டி இருக்கிறது. அதைத் தருகிறார்கள். அவ்வளவுதான். அதற்குமேல் கலைக்கோட்டு முனிவனைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அவனைப் பற்றி விரிவாகப் பேசவும் நேரமில்லை.

வால்மீகிக்குப் பின், பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய வங்காள கவிஞர் ரவீந்திரநாத தாகூர், கலைக் கோட்டு முனிவரைப் பற்றி இராமாயணத்தில் வரும் வரலாற்றின் அடிப் படையில் புதிய பாடல் ஒன்று புனைகிறார். 'முனிவனை மயக்கச் சென்ற பெண்களில் ஒருத்தி, அம் முனிவனுடைய தேஜஸில், மயங்கி விடுவதாக வைத்துக் கொண்டால் என்ன? கலைக் கோட்டு முனிவனும், இப் பொது மகளிரின் உண்மையான தன்மையை உணராமல், அவர்களை எங்கிருந்தோவந்த தெய்வங்கள் என்று எண்ணலாம் அல்லவா? இந்த எண்ணத்தோடு பேசும் முனிவனுடைய தூய்மையும், களங்கமற்ற குழந்தைப் பாங்கும், பொது மகள் ஒருத்தியின் அழுக்கைத் துடைத்து, அவளைத் தெய்வமாகவே ஏன் ஆக்கக் கூடாது?' இப்படி எல்லாம் ஆதி காவியத்தில் உள்ள சிறுகதை ஒன்றைப் பற்றிக் கவிஞர் தாகூர் எண்ணுகிறார். அதிலிருந்து அழகிய பாடல் ஒன்று பிறக்கிறது.

கலைக்கோட்டு முனிவனை மயக்குவதற்குப் பதிலாக, அவனிடம் நெஞ்சைப் பறி கொடுத்து விட்டு, மாசடைந்த தன் உடலால் அவனை நெருங்கவும் தகாது என்று எண்ணி, ஊருக்குத் திரும்புகிறாள்; துடிதுடித்துப் புழுங்கிய மனத்தோடு திரும்புகிறாள் ஒருத்தி. நேரே அரசனுடைய மந்திரியிடம் போகிறாள். 'ஐயா, மந்திரக் கிழவரே, இதோ நீர் தந்த பணம். நீர் சொன்னபடி கலைக் கோட்டு முனிவரை மயக்க என்னால் முடியவில்லை. ஏன்...? ஐயோ, அதை ஏன் கேட்கிறீர்கள்?' என்று காட்டிலே தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்கிறாள். அவள் பேச்சாக அமைந்துள்ளது ரவீந்திர நாதரின் பாடல். அதைக் கேட்போம்:

'ஐயா, பெரியவரே. மந்திரக் கிழவரே.
இதோ நீர்தந்த காசு, எடுத்துக் கொள்ளும்.
காடு என்ற கோவிலில் வளர்ந்த அந்த
இளந் துறவி.
அவனை, பெண்முகமேபார்த்தறியாத அவனை
வலை வீசி மயக்கி அழைத்து வர
மகளிரை அனுப்பினீர் அல்லவா?
அவர்களில் நானும் ஒருத்தி.
ஆனால், உமது கட்டளையை நிறைவேற்றத்
தவறியவள்......
பொழுது புலரும் வேளையில், அதன்
மங்கிய ஒளியில்,
ஆற்றிலே புனலாட,
அவன் வந்தான். அந்த இளந்துறவி.
கார்கால வானத்தில் படரும் மேகத்
திரளைப் போல,
அவன் கேசம் தோளிலே விழுந்து.
மின்னிப் புரண்டது.
வெயில் ஒளிக் கதிர் போல், அவன்
மேனி சுடர்ந்தது.
நாங்கள்......
அவன் அருகிலே படகைச் செலுத்தினோம்,
நகைத்தோம், பாடினோம், நதியினில்
குதித்தோம்.
வெறி கொண்டவர் போல, புனலை அளைந்து
விளையாடினோம்.
அவனைச் சுற்றிச் சுற்றிக் குதித்தோம்.
ஆற்று வெள்ளத்தின் விளிம்பிலிருந்து
சூரியன் எழுந்து, எட்டிப் பார்த்தான்.
எங்களைக் கண்கொட்டாமல் நோக்கினான்.
தெய்வச் சினத்தின் வெப்பு அவன்
முகத்திலே படர்ந்தது.
இளந்துறவி, தெய்வ மதலையைப் போல்,
கண்களை விரித்து, அகல விரித்து
நாங்கள் ஆடிய கூத்தை யெல்லாம்
பார்த்தான்.
அவன் விழியிலே வியப்பு ஊறியது,
வெள்ளமாய்த் திரண்டது.
விழியும் விடிவெள்ளியென ஒளிர்ந்தது.
கைகளைக் கூப்பினான்.
பறவையொலி போல் தெளிந்து சிலம்பிய
இளங் குரலில்
ஏதோ பாடினான்.
பாடலைக் கேட்டு, காட்டில் ஒவ்வொரு
இலையும் சிலிர்த்தது.
மானிடப் பெண் ஒருத்தியை,
இது வரையில் இதுபோன்ற சொற்களில்
ஒருவரும் பாடிப் பரவியதில்லை.
பாடலா அது? சொல் அவிந்த மனத்
தொடர் ஒன்று
வைகறைக்குப் பாடும் மோன கீதத்தைப்
போன்ற
மந்திரப் பாடல்.
என்னுடன் வந்த பெண்கள்
கையால் வாயைப் பொத்திக் கொண்டு
உடல் குலுங்கக் குலுங்கக்
கேலிச் சிரிப்புச் சிரித்தனர்.
அவன் முகத்தில், ஏன் என்ற கலக்கம்
ஒரு கணம் வெட்டி மறைந்தது.
வேதனையோடு அவனை நெருங்கினேன்,
காலில் விழுந்து வணங்கினேன்.
'ஐயனே, என் பணியை ஏற்றுக் கொள்'
என்று தொழுது வணங்கினேன்.
கரத்தைப் பற்றி, பசும்புல் தரைக்கு அவனை
அழைத்துச் சென்றேன்.
என் பட்டு மேலாக்கால் அவன் மேனியைத்
துடைத்தேன்.
தரையிலே மண்டியிட்டு அமர்ந்து,
அவிழ்ந்து புரண்ட என் கூந்தலால்
அவன் பாதங்களை ஈரமில்லாமல்
துடைத்தேன்.
மெல்ல என் முகத்தை நிமிர்த்தி
அவன் விழிகளுள் நோக்கினேன்.
என் உள்ளம் சிலிர்த்தது.
என்ன பாக்கியம் எனக்கு, பெண்ணாய்ப்
பிறந்தேன்!



என்ன பேறு இறைவனுக்கு. என்னைப்
பெண்ணாய்ப் படைத்தான்!
துறவி பேசினான்:
'நீ யார்? நான் கண்டறியாத தெய்வமா?
உன் கரத்திலே அமரஸ்பர்சம்.
உன் விழியிலே நல்விரவின் மாமாயம்'
என்று அவன் பேசினான்......
வேண்டாம், வேண்டாம், பெரியவரே
அப்படிச் சிரிக்க வேண்டாம், மந்திரத்
தலைவரே.

உலகியல் அறிவு என்ற புழுதி
உமது பார்வையை மறைத்து விட்டது
உம்மைக் குருடாக்கி விட்டது.
ஆனால் அவன், அந்த இளந் துறவி,
அவன் மாசற்ற தூய்மை
இந்த உலகின் இருட் பனிரை ஊடுருவிப்
பாய்ந்தது.

பெண்மையின் தெய்விகம்
என்ற ஒளிமயமான உண்மையைத்
தொட்டது
என் பெண்மை பெற்ற, முதன் முதலாகப்
பெற்ற
அந்த வழிபாட்டின் சிருஷ்டி ஒளியில்,
எனக்குள்ளே
அடைந்து ஒருத்தி கண் விழித்து எழுந்தாள்
என் விழிகளில் நீர் மல்கியது.
காலை வெயில், என் உடன் பிறப்பைப்
போல,
என் கூந்தலைக் கோதியது.
காட்டு வெளியிலிருந்து வந்த காற்று
அன்றலர்ந்த மலர்களை முத்தமிடுவது போல
என் முகத்தையும், முத்தமிட்டது.
பெண்கள் கைதட்டி நகைத்தனர்,
ஆரவாரக் கெக்கலி கொட்டினர்.
துகில் அவிழ்ந்து புழுதியிலே விழுந்துபுரள,
கூந்தல் கலைந்து தொங்கி அலைய
அவளை மலர்களால் எறிந்தனர்.
என்னை வெட்கம் பிடுங்கித் தின்றது.
ஆனால்...ஆனால்...அது அனலாக மாறி,
நெருப்புப் பிழம்புகளை நெய்து, அதன்
அதன் மடிப்புக்குள்ளே,
அவளை, மாசு படுவற்ற என் இளங்கனியை
அணைத்து மறைக்க இயல வில்லையே!
அவன் காலடியில் வீழ்ந்தேன்.
அம்பு பட்ட மான் போல,
காட்டுக்குள் வெளியிலும் நிழலிலும்
ஓடினேன் ஓடினேன், ஓடினேன்.
பெண்களின் ஆபாசச் சிரிப்பு
படபடவென்று தீயைப் போல வெடித்து
என்னைச் சுற்றிச் சுழன்றது.
ஆனால்...ஆனால்...என் காதிலே அவன்
சொற்கள் ஒலித்தன.
'யார் நீ? நான் கண்டறியாத தெய்வமா?'
என்ற சொற்கள் ஒலித்தன,
ஒலித்துக் கொண்டே இருந்தன.

பாடல் இவ்வளவுதான். ஆனால் மாசடைந்து, அந்த மாசையே பெருமையாக எண்ணி, அதைக் கொண்டே களங்க மற்ற உள்ளத்தை மயக்கச் சென்ற ஒருத்தி, தூய்மையின் முன் தோற்று, அதன் ஒளியில் தனக்குள்ளே இருக்கும் தெய்விகத்தைக் காண்கின்ற அற்புத அனுபவம் இங்கே வடிவாகிறது. பெருங்காவியத்தில் சுருக்கமாகக் கோடி காட்டப் பெற்ற கதை ஒன்றை, தனது கற்பனையால் துழாவிப் பார்க்கிறான், கவிஞன். அவன் பழங்கதைக்குத் தருகின்ற புது மெருகே இந்தப் பாடல்.

சங்கராபரணம்

ர.சு.நல்லபெருமாள்



நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

பல நூற்றாண்டுகளுக்கு முன் கடையம் ஒரு மிகச் சிறு கிராமம். அந்த ஊரைப் பற்றி அக்கறை கொள்வாரே இல்லை. திடீரென்று கடையத்துக்குப் புகழ் கிடைத்து விட்டது. அன்று சங்கரி அந்த ஊருக்கு வரப்போகிறாள் என்ற செய்தி கேட்டு மக்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்திருந்தனர். பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் மக்கள் கடையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். தமிழ் மூவேந்தர்களின் மதிப்பையும் பெற்ற சங்கரி கடையத்துக்கு வருகிறாள் என்றால் அது சாதாரண விஷயமா?

நாத உபாசியான சங்கரி, பிறந்த ஊர் கடையம். அவள், அந்த ஊரில் உள்ள கோவிலில் அர்ச்சகராயிருந்த, ஈசுவர பட்டரின் மகள் என்பது மாத்திரம் எல்லோருக்கும் தெரியும். ஆனால், அவள் எப்படித் துறவியானாள் என்ற விஷயம் யாருக்கும் தெரியாது.

கடையம் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கிறது. ஒரு சமயம் அந்த மலையடிவாரத்தில், மரங்கள் அடர்ந்த ஒரு இடத்தில், சங்கரி மயங்கிக் கிடந்தாள். அப்போது அங்கு வந்த வயது முதிர்ந்த துறவி ஒருவர், அவளைத் தெளிவித்து, பொதிகை மலைக்கு அழைத்துச் சென்று விட்டார். அங்குதான் அவள் துறவறம் பூண்டாள். இசையில் வல்லவளான சங்கரி, இறைவனை இசையில் உணர்ந்தாள். தெய்வத்தின் தன்மைகளைப் பற்றியும், பக்தி மார்க்கங்களைப் பற்றியும் அவள், அந்தத் துறவியிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டாள். நாத ரூபத்தில் இறைவனை உபாசித்து வந்த சங்கரியை உலகம் போற்றியது.

கடையத்துக்கு வர வேண்டும் என்று, அவளுக்கு ஆசைதான்.

ஆனால், அவளைக் காப்பாற்றிய துறவி, திடீரென்று தம் கண் பார்வையை இழந்தார்! அவருக்கு எந்நேரமும் பக்கத்திலிருந்து பணி புரியும் கடமை அவளுக்கு ஏற்பட்டது. பத்து வருடங்களுக்குப் பிறகு, அந்தத் துறவி இவ்வுலகை நீத்தார். அதன் பிறகு தான் அவள் கடையத்துக்குப் புறப்பட்டாள்.

இதற்கிடையில், அவள் செய்த சாதனைகள் அனந்தம். உலகத்தை, இசையின் சுழலில் ஆழ்த்தி, வேதனையிலிருந்து விடுவிக்க முயன்றாள். வேதத்துக்கும் உருகாத தெய்வம் நாதத்துக்கு உருகிவிடும் என்பதை நிரூபித்தாள். அவள் செல்லும் இடமெல்லாம் இசையின் போதைதான்.

அவளுடைய வருகையை எதிர்பார்த்துக் கடையத்து மக்கள் அனைவரும் ஆனந்தப்பட்ட போது, ஒரே ஒரு ஜீவன் மாத்திரம் எந்த நினைவுமற்று நிச்சிந்தையாக இருந்தது!

சிவநந்திக்கு, சங்கரி வரும் செய்தி தெரியாது. சங்கரி என்று ஒரு பெண் உயிருடன் இருக்கிறாள் என்பதே அவனுக்குத் தெரியாது. அவன் தங்கியிருக்கும் கோவிலை விட்டு ஊருக்குள் வந்து பத்து வருடங்களாகி விட்டன! எந்தச் செய்தியும் அவனுக்குத் தெரியாது. சிவநந்தியைப் பைத்தியம் என்று தான் கூறினார்கள். பத்து வருடங்களாக அவன் அப்படித்தான் இருக்கிறான்.

கடையத்தின் மேற்குத் திசையில், ஊரை விட்டுச் சற்று விலகி, ஒரு சிறு கோவில் உண்டு. அக் கோவிலில் எழுந்தருளிய சுவாமியின் பெயர், வில்வநாதர். அந்தக் கோவிலின் அர்ச்சகர் ஈசுவரபட்டர். அவருக்கு உதவி அர்ச்சகனாக இருந்தான் சிவநந்தி.

சிவநந்தியின் தந்தை இசை வல்லுனர். அவருடைய முயற்சியால், சிவநந்தி எட்டாவது வயதிலேயே இசையில் தேர்ந்து விட்டான்! சங்கீதத்தில் சிறந்த மேதைதான். ஆனால், அவனது குரலில்தான் இனிமை கிடையாது! அவனது கற்பனையில் உருவாகும் இசையை ஒலியாக்க, ஒரு துணை தேவையிருந்தது. சிவநந்தியின் இசை ஞானத்தைப் பற்றி ஈசுவர பட்டருக்கு மிக நன்றாகத் தெரியும். நாதத்தைத் தன்னுள் அடக்கியவன் என்பதை ஈசுவர பட்டர் உணர்ந்தார். ஆனால், அந்தக் கற்பனை நாதங்களைப் பிறர் கேட்டு இன்புறச் செய்வதற்கான இனிய குரல் அவனுக்கு அமையவில்லை.

அது மட்டுமா? மேனியழகும் அல்லவா அவனுக்குக்கிடைக்கவில்லை! அவலட்சணமான உருவம், கருத்த மேனி, தடித்த உதடுகள், ஒல்லியான உடல், குழி விழுந்த கன்னங்கள், ஆனால், உள்ளம் மாத்திரம் பத்தரை மாற்றுத் தங்கம்! புறத்தில் தெரியும் குறைபாடுகளையெல்லாம், ஈடு செய்யும்படியான, அருமையான அகம் படைத்தவன். அவனை அந்த ஊரில் யாருமே குறை கூறிய தில்லை. குணத்தால் உயர்வு பெற்றான்.

அவன் செய்து வந்த தொழிலோ, மிக நேர்த்தியான கைங்கரியம். கோவிலில் பூக்கட்டி, பாடல் பாடி அர்ச்சனை செய்யும் பணியைச் செய்து வந்தான்.

தினமும் சிவலிங்கத்தின் முன்னின்று அவன் தேவாரப் பாசுரங்களைப் பாடும்போது, அவனது சிந்தை ஒடுங்கி விடும். கண்களில் நீர் மல்கும். அவனுடைய பக்தியைக் கண்டு ஈசுவரபட்டர் பிரமிப்பார். இசையின் நுணுக்கங்களைத் தெய்வப் பாடல்களில் சேர்த்துப் பாடுவான். அது தனித்தன்மையுடன் மிளிரும்.

சிவநந்தியைத் தன் மகள் சங்கரிக்குக் குருவாக அமர்த்த எண்ணினார் ஈசுவரபட்டர்.

தன் பாட்டி வீட்டில் வளர்ந்த சங்கரியை ஈசுவரபட்டர் கடையத்துக்கு அழைத்து வந்தார். சரஸ்வதி பூசை முடிந்த மறு நாள், கோவிலில் சிவநந்தி பூக்கட்டிக் கொண்டிருந்



தான். சங்கரியுடன் உள்ளே நுழைந்தார் ஈசுவர பட்டர். சங்கரியைக் கண்டதும் பிரமித்தான் சிவநந்தி. அந்தக் கோவில், எதிரே நிற்கும் ஈசுவரபட்டர் எல்லாமே அவன் கண்களை விட்டு மறைந்து விட்டன. ஏன்? தன்னையே மறந்து விட்டான். பார்க்கும் இடமெல்லாம் சங்கரியின் உருவம்தான் தெரிந்தது. எதிரே நின்ற அழகுச் சிலையைக் கண்டு நிலைமறந்தான். அந்த நாள் வரையில் அவன் உணராத உணர்ச்சிகள் உள்ளத்தில் ஊறிப் பரவின. தெய்வமே அழகு உருக் கொண்டு வந்து விட்டதா? இந்த அழகு தான் தெய்வமோ?

''என்ன சிவநந்தி, அவ்வளவு ஆச்சரியத்துடன் பார்க்கிறாய்? இவள்தான் என் மகள் சங்கரி. முன்பே சொன்னேனே. உன்னிடம் இசை பயில வந்திருக்கிறாள்'' என்றார் ஈசுவர பட்டர்.

கற்பனை உலகிலிருந்து மண்ணுலகுக்கு வந்தான் சிவநந்தி. ஈசுவரபட்டர் சொன்னதைக் கேட்டு உளம் மகிழ்ந்தான்.

சங்கரி வந்த நாளிலிருந்து, சிவநந்தியின் மனம் ஒரு நிலையில் இல்லை. சப்தசுவரங்களையும் அடக்கியாண்ட அவன் உள்ளம், இப்போது சங்கரிக்கு அடங்கி விட்டது.

முதன் முதலில் சங்கரியின் குரலைக் கேட்ட சிவநந்தி மெய்சிலிர்த்தான். எப்படிப்பட்ட குரல் இருந்தால் அவன் கற்பனையில் தோன்றும் சுவர மலர்களை மாலையாக்கி இறைவனுக்கு அர்ப்பணிக்கலாம் என்று ஆசை கொண்டானோ, அதே குரல்தான் சங்கரியிடம் அமைந்திருந்தது!

சிவநந்தியிடம் இசை பயில வந்த பிறகு சங்கரியின் திறமைக்குக் குறைவு ஏது! தன் கற்பனையில் தோன்றும் ஸ்வரத் தொகுப்புக்களை ஏட்டில் எழுதிக் கொடுப்பான். மறு விநாடி அந்த ஸ்வரங்கள் சங்கரியின் குரல் இனிமையில் தவழ்ந்து ஒலியாக மாறி, சுற்றுப் புறங்களையெல்லாம் போதையில் ஆழ்த்தி விடும்.

சிவநந்தியின் கற்பனைக்கும், சங்கரியின் குரல் இனிமைக்கும் என்ன பொருத்தம்! பலவகைக் கனிச் சாறும் தேனும்சேர்ந்தாலும் கூட இவ்வளவு இனிக்கவா செய்யும்?

சங்கரியைக் காணும் போதெல்லாம் அவன் இதயத்தில் பின்னிச் சுழலும் உணர்ச்சிகளுக்கு அளவேயில்லை. அவள் நினைவு வரும் போதெல்லாம் சிவநந்திக்குத் தன் உருவத்தின் நினைவும் வந்து விடும். நீர்ச்சுனையில் தன் உருவத்தைக் கூர்ந்து பார்ப்பான். வெறுப்புத் தாங்காமல் கண்களை மூடிக் கொள்வான். கோவிலை நோக்கி ஓடுவான். சிவலிங்கத்தை அணைத்துக் கொண்டு அழுவான்.

''தெய்வமே! நான் என்ன பாவம் செய்தேன்? இந்த உருவம் மாறாதா? நான் அழகனாக மாற முடியாதா? மாற வழியே கிடையாதா? உனக்குப் பணி செய்து உன் புகழ் பாடும் எனக்கு, இந்தக் கோர உருவத்தை ஏன் கொடுத்தாய்? யாரும் விரும்பாத இந்த உருவம், உனக்கு மாத்திரம் பிடித்திருக்கிறதா?'' என்று கூறிப் புலம்புவான்.

அவன் கண்ணீர் சிந்தாத நாளில்லை. தன் மனக் குறையை இறைவனிடம் கூறாமல் வேறு யாரிடம் கூறி முறையிடுவது?

நாத உருவில், அவன் இதயத்தில் நர்த்தனம் புரிந்த தெய்வம், மறைந்து விட்டது. அந்த இடத்தில் இப்போது சங்கரி ஆடுகிறாள். அந்த ஆட்டத்தின் உக்கிரம் தாங்காமல் துடித்தான் சிவநந்தி.

ஒரு நாள் இரவு வீட்டுக்குப் போகாமல் கோவிலிலேயே படுத்துக் கொண்டான். தூக்கம் வராமல் வெகு நேரம் புரண்டான். வேதனையை அகற்றுவதற்கு இசையின் துணையை நாடினான்.

திடீரென்று அவன் முன் கோவிலில் எழுந்தருளியுள்ள வில்வநாதர் தோன்றியது போல் ஒரு பிரமை. அந்தத் தோற்றத்திலிருந்து ஸ்வரஸ்தாயிகள் கிளம்பி, அவன் முன்பு நடனம் புரிந்தன. அவன் கற்பனையில் ஒரு புது ராகம் உதயமாயிற்று!

திடுக்கிட்டு விழித்தான். ஒன்றுமில்லை. வெறும் கனவுதான். ஆனால், கனவில் தோன்றிய ஸ்வரத் தொகுப்பை ஏட்டில் எழுதிக் கொடுத்தான். சங்கரி உள்ளம் உருகப் பாடினாள். உலகத்தை நாதத்தோடு ஐக்கியப் படுத்தினாள். அந்தப் புது ராகத்தின் போதையில், சுற்றுப்புறமெல்லாம் மயங்கிக்கிடந்தன. ஸ்வரச் சேர்க்கையில், அவள் குரல் குழைந்த போது, இயற்கையே ஸ்தம்பித்து விட்டது. எங்கு பார்த்தாலும் அந்த ராகத்தின் உருவம், களை, கட்டுக்கோப்பு! அண்ட சராசரங்களும் அந்த ராகத்தில் ஒன்றி விட்டன. அந்த இசையில் உயிர் ஒன்றி விட்டது. இதை விட வேறு ஆனந்தம் என்ன இருக்கிறது?

பாடி முடித்தாள் சங்கரி. ''இந்த ராகத்தின் பெயர் என்ன?'' என்று கேட்டாள்.

''சங்கரி'' என்றான் சிவநந்தி.

''சங்கரியா? என்னுடைய பெயரில் ஒரு ராகம் இருப்பதாக நீங்கள் சொல்லவில்லையே?'' என்றாள் சங்கரி ஆச்சரியத்துடன்.

''இது புது ராகம். நேற்று என் கனவில் தோன்றியது. உன்னுடைய பெயரையே வைத்து விட்டேன்.''

''என் பெயரை வைக்க வேண்டாம். வேறு நல்ல பெயர் வைக்கலாம்'' என்றாள்.

''இதற்கு உன்னுடைய பெயர்தான் இருக்க வேண்டும்.''

''ஒன்று செய்யுங்கள். இந்த ராகத்தை இறைவன், சங்கரனுக்குஆபரணமாக அளித்து சங்கராபரணம் என்று பெயரிடுங்கள். அதில் என் பெயரும் ஒலிக்கும் இல்லையா?''

சிவநந்தி சம்மதித்தான். சங்கரிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஆடினாள், பாடினாள். கோவில் பிரகாரம் முழுவதும் ஓடினாள். தெப்பக்குளப் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டு சங்கராபரண ராகத்தைத் தனக்குள்ளேயே பாடி மகிழ்ந்தாள். அவளுடைய மகிழ்ச்சியைக் கண்டு மனம் குளிர்ந்தான் சிவநந்தி. சங்கரி சென்ற பிறகு அவனுக்கு மனத்தில் நிம்மதியில்லை.

அவன் நினைவு எங்கெல்லாமோ திரிந்தது. தன்னையும் சங்கரியையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான்; வேதனையடைந்தான்.

அவளுக்கும் இவனுக்கும் எவ்வளவு வித்தியாசம்! இந்த இயற்கையில்தான் எத்தனை அதிசயம்!

தெரியுமா உங்களுக்கு?

நத்தைப் பூச்சியை அமெரிக்காவுக்குள் யாராவது கொண்டு வந்தால், அவருக்குக் கோர்ட்டார் 500 டாலர் (சுமார் ரூ. 2250) அபராதமும் ஒரு வருஷம் சிறைத் தண்டனையும் விதிக்கலாம். இவ்விதம் அமெரிக்காவில் ஒரு சட்டம் அமுலில் இருந்து வருகிறது. வேகத்தில் நத்தை போல என்பது உலக நாடுகளுக்கே பொதுவான ஹாஸ்யமாகும். அப்படி உலகமெங்கும் மக்களால் ஏளனம் செய்யப்படும் சாதுப் பிராணியான நத்தையைக் கண்டு, ஆயுத பலத்தில் உலகத்துக்கே சட்டாம் பிள்ளையாக விளங்கும் மகா வல்லமை பொருந்திய அமெரிக்க சர்க்கார் ஏன் அவ்விதம் நடுங்க வேண்டும்? ஒரு நாளைக்குச் சில அடிகள் தூரமே ஊர்ந்து செல்லும் நத்தை அவ்வளவு ஆபத்தானதா?



ஆம்! ஆபத்தானதுதான். வேகத்தில் மற்றெந்த ஜீவராசிகளையும் விட நத்தை மிகக் குறைந்ததெனினும், குவியல் குவியலாகச் சந்ததிகளை உற்பத்தி செய்வதில் நத்தைக்கு மிகுந்த சக்தி உண்டு. அப்படி உற்பத்தியாகும் ஏராளமான நத்தைகள் பயிர்களையும் பழமரங்களையும் அடியோடு அழித்து மக்களின் உணவில் மண்ணைப் போட்டு விடுகின்றன. உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளும் விவசாயத்தை நம்பி வாழும் நாடுகள்தான். எனவே, ஒரு தேச மக்களின் சுபிட்ச வாழ்வைக் குலைக்க வேண்டுமாயின், அந்த நாட்டின்மீது அணுகுண்டுகளை வீச வேண்டிய அவசியமில்லை. ஒருவருக்கும் தெரியாமல் ஆங்காங்கு நத்தைகளைக் கொண்டு விட்டாலே போதுமானது! பயிர்களைப் பாழாக்கிப் பலனற்றுப் போகும்படி செய்வதில் நத்தைகளுக்கு உள்ள சக்தியைக் கற்பனை செய்து கொள்வது முடியாத காரியம். அதனால்தான் அமெரிக்க சர்க்கார் தங்கள் நாட்டுக்குள் நத்தையைக் கொண்டு வருவோருக்குக் கடும் தண்டனை விதித்துச் சட்டம் இயற்றியிருக்கிறார்கள். எனவே, அமெரிக்கர்கள் மாத்திரமல்ல, உலகத்தில் விவசாயத்தை நம்பி வாழும் சகல நாடுகளிலும் நத்தையைப் பயங்கரமான ஒரு ராக்ஷசப் பிராணியாகவே கருதுகின்றனர்.

மானிட வர்க்கத்துக்கே பெரும் விரோதிகளாக இருக்கும் நத்தை சமூகத்தை ஒழிப்பதற்காக விஷமருந்து, தீப்பந்தம், நீராவிப் புகை முதலிய பல்வேறு முறைகளைப் பிரயோகித்துப் பார்த்தார்கள். அதனால் ஓரளவு வெற்றி கிடைத்ததெனினும், நத்தைகளை அறவே ஒழிக்க முடியவில்லை.

வைரத்தை வைரத்தால் வெட்ட வேண்டும் என்று சொல்லுவார்கள் அல்லவா? அதுபோல, கடைசியாக டாக்டர் பிரான்ஸிஸ் வில்லியம்ஸ் என்ற பிரபல டாக்டர் மேற்படி ராக்ஷச நத்தைகளைக் கொல்ல நத்தைகளையே உபயோகிக்க வேண்டும் என்பதைத் தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று மாதக் கணக்கில் ஆராய்ச்சி செய்து, கண்டு பிடித்தார். பயிர்களை அழிக்கும் கொடிய நத்தைகளை ஒழிக்கச் செயற்கை முறைகளால் அதிக பலனில்லை என்பதை உணர்ந்த டாக்டர் வில்லியம்ஸ், அந்த நத்தைகளுக்கு இயற்கையான விரோதிகள் இருப்பதைத் தற்செயலாகக் கண்டு பிடித்தார். அவர் கண்டு பிடித்த விசித்திரமான ஒருவகை நத்தைகளே பயிர்களை அழிக்கும் ராக்ஷச நத்தைகளைப் பிடித்துத் தின்பதில் மிகத் திறமை வாய்ந்தவையாக இருக்கின்றனவாம்!

கிளியும் இருக்கிறது. கூடவே கோட்டானுமிருக்கிறது. கனியுமிருக்கிறது, பச்சைக் காயுமிருக்கிறது. ஒளியைப் பார்க்கிறோம். காரிருளையும் காண்கிறோம். தென்றலையும் உணருகிறோம், புயலாலும் வாடுகிறோம். வசந்தமும் வருகிறது, கோடையும் வருகிறது. மானும் இருக்கிறது. மதியும் இருக்கிறது. இங்கே, சங்கரியும் இருக்கிறாள்; சிவநந்தியும் இருக்கிறான். பொருந்துமா?

மூன்று வருடங்களாக வேதனையால் வாடினான் சிவநந்தி. வெளியே சொல்லி ஆறுதல் அடையும் துக்கமா இது? ஊமைத் துக்கம். உள்ளத்தினுள்ளேயே போட்டுப் புதைத்துப் புழுங்க வேண்டிய வேதனையல்லவா இது!

தன் மனத்தில் உள்ளதை எப்படிச் சங்கரியிடம் கூறுவது என்று தெரியாமல் தவித்தான். அதற்கு அவனுக்கு அருகதை ஏது? சங்கரிக்குத் தான் கொஞ்சம்கூடப் பொருத்தமற்றவன்; சங்கரி போன்ற அழகுத் தெய்வங்களின் பக்கத்தில், தன்னைப் போன்ற உருவங்கள் நிற்பதுகூடப் பாவம் என்று உணரத்தான் செய்தான்.

அவனுடைய உள்ளத்தில்தான் எத்தனை ஆசைகள்! எத்தனை உணர்ச்சிப் பின்னல்கள்!

ஒரு நாள் காலை சிவநந்தி சுவாமிக்குப் பூவினால் அர்ச்சனை செய்து கொண்டிருந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது.

"எனக்கு இந்த உருவத்தையும் கொடுத்து, பார்க்க இரண்டு கண்களையும் கொடுத்து, உள்ளத்தில் தீராத ஆசைகளையும் கொடுத்து

என்னை ஏன் இப்படிச் சித்திரவதை செய்கிறாய் தெய்வமே?'' என்று உருகி அழுதான். அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்தார் ஈசுவர பட்டர். சிவநந்தியின் கண்ணீரைப் பக்திக் கண்ணீர் என்று எண்ணி மகிழ்ந்தார்.

''சிவநந்தி, ஒரு நல்ல சேதி. சங்கரிக்குக் கலியாணம் நிச்சயமாகிவிட்டது. பக்கத்தூர் பண்ணையார் தம் மகனுக்குச் சங்கரியைப் பெண் கேட்டு வந்தார். அவர் மகன் இவளைத்தான் மணம் முடிப்பேன் என்று பிடிவாதம் செய்கிறானும். நம் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். எவ்வளவு பெரிய சம்பந்தம்! இலேசில் கிடைக்கக் கூடியதா? எல்லாம் வில்வநாதரின் கருணைதான்.'' — இதைச் சொல்லி விட்டு வேகமாக வெளியே போய் விட்டார், ஈசுவர பட்டர்.

சிவநந்திக்கு எல்லாமே இருண்டு விட்டது. அயர்ந்து லிங்கத்தின் பக்கத்தில் உட்கார்ந்து விட்டான். கண்ணீர் மாத்திரம் வடிந்து கொண்டே யிருந்தது.

அப்படி அழுதழுது உள்ளம் உடையவேண்டியதுதான் அவன் விதியா? அவனுடைய வேதனைகளுக்கு அளவில்லையா? அவனுடைய வாழ்வில் இன்பமே கிட்டாதென்றால் அவனை இந்த உலகத்தில் படைத்திருக்கவே வேண்டாமே. உலகத்தில் எல்லோரும் இன்பத்தை நுகரும்போது, இவன் மாத்திரம் அவற்றை உணராத வண்ணம், விலகியே இருக்கவேண்டுமா? இசையின் மூலம் பக்தி செய்யும் தொண்டனுக்குத் தெய்வம் காட்டும் கருணையா இது?

அவன் பிறந்து என்ன சுகம் கண்டான்? அவன் இதயத்தில் அற்புத உணர்வுகளை எழுப்பி விட்டவள் சங்கரி. அவளுக்காக எதை வேண்டுமானாலும் தியாகம் செய்வானே! அந்த ஊர், அந்தக் கோயில், அவன் செய்யும் களங்கமற்ற பணி எல்லாவற்றையும் —ஏன்? அவனுடைய உயிரோடு ஒட்டி ஒன்றாகிவிட்ட இசையைக்கூட . அவளுக்காக உதறி விடுவானே! அவள்மீது அவ்வளவு மோகம். இசையிலும், இறைவனிடமு மிருந்த மோகம், பெண்ணிடம் மாறும் சந்தர்ப்பத்தைத் தெய்வந்தானே கொண்டு வந்தது. இல்லை யென்றால் அந்தச் சந்தர்ப்பத்தை யாவது தடுத்திருக்கலாமே இந்தத் தெய்வம்!

சங்கரிக்குத் திருமணம் என்ற சொல், சிவநந்தியின் காதுகளில் விழுந்ததும், அவன் இதயம் படீரென்று அறுந்து விட்டது. இனிமை தந்து வந்த நாதத் தந்தி அறுந்து விட்ட பிறகு, அபஸ்வரங்கள்தானே ஒலிக்கும்! அவன் உள்ளத்தில் பெரும் போராட்டம் நடந்தது. நல்ல இதயம்நஞ்சாகிவிட்டது! சிவநந்தி மாறி விட்டான். உள்ளம் உருக வணங்கிய சிவலிங்கம் அப்போது அவன் கண்களுக்குக் கல்லாகத்தான் தோன்றியது. வெறி பிடித்தவனைப் போல் அவன் எழுந்து நின்று பேசினான்:

''என்னைப் படைத்த உன் கைகள்தானே சங்கரியையும் படைத்தன? என்னைப் படைக்கும் போது மாத்திரம் உன் கைகள் நடுங்கிற்று? ஏன் இந்த ஓரவஞ்சனை? அவளையும் குரூபியாகப் படைத்திருந்தால், எனக்கு இந்த வேதனை வந்திருக்குமா? உன்னை மனமாரப் பூஜித்தேனே! இசையால் உன்னைத் தொழுதேனே! அதற்குப் பலனா இது? சங்கரி எனக்குக் கிடைக்கக் கூடாது என்பதுதானா உன் எண்ணம்? அவள் அழகு உருவம், இனிமை தரும் குரல் எல்லாமே இனி, அந்தப் பண்ணையார் மகனுக்குத்தான். தினம் இங்கு வந்து உன்னைத் துதிக்க மாட்டாள். பக்கத்தூர் பண்ணையார் வீட்டுக்குப் போய் விடுவாள். உன்னை மனமுருக இனிய குரலில் பாடித் துதிக்க இனி, இந்த ஊரில் யாருமே இல்லை. என்னுடைய வறட்டுக் குரலைக் கேட்டுக் கேட்டுத்தான் சலிப்படையவேண்டும். இதற்காகவா அவளுக்கு அவ்வளவு இனிய குரலைக் கொடுத்தாய்? எல்லாம் பயனற்றுப் போய் விட்டனவே!''

சிறிது நேரம் சுவாமியின் முன் உட்கார்ந்தான். உணர்ச்சி வசத்தால் அவன் உள்ளம் சுழன்ற போது, கூடவே அவன் அறிவும் சுழன்று விட்டது. அவன் மனக் கண்முன் சங்கரிக்குத் திருமணம் நடப்பதாகத் தோன்றியது. பக்தியாலும், இசையாலும் அதுநாள் வரை இளகியிருந்த அவன் இதயம், திடீரென்று இறுகிப் பாறையாகிவிட்டது. அவன் உள்ளத்தில் வெறியேறி விட்டது.

''சங்கரி மாற்றானுக்குச் சொந்தமாவதா? கூடாது. என்னைக் குரூபியாகப் படைத்ததற்குப் பழி தீர்த்துக் கொள்ளுகிறேன். உன் முன்பே அவளை நாசம் செய்து விடுகிறேன். நீ படைத்த அழகு ஓவியம் அழிந்து போவதைப் பார்...பார்...பார்...''

சிவநந்தி வெறி கொண்டவனைப் போல் கத்தினான். அவன் முகம் இன்னும் கோரமாகத் தோன்றியது.

அன்று மாலை சங்கரி, கோவிலுக்கு வந்தாள். அவளைக் கண்டதும் பாறையாக இறுகியிருந்த சிவநந்தியின் இதயம் இளக ஆரம்பித்தது. ஆனால் மீண்டும் இதயத்தைப் பாறையாக்கிக் கொண்டான். அவளை அழைத்துக் கொண்டு மலைச் சரிவில் உள்ள மரங்கள் அடர்ந்த ஒரு இடத்துக்குச் சென்றான். இருவரும் அமர்ந்தனர்.

''சங்கரி, அந்த இராகத்தை ஒரு முறை பாடேன்'' என்றான்.

''எந்த ராகம்?''

''அதுதான் சங்கராபரண ராகம்.''

சங்கரி பாடினாள். அந்த இனிமையில் கல்லாகிவிட்ட அவன் மனம்கூட நெகிழ்ந்தது. நாதத்தின் இனிமையில், உயிரே கரையும் போது, இந்த மனம் எம்மாத்திரம்? ஆனால், மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான்:

'இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த அழகுப் பதுமை அழிந்து விடும். அதோடு, இந்தக் குரலும் மாய்ந்து விடும், மாயட்டும். என்னைப் படைத்த தெய்வத்தைப் பழி வாங்கத்தான் போகிறேன். பழி...பழி...பழி...' சிவநந்தியின் மனம் அலறியது.

சங்கரி பாடி முடிக்கவில்லை. அந்த இராகம் முடியக்கூடாது. அது முடிவதற்குள் அவன் முடித்து விட வேண்டும்.

திடீரென்று பாய்ந்து அவன் குரல் வளையைப் பிடித்து அழுத்தினான். அறுந்த கொடி போல் துவண்டு விழுந்தாள் சங்கரி. உணர்வற்றுக் கிடந்த அழகுப் பொக்கிஷத்தை இமை கொட்டாமல் பார்த்தான். சற்று

நேரத்துக்கு முன்னிருந்த ஜீவன் இப்போது இல்லை! இப்போது சங்கரி இல்லை.

சிவநந்தி சிரித்தான். சிரித்துக்கொண்டேயிருந்தான். திடீரென்று 'ஓ' வென்று அலறிக் கொண்டு கோவிலை நோக்கி வேகமாக ஓடினான். சிவலிங்கத்தைக் கட்டி அணைத்துக் கொண்டு கதறிக் கதறி அழுதான்.

அன்றிலிருந்து சிவநந்தி பேசவேயில்லை. அவனது இதயத்தில் தோன்றிய அதிர்ச்சி அவனை ஊமையாக்கி விட்டது!

சிவசங்கரியைக் காணாமல் ஈசுவரபட்டர் துடித்தார். எங்கெல்லாமோ தேடினார். அவள் அகப்படவில்லை. சிவநந்தியிடமிருந்து ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. தான் செய்த பாபத்தை எண்ணி மனம் உருகினான் சிவநந்தி.

"என்னை மன்னித்து விடு. உணர்ச்சி என் அறிவை மயக்கி விட்டது. உன்னை இசையால் மனம் குளிரவைத்தவளை அழித்து விட்டேன். பாபியாகி விட்டேன். உன்மீது ஆத்திரம் கொண்டேன். அபசாரம் செய்தேன். உன் மீது கொண்ட பக்தியைவிட, அவள்மீது கொண்ட ஆசையைப் பெரிதாக எண்ணி விட்டேன். இசையை விட, அவள் அழகில் தான் அதிக இன்பம் என்று எண்ணினேன். என்னை மன்னித்துவிடு, அப்பனே. உன் கோபத்தை என்னால் தாள முடியுமா? நம் இருவருக்கும் இடையில் சங்கரி புயலாகப் புகுந்தாள். போய் விட்டாள். இனி என்னை உன்னிடமிருந்து யாராலும்பிரிக்கமுடியாது." தினமும் இப்படி மனத்தினால் இறைஞ்சுவான்.

இசையை வாயால் பாட முடியவில்லை என்றாலும், சிவநந்தி இதயத்தால் இசைத்தான்! மனத்தினாலேயே தொழுதான். வாய் ஊமையாகி விட்டாலும், உள்ளம் ஊமையாகி விடாதே. கோவிலையே வீடாக்கக் கொண்டான். ஊருக்குள் வருவதே இல்லை. அவன் உள்ளம் இறைவனோடு ஐக்கியமாகி விட்டது.

சங்கரியை மறக்க முயன்றான். ஆனால், சங்கராபரண ராகத்தை மறக்கவில்லை. அதை அவன் மனத்தினால் பாடி இறைவனுக்கு அர்ப்பணிக்கும்போது, அவள் நினைவு வரும். ஆனால், அந்த நினைவில் வெறி இருக்காது. தான் செய்த பாவத்தின் சுமை தோன்றும். மன்னிப்புக் கோரிக் கண்ணீர் சிந்துவான். அவன் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளையும், இதயம் பேசும் மொழிகளையும், கற்பனை தரும் இசையையும் இறைவன் உணராமலா போய்விடுவான்? சிவநந்தியைப் பைத்தியம் என்றார்கள். சங்கரியின் மறைவினால், பைத்தியம் பிடித்துவிட்டது என்று ஊரார் கூறிக் கொண்டார்கள். இப்படியே பத்து வருடங்களைக் கழித்து விட்டான்.

* * *

சீடையத்துக்கு வந்து சேர்ந்த சங்கரி நேராக அந்தக் கோவிலுக்குத்தான் விரைந்து சென்றாள். அந்தச் சமயத்தில் சிவநந்தி, கண்களை மூடியவாறு சிவலிங்கத்தின் எதிரே உட்கார்ந்திருந்தான். அவனது மனம் இசையால் இறைவனைத் தொழுது கொண்டிருந்தது. அவனுடைய பாதங்களைத் தொட்டு வணங்கினாள், சங்கரி. ஸ்பரிசம் பட்டதும் கண்களைத் திறந்தான் சிவநந்தி.



தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்களின் மைத்துனன் செஞ்சி எம். என். கிருஷ்ணனுக்கும், தூத்துக்குடி இந்தியன் பாங்க் அக்கௌண்டெண்ட் ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்காரின் சகோதரி சௌபாக்யவதி ருக்மிணிக்கும் தூத்துக்குடியில், 17—3—57ல் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

மணமக்கள் வாழ்க!

இதென்ன? இப்போது மனம் இசைத்துக் கொண்டிருந்த சங்கராபரண ராகம் முன்னால் நிற்கிறதா? இல்லை? இவள் பெண். ஆம், பழைய சங்கரிதான்!

சிவநந்தி திடுக்கிட்டான். ஏதோ ஒரு சக்தி அவன் உடலில் பாய்ந்து பரவியது. "சங்கரி!" என்று கத்தினான். பேசச் சக்தி வந்துவிட்டது! பத்து வருடங்களுக்கு முன் ஏற்பட்ட அதிர்ச்சியால், பேச்சை இழந்தவன்; இப்போது, சங்கரியைக் கண்ட அதிர்ச்சியால், மீண்டும் பேசினான்! சிவலிங்கத்தை வணங்கினான்.

"என்னை மன்னித்து விட்டாயா? இனி என் மனம் சாந்தியடைந்து விடும், சங்கரி, நீயும் என்னை மன்னித்துவிடு" என்றான் சிவநந்தி.

"நீங்கள் என்ன குற்றம் புரிந்தீர்கள்? இசை மலரால் தெய்வத்தை அர்ச்சிக்க வேண்டிய என்னை, திருமணம் என்ற பந்தத்திலிருந்து காப்பாற்றிய தெய்வம் நீங்கள். தங்கள் மனம் மாசடையக் காரணம் என் அழகு என்பதை உணர்ந்துதான் துறவறம் கொண்டேன். இப்போது நாதரூபியை இசை வடிவில் காண்கிறேன். இதற்கெல்லாம் ஆதி கர்த்தா நீங்கள்தான்" என்றாள் சங்கரி. திடீரென்று சிவநந்தி கீழே சாய்ந்தான். சங்கரி தாங்கிக் கொண்டாள். அவன் தலையைத் தன் மடி மீது வைத்துக் கொண்டாள்.

"சங்கரி, அந்த ராகத்தைப் பாடேன்" என்றான். அவன் குரல் கம்மியது. சங்கரி சங்கராபரண ராகத்தைப் பாடினாள். அவள் ராகத்தில் ஐக்கியமாகி விட்டாள்: சிவநந்தி தெய்வத்துடன் ஐக்கியமாகி விட்டான். பாடி முடித்து விட்டுக் கீழே குனிந்தபோது சிவநந்தியின் உடலில் உயிரில்லை! அதுதான் இறைவனோடு கலந்து விட்டதே. அவன் மறைந்து விட்டான். ஆனால், சங்கரி? அவளும் பல வருடங்களுக்குப் பிறகு இறந்து விட்டாள். ஆனால், அந்த சங்கராபரண ராகம்? இசைக்கு முடிவேது!

மார்ச் மாதச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர் விலாசம்:
ஏ. சு. நல்லபெருமாள், 21, போலீஸ் ஸ்டேஷன் ரோட், பாளையங்கோட்டை.

பாலர் மலர்

குட்டிக் கதை



முயலும் எலியும்

முயலும் எலியும் மீன் பிடிக்கச் சென்றன. அதிர்ஷ்டமெல்லாம் முயலுக்கே இருந்தது. முயல் தூண்டிலைத் தண்ணீரில் போட வேண்டியதுதான். உடனே ஒரு சின்ன மீன் அதில் மாட்டிக் கொள்ளும். "சபாஷ்! இதோ பத்து மீன்கள் ஆகிவிட்டன. எலியாரே என்ன என்னைப் பார்த்துப் பொறாமைப் படுகிறீர்கள்? நான் பிடித்த மீன்களை எண்ணிக் கொண்டிருக்கிறீர்களே தவிர உமக்கு ஒன்றும் இல்லை போல் இருக்கிறதே!" என்று பரிகாசம் செய்தது முயல். எலி கொஞ்சமேனும் கலங்காமல் தூண்டிலைத் தண்ணீரில் போட்டு விட்டு உட்கார்ந்திருந்தது. அதன் வால் நீளமானதால் தண்ணீரினுள் தொங்கி மிதந்ததோடு தூண்டி முன்னைப் போல நுனியில் வளைந்திருந்தது. திடீரென்று எலி தண்ணீரில் இழுக்கப்பட்டு அதில் விழுந்தது. முயல் கல கலவென்று சிரித்தது.


தண்ணீரில் விழுந்த எலி சட்டென்று நீந்திக் கரையில் ஏறியது. அதன் வால் நுனியில் ஒரு பெரிய மீன் வாலைக் கௌவியபடியே வெளியே வந்தது. அதைப் பார்த்ததும், சிரிப்பாய்ச் சிரித்த முயலின் முகம் மாறியது. கடைசியில், "எலியாரே! நீங்களல்லவா ஜெயித்து விட்டீர்கள்?" என்றது. அதற்கு எலி ஒன்றும் பதில் சொல்லாமல் தூக்க முடியாமல் அந்தப் பெரிய மீனைத் தோளில் போட்டுக் கொண்டு சந்தோஷத்தோடு வீடு போய்ச் சேர்ந்தது.








கண் இல்லை, மூக்கில்லை, நாக்கில்லை, வாலில்லை, 'காதில்லை...'! மேலே உள்ள பொருள்களுக்கு இவை யாவும் படத்தில் போடவில்லை. எந்தெந்தப் பொருளுக்கு எது இல்லை என்பதைக் கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்!




மிருங்காவதி
சித்திரத் தொடர் கதை
13
1) தேவதத்தன் தான் குற்றவாளி இல்லை
எத்தனையோ கூறியும் அவனை நகரக் காவலாளிகள்
அரசரின் எதிரே கொண்டு போய் நிறுத்தினார்கள்.
2) திருட்டுப்போனதோ அரசாங்க நகை! திருடனோ கையும் களவுமாகப் பிடித்தாகிவிட்டது. அவன் திருடன் இல்லையென்பதற்குச் சரியான சாட்சியமும் கிடையாது. எனவே, அரசர் தமது அரசாங்கச் சட்டப்படி அவனுக்கு மரண தண்டனை விதித்தார்.
திருடனுக்கு மரண தண்டனை ....
3) தேவதத்தனைச் சிப்பாய்கள் கைவிலங்கு மாட்டி நகரத்தின் வீதிகள் வழியே கொலைக்களத்துக்கு இட்டுச்சென்றனர். திருட்டுக் குற்றம் எத்தனை பெரிய குற்றம் என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காகப் பறை முழங்கின.
4) பறை முழக்கம் கேட்டு மந்திரியின் மாளிகையிலிருந்த மிருங்காவதி உப்பரிகையின் மேலிருந்த வண்ணம் எட்டிப் பார்த்தாள். தேவதத்தனை அந்தக் கோலத்தில் கண்டதும் அவள் வீறிட்டுக் கத்தி விட்டாள்.
5) அவள் கூக்குரலைக் கேட்டு மந்திரி ஓடிவந்தார்.
6) என்ன அம்மா! என்ன விசேஷம்?
7) அதோ என் அன்பரைக் கைவிலங்கிட்டுக் கொலைக் களத்துக்கு அழைத்துச் செல்கின்றனர்



(9) மந்திரி தேவிதத்தனைப் பார்த்தார். அவன் குற்றவாளியாக இருக்கமுடியாது என்று அவருக்குத் தோன்றியது. அவனைப் பார்த்த உடனேயே இனந்தெரியாத உணர்ச்சி அவரை உந்தித்தள்ளியது.
மிருங்காவதிக்கு ஆறுதல் அளித்துவிட்டு அரசரைக் காண விரைந்தார்.
(9) திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தேவிதத்தன் ஒரு நாளும் குற்றவாளியாக இருக்க முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது. மன்னர்பிரான் அனுமதி அளித்தால், நான் உண்மைத் திருடர்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். கருணை கூர்ந்து தேவிதத்தனை விடுதலை செய்ய வேண்டும்.
(10) அரசரது ஆணை கொலைக்களத்துக்குப் பறந்தது. தேவிதத்தன் மரணதண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டான்.
நிறுத்து!
(11) தேவிதத்தன் மந்திரியின் மாளிகையை அடைந்தான். மந்திரி தேவிதத்தனோடு நடத்திய உரையாடலில், அவன் தமது தமையன் காலநேமியின் மகன் என்பதை அறிந்தார். நாம் அவனுக்குச் சிறிய தந்தை ஆகவேண்டும் என்பதையும் கூறி அவனை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.
என் மகனே!
(12) தேவிதத்தன் தனது தந்தை காலநேமி அநியாயமாக மரணதண்டனை விதிக்கப்பட்டு மரித்ததைக் கூறினான்.
(13) அவனது மரணத்திற்குக் காரணமாயிருந்த விக்கிரமனைப் பழிவாங்கத் தான் உறுதி கொண்டிருப்பதையும் கூறினான் (தொடரும்)
விக்கிரமன்



மாயப் பந்து

ராஜி

3. ரவி பறந்தான்!


ரவி உடனே மாயப் பந்தைப் பையிலிருந்து எடுத்தான். 'இப்பொழுதே பரிசோதித்துப் பார்க்கப் போகிறேன்" என்று தீர்மானித்துக் கொண்டான். என்ன செய்யச் சொல்லிப் பந்தைப் பரிசோதிப்பது என்றுதான் அவனுக்குத் தோன்றவில்லை. ஆகாயத்தைப் பார்த்தான். விரிந்து பரந்து கிடந்த நீலவானம் அவனைக் கவர்ந்தது. 'எனக்கு வெகு நாட்களாகப் பறவைகளைப் போல ஆகாயத்தில் பறக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. அந்த ஆசையை இந்த மாயப் பந்தின் வழியாகப் பூர்த்தி செய்து பார்க்கிறேன். அப்பொழுது எனது ஆசையும் பூர்த்தி ஆகும். மாயப் பந்தின் வலிமையையும் பரிசோதித்துப் பார்க்கலாம்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். பிறகு பந்தைப் பார்த்து, "ஏ, பந்தே! எனக்கு இப்பொழுது ஆகாயத்தில் பறக்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது. எங்கே அந்த ஆசையை இப்பொழுதே பூர்த்தி செய்" என்று சொல்லிக் கொண்டே பந்தைக் கீழே போட்டுக் கைகளினால் பிடித்தான். பிடித்த மறு நிமிஷமே ரவி ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்தான். தன் கையிலிருந்த பந்தைப் பையில் போட்டுக் கொண்டான். தான் ஆகாயத்தில் மிதந்து போவ


தைப் பார்த்துச் சந்தோஷத்தினால் கைகளைக் கொட்டிக் கொண்டான். காற்று எப்படி எப்படியெல்லாம் வீசுகிறதோ அதன்படியே ரவியும் ஆகாயத்தில் சென்று கொண்டிருந்தான். பலமாகக் காற்று வீசும்போது 'விர்' என்று ஆகாயத்தில் தண்ணீரில் நீந்துவது போலக் கைகளை ஆட்டிக் கொண்டு பறந்து சென்று கொண்டிருப்பான். காற்று சற்றுக் குறைவாக அடிக்கும்போது கீழே வருவான். பிறகு மறுபடியும் காற்று பலமாக வீசும் போது மேலே செல்லுவான். முதலில் மிகவும் சந்தோஷப்பட்ட ரவிக்குக் கொஞ்ச நேரம் ஆனவுடன் அலுப்புத் தட்ட ஆரம்பித்தது. அப்பொழுதுதான் அவன் எங்கிருந்து புறப்பட்டானோ, அந்த இடத்திலிருந்து வெகு தூரம் வந்திருந்ததை உணர்ந்தான். சற்று நேரம் சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்த அவனுக்குச் சுய நினைவு வந்தது. உடனே தன் தங்கையைப் பற்றி ஞாபகம் வந்தது.

உடனே அவன், "கலா! கலா!" என்று உரக்கக் கூவினான். ஆகாயத்திலிருந்து அவன் அழைத்தால் யார் ஏன் என்று கேட்பார்கள்? அவனுக்கு அப்பொழுது பல எண்ணங்கள் தோன்றின. இரவு முழுவதும் இப்படியே அங்குமிங்குமாக ஆகாயத்தில் பறந்து சென்று கொண்டிருந்தால் என்ன செய்வது? காற்றினால் மரங்களிலும் குன்றுகளிலும் உடல் மோதப்பட்டு அவனுக்குக் காயங்கள் ஏற்பட்டிருந்தன.

'தகப்பனார் சொன்ன புத்திமதிகளைக் கேட்காமல் இரண்டு தவறான காரியங்கள் செய்து விட்டேனே. முதலில் தங்கை கலாவைத் தனியாக விட்டுப் பிரிந்தது; மற்றொன்று முன்பின் யோசியாமல் தப்பான வழியில் பந்தின் பலத்தைப் பரிசோதித்தது. அதனால் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கிறேன். மறுபடியும் எப்படிப் பூமியைச் சேருவது என்பதை யோசிக்கவே இல்லை. பந்தை ஏதாவது ஒரு கடினமான பொருளின் மீது விட்டெறிந்து அது எழும்பிக் கைகளுக்கு வந்தால்தானே என்னுடைய எண்ணம் கைகூடும்? நான் மறுபடியும் பூமிக்கு வர முடியும்!'

காற்றின் வேகத்தில் ரவி மேலும் கீழும் வந்து கொண்டிருந்தான். அப்படி இருக்கும்போது அவன் எதன்மீது பந்தை எறிய முடியும்? அவன் பூமிக்கு அருகில் வரும் போது பந்தைப் பூமியில்விட்டெறிந்து கீழே வருவதற்கு முயற்சி செய்யலாம் என்றால் மறுபடியும் பந்து பூமியிலிருந்து எழும்பி அவன் கைகளுக்கு வரும் என்பது எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்? பந்து அவன் கைகளுக்கு வருவதற்கு முன்பு அவன் காற்றின் வேகத்தினால் வேறு எங்கேயாவது போய் விட்டால் விலைமதிப்பில்லாத பந்து அவன் கையை விட்டல்லவா போய் விடும்? அதனால் ரவி தைரியமாகப் பந்தை எதன் மீதும் எறிந்து உபயோகப்படுத்த விரும்பவில்லை. ஆனால் அவன் ஒரு முறையாவது பூமியைத் தொட முடியவில்லை. எப்படி முடியும்? அவன்தான் ஆகாயத்தில் பறக்க வேண்டும் என்று பந்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறானே!





புது தில்லி பொது நூல்நிலையத்தின் ஸ்தாபகர்கள் தினக்கொண்டாட்டம் மத்தியசர்க்கார் மந்திரி கனம் பி. வி. கேஸ்கர் தலைமையில் மார்ச் 29-ம் தேதி விமரிசையாக நடந்தேறியது. இந்த விழாவில் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. இசை, நாடகம், சித்திரம், கதை சொல்லுதல் ஆகியவற்றில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினர். கதை திறமையாகச் சொல்லுவதில் வெற்றிபெற்ற பத்துவயதுள்ள ஆனந்த சொரூப மந்திரி திரு கேஸ்கரிடமிருந்து பரிசு பெறும் காட்சியைக் காணலாம்.

ரவி ஆகாயத்தைப் பார்த்தான். அப்பொழுது இரவு பன்னிரண்டு மணி இருக்கும்போலத் தோன்றியது. குளிரினால் அவன் உடல் நடுக்கம் எடுக்க ஆரம்பித்தது. "அடாடா! புறப்படும் போது பந்தின் மந்திர சக்தி எவ்வளவு நேரம் இருக்கும் என்பதை அறிந்து கொள்ள மறந்து விட்டேனே! அப்படிக் கேட்டிருந்தால் மந்திர சக்தி முடிந்தவுடன் கீழே வந்து விடலாமே" என்று நினைத்தான். உடனே, "அதுவும் மிகவும் அபாயம். நான் நல்ல உயரத்தில் பறந்து கொண்டிருக்கும் போது மந்திர சக்தி முடிந்து விட்டால் தொப்பென்று அல்லவா கீழே விழுந்து விடுவேன்? அப்போது என் உயிருக்கே அல்லவா ஆபத்து நேரிடும்?" என்று தனக்குத் தானே அவன் சமாதானப் படுத்திக் கொண்டான்.

அப்பொழுது திகர் என்று வானம் இருண்டது. மின்னல் மின்னியது. இடிகள் பலமாக இடித்தன. காற்று புயலைப் போல் பலமாக வீசிற்று. இங்கும் அங்குமாகப் போய்க் கொண்டிருந்தான் ரவி. பலவீனப்பட்டு மூர்ச்சை அடைவான் போலத் தோன்றிற்று. மூர்ச்சை அடைந்தால்தான் என்ன? கீழே பூமிக்கு வர முடியுமா? மூர்ச்சையற்று ஆகாயத்தில் மரக் கட்டையைப் போலக் காற்றில் சுற்றிச் சுற்றித்தான் வரலாம். பலத்த மழை வரும்போல் தோன்றியது. உடனே ரவியின் மனத்தில் பயம் உண்டாயிற்று. 'நான் ஆகாயத்தில் இருக்கும்பொழுது மழை பெய்தால் பந்து அல்லவா நனைந்துவிடும்? புறப்படும்போதே முதன் முதலில் பந்து நனைந்து விட்டால் பிறகு என்ன செய்வது? ஒரு முறை பந்து நனையலாம் என்று அப்பா சொல்லியிருந்த போதிலும் பந்தின் மீது பூசுவதற்காகக் கொடுத்த மந்திர வெள்ளைப் பொடியும் அல்லவா நனைந்து விடும்? பிறகு நான் எப்படிப் பந்தின் சக்தியை மீண்டும் பெறுவேன்? எப்பொழுது கலாவைப் பார்ப்பேன்? அப்பா கூறிய புத்திமதிகளை ஆரம்பத்திலேயே புறக்கணித்துவிட்டு வீண் துன்பத்துக்கல்லவா ஆளானேன்" என்று ரவி புலம்பினான்.


அப்பொழுது மிகவும் பலத்த காற்று ஒன்று வீசிற்று. ரவி வெகு தூரத்துக்கு அப்பால் போய் விட்டான். "எது வந்தாலும் வரட்டும். அப்பா சொல்லியபடி தைரியத்தைக் கைவிட மாட்டேன்" என்று அவன் பெரியதாகக் கத்தினான்.

அந்தச் சமயத்தில் அந்த கன்னிரவிலே ரவி இருந்த சற்றுத் தூரத்தில் வானத்தில் ஒரு இடத்தில் நிரம்பப் 'பளிச் பளிச்' என்று விளக்குகள் காணப்பட்டன. அதைப் பார்த்த ரவிக்கு அவனது இருண்ட இதயத்தில் பளிச்சென்ற ஒரு நம்பிக்கை ஒளி ஏற்பட்டது போல் இருந்தது. அப்பொழுது இருந்த காற்றின் வேகம் ரவியை வெளிச்சம் தோன்றிய இடத்துக்கே அழைத்துச் செல்வது போலத் தோன்றியது.

கலாவும், மரத்தடியில் ரவி நின்று கொண்டிருப்பதைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே பெண்கள் விளையாடும் இடத்தை நோக்கிச் சென்றாள். கலாவுக்குத் தன்னுடைய அண்ணனைப் போலப் பாட்டு என்றால் மிகவும் பிரியம். அதுவுமல்லாமல் நன்றாக நாட்டியம் ஆடுபவள். ஆதலால் பெண்கள் பின்னல், கோலாட்டம் முதலிய ஆட்டங்கள் ஆடிக் கொண்டிருப்பதைச் சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டே இருந்தாள். அங்கு நடந்த ஆட்டங்களையும், கூட்டத்தையும் பார்த்தால் ஏதோ வருஷாந்திரக் கூட்டம் போல் தோன்றியது. இருட்டுகிற சமயம். அங்கு இருந்த கூட்டமும் கலைந்தது. அப்பொழுதுதான் கலாவுக்கு ரவி தனக்காக மரத்தடியில் காத்துக் கொண்டிருப்பான் என்பது ஞாபகம் வந்தது.

வானமும் இருண்டு விட்டது. கலா பயந்து கொண்டே வேகமாக ரவி நின்று கொண்டிருந்த மரத்தை நோக்கி வந்தாள். அந்த மரத்தடியில் ரவியைக் காணவில்லை. ஆனால் ஒரு மந்திரவாதி பெண் உருவில் தோன்றினான். (தொடரும்)


பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும் ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர்.ஜே.போர்ஹான் டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப்படுகிறது. ரத்தக்கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி விடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப்படலாம்.
தன்த்வைதிருல்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்குகந்தது


கலிங்கா
ட்யூப்ஸ்
தண்ணீர், மற்றும் 'காஸ்' விநியோகத்துக்கும் சகல விதமான தொழிற்சாலை, வீட்டுத் தேவைகளுக்கும் உயர்தர ஸ்டீல் குழாய்கள்.
KALINGA TUBES LTD.
33, CHITTARANJAN AVENUE,
CALCUTTA-12.
Works: CHOUDWAR, CUTTACK
INDIA'S FIRST CONTINUOUS STEEL TUBE FACTORY



மலைச்சாரல் மாதவி

ஜனார்த்தி


அத்தியாயம் 11


முகம் மலர்ந்தது

சிவசங்கரனுக்குத் தாம் இவ்வாறெல்லாம் உள்ளொன்றும் புறமொன்றுமாகப் பேசுகிறோமே என்று வெட்கமாக இருந்தது. மாதவியுடன் பழகுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்பட வேண்டும் என்றுதாம்முதல் நாள் இரவு விரும்பியதையும், இப்போது வேறுவிதமாகப் பேசுவதையும் சேர்த்துப்பார்த்தார். 'ஏன் என் மனத்தில் இருப்பதை இவரிடம் சொல்ல முடியவில்லை?' என்று யோசித்துப் பார்த்தார். மாதவியைப்பார்த்ததைக் கூறலாம் ' என்றுகூட அவர் எண்ணினார். ஆனால் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்தன. அவளைப் பற்றி என்னவென்று அவரிடம் சொல்வது? எப்படியிருந்தாலும் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று கிருஷ்ணன் குட்டியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

மாதவியைப் பார்க்கப் போகவேண்டு மென்று நினைக்கும் போதே அவருடைய நெஞ்சில் புதிய உணர்ச்சி ஒன்று பரவியது. இப்போது உலகமே புதிய சௌந்தர்யம் பெற்று விளங்குவதாக அவருக்குத் தோன்றியது. மாதவியை நினைத்துக் கொள்ளும்போதெல்லாம் மற்ற எல்லா விஷயங்களுமே புதிய சுவையுடன் தென்படுவதைக் கண்டு அவர் அதிசயப்பட்டார்.

மாலையில் கோர்ட்டிலிருந்து வந்ததும் உடை மாற்றிக் கொண்டார் சிவசங்





கரன். அலட்சியமாக வாரிக் கொள்ளும் தலையை இன்று சிரத்தையுடன் நிதானமாய்க் கண்ணாடியில் பார்த்து வாரிக் கொண்டார். தூய வெண்மை நிற வேஷ்டியும், ஷர்ட்டும் அணிந்து கொண்டார். தம் கைக்கடிகாரத்தை அணிந்து கொண்ட பிறகு கண்ணாடியில் மறுபடியும் பார்த்துக் கொண்டார். அலமாரியைத் திறந்து சிறிது வெட்கத்துடனேயே விலை உயர்ந்த செண்டை எடுத்துத் தம் மீது கொஞ்சமும், கைக்குட்டையில் சிறிதும் போட்டுக் கொண்டு பெரியவரின் வீட்டுக்குச் சென்றார்.

பெரியவரும் தயாராகக் காத்துக்கொண்டிருந்தார். இருவரும் மலைச்சாரல் பங்களாவை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

அவர்கள் இருவரும் மலைச்சாரல் பங்களாவை நெருங்கியபோதே மாதவி தோட்டத்தில் நிற்பது தெரிந்தது.


சிவசங்கரனுக்கு அங்கேயே நின்று அவளுடைய அழகைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலத் தோன்றியது. பசுமையான மலைச்சாரலின் முன்னால் சிவந்த ஓட்டு வீடும் அதற்கு முன்னால் தூய வெண்ணிற ஆடையுடன் நிற்கும் மாதவியும் சேர்ந்து ஒரு சித்திரத்தைப் பார்ப்பது போன்ற பிரமையை உண்டாக்கியது.

மாதவி மலையைப் பார்த்து நின்றுகொண்டிருந்தாள். அதனால் இவர்கள் வருவதைக் கவனிக்கவில்லை. இருவரும் வேலிக்கு அருகில் வந்த பிறகும் அவள் கவனிக்கவில்லை. மாதவி ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதை அவளுடைய தோற்றம் கூறியது. ஆடாமல் அசையாமல் அவள் ஒரு பதுமையைப்போல் நின்றுகொண்டிருந்தாள். சிவசங்கரனுக்கு அவளுடைய முகம் தெரியவில்லை. அள்ளி முடித்திருந்த கூந்தலின் மீது மல்லிகைப் பூவை அலட்சியமாகச் சூட்டிக கொண்டிருந்தாள்.

'ஒருவேளை அவள் என்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாளோ?' என்று கேட்டது அவர் மனம். 'மாதவி' என்று கூப்பிட வேண்டுமென்று அவருக்கு ஆசையாக இருந்தது.

அதற்குள் பெர்யவர், "மாதவி!" என்று கூப்பிடவே திடுக்கிட்டுத் திரும்பினாள் மாதவி. தன்னைப் பார்த்ததும் அவளுடைய முகத்தில் உண்டான மாறுதல் திகைப்பா, சந்தோஷமா என்று சிவசங்கரனால் நிர்ணயம் செய்து கொள்ள முடியவில்லை.

"வாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே சிறிய கேட்டைத் திறந்தாள் மாதவி. அவள் குனிந்து கேட்டைத் திறந்து



விட்டு நிமிர்ந்த போது அவளுடைய முகம் இன்னும் சிவந்து விட்டதாகச் சிவசங்கரனுக்குத் தோன்றியது.

பெரியவர், "மாதவி! கருணாகரன் இன்னும் வீட்டுக்கு வரவில்லையா?" என்று கேட்டார்.

"வரும் நேரந்தான். இப்போது வந்து விடுவான். வந்து உட்காருங்களேன்" என்றாள் மாதவி.

வீடு சிறியதாகவும் சுத்தமாகவும் இருந்தது. முதல் அறையில் ஒரு சாமான் கூட இல்லாமலிருப்பதைக் கண்டு சிவசங்கரன் ஆச்சரியப்பட்டார். மிக அழகான பாய்கள் இரண்டு விரிக்கப்பட்டிருந்தன. மற்றப்படி மேஜை, நாற்காலி எதுவும் அங்கே இல்லை. அடுத்த அறையில் ஊஞ்சல் போட்டிருப்பது தெரிந்தது.

சிவசங்கரன் இவ்வளவு சிறிய, சாமான்களே இல்லாத வீட்டைப் பார்த்ததில்லை. சீனிவாஸ மூர்த்தியின் வீட்டையும், இதையும் மனத்தில் ஒப்பிட்டுப் பார்த்தார். தம்முடைய தாயார் கூட எத்தனையோ பொருள்களை வாங்கிச் சேர்த்திருக்கும் போது, இந்தப் பெண் இப்படி அறையில் ஒன்றுமில்லாமல் வைத்திருக்கிறாளே என்று அதிசயித்தார். இருவரும் பாயில் உட்கார்ந்தனர். மாதவி கதவோரமாகத் தயங்கியபடியே நின்றாள்.

"நீயும் உட்காரம்மா" என்றார் பெரியவர். மாதவி அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

"தம்பியிடம் நீங்கள் ஏதாவது முக்கியமான விஷயம் பேச வேண்டுமா?" என்று கேட்டாள்.

"காரியம் ஒன்றும் இல்லை, மாதவி! இவர் இந்த ஊருக்குப் புதிது. சில பேரைச் சிநேகம் செய்து கொள்ள விரும்பினார். இவருக்கு வேட்டையாடுவதில் விருப்பம் உண்டாம். கருணாகரனும் நல்ல பயிற்சி உள்ளவனாயிற்றே, இவரை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைக்கலாம் என்று இங்கே அழைத்து வந்தேன்" என்றார் கிருஷ்ணன் குட்டி.

"இவர் துப்பாக்கியுடன் மலைமேல் ஏறிக்கொண்டிருந்ததைப் பார்த்த போதே வேட்டைப் பிரியர் என்பது எனக்கும் தெரிந்து விட்டது" என்று கூறினாள் மாதவி.

சிவசங்கரனுக்குத் திக்கென்றது. இந்த மனிதரிடம் அதைச்



சொல்லித் தொலைக்காமல் போனோமே என்று வருந்தினார்.

பெரியவர் ஒரே வியப்போடு "இவனை முன்பே நீ பார்த்திருக்கிறாயா? என்னிடம் சொல்லவே இல்லையே!" என்றார்.

"இவரை நான் மலையின்மீது செல்லும்போது பார்த்தேன். ஆனால் இவர் தான் இந்த வீட்டில் இருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது" என்றார் சிவசங்கரன். அப்போது அவர் மாதவியைப் பார்த்த பார்வை என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே என்பது போல இருந்தது.

மாதவியின் இதழ்க்கடைகளில் ஒரு மிகச் சிறிய புன்சிரிப்பு ஒரு கணம் தோன்றி மறைந்தது. "ஆம்! அது எப்படி அவருக்குத் தெரிய முடியும்?" என்றாள். சிவசங்கரனுக்கு மாதவி இடத்தில் நன்றியுணர்ச்சி பொங்கி எழுந்தது. தான் அவளை அதே வீட்டில் பார்த்ததைக் கூறியிருந்தாளானால் எவ்வளவு அவமானமாகப் போயிருக்கும்? அவளுடைய புத்திதான் எவ்வளவு கூர்மையானது? நான் கூறியதை ஒரே கணத்தில் புரிந்து கொண்டு விட்டாளே என்று நினைத்து மகிழ்ந்தார்.



"கொஞ்சம் குளிர்ந்த தண்ணீர் கொண்டு வா அம்மா!" என்றார் பெரியவர் மாதவியிடம்.

"இளநீர் கொண்டு வருகிறேன்." என்று கூறி விட்டு உள்ளே சென்றாள் மாதவி. இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் இளநீர் வெட்டும் "சதக் சதக்" என்ற ஓசை கேட்டது.

"இங்கே உட்கார்ந்திருப்பானேன்? வெளியே போய்க் காற்றாடச் சுற்றி வரலாமே" என்றார் சிவசங்கரன்.

"நான் உட்கார்ந்திருக்கிறேன். நீ வேண்டுமானால் போய் வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு வா!" என்றார் பெரியவர். அவர் ஜன்னல்மீது வைக்கப்பட்டிருந்த ஒரு மலையாளப் புத்தகத்தை எடுத்துப் பார்க்கத் தொடங்கினார்.

சிவசங்கரன் வெளியே வந்தார். ஒரு நிமிஷம் வாசலில் தயங்கி நின்றார். பிறகு வீட்டைச் சுற்றிக் கொண்டு பின் பக்கம் சென்றார்.

அங்கே அவர் ஒரு அற்புதமான காட்சியைக் கண்டார். மாதவி அங்கு இருக்கலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டே தான் போனார். ஆனால் அவள் அரிவாளை எடுத்து இளநீர் சீவிக் கொண்டிருப்பாளென்று அவர் நினைக்கவில்லை.

லாகவத்தோடு அவள் அரிவாளை உபயோகிப்பது ஒரு வித்தை போலத் தோன்றியது. அரிவாளைப்போடும்போது அவளுடைய உடலில் உண்டான அசைவுகள் ஒரு தேர்ந்த நட்டுவனார் சொல்லிக் கொடுத்த நாட்டியத்தின் அசைவுகள் போல அவருக்குத் தோன்றின.

சிவசங்கரன் வந்ததைத் தலைநிமிர்ந்து பார்த்தாள் மாதவி. மறுபடியும் அவள் குனிந்து சீவத் தொடங்கினாள்.

'ஐயோ! அவள் மீது அந்த அரிவாள் பட்டுக்காயப்படுத்தி விடப் போகிறதே' என்று சிவசங்கரன் மனம் துடித்தது.

"மாதவி! நீங்கள் இவ்வளவு சிரமப்பட வேண்டாமே. தண்ணீர் கொடுத்திருந்தால் போதுமே" என்றார் சிவசங்கரன். 'உன் கையால் கொடுத்தால் தண்ணீரே இளநீரை விட இனிக்குமே' என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது அவருக்கு.

"எனக்கு ஒரு சிரமமும் இல்லை. இது என்ன பிரமாதமான காரியம்?" என்று சொல்லிக் கொண்டே துவாரம் செய்த இளநீர்க் குடுக்கையை ஒரு பாத்திரத்தில் கவிழ்த்தாள் மாதவி.

"அரிவாளினால் நீங்கள் இளநீரைச் சீவும் போது உங்கள் கையில் காயம் பட்டு விடப் போகிறதே என்று எனக்குப் பயமாக இருக்கிறது."

மாதவி அவரை ஏறிட்டுப் பார்த்தாள். மெல்ல நகைத்து விட்டு, "எனக்கு இது வெகு நாட்களாகப் பழக்கம். காயம் பட்டுக் கொள்ள மாட்டேன்" என்று கூறி விட்டு இளநீர்ப் பாத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள். "நான் உள்ளே போகிறேன். நீங்கள் வாசல் வழியாக வாருங்கள்" என்று சொல்லி விட்டு வேகமாக உள்ளே போய் விட்டாள்.

வானத்திலிருந்த முழுமதி திடீரென்று மறைந்து விட்டது போலிருந்

தது சிவசங்கரனுக்கு. அவனைப் பற்றிப் புகழ்ந்து ஒரு வார்த்தை கூடச் சொல்லத் தெரியவில்லையே என்று நொந்து கொண்டே திரும்பிச் சென்று வாசற் கதவு வழியாக வீட்டினுள்ளே நுழைந்தார். அப்போது தான் மாதவியும் இரண்டு டம்ளர்களில் இளநீரைக் கொண்டு வந்து வைத்தாள். அதை அவர்கள் பருகிக் கொண்டிருக்கும் போதே வெளியில் சைக்கிள் மணியின் இனிய ஓசை 'கிணுகிணு'வென்று ஒலித்தது.

"தம்பி வந்து விட்டான்" என்றாள் மாதவி மலர்ந்த முகத்தோடு.

அத்தியாயம் 12

வெண்கலக் குரல்!

உள்ளே நுழைந்த இளம் வாலிபனைக் கண்டு அதிசயமடைந்தார் சிவசங்கரன். மில் மானேஜர் என்று கிருஷ்ணன் குட்டி கூறியிருந்தபடியால் அவனைக் கொஞ்சம் பெரியவனாகக் கற்பனை செய்து கொண்டிருந்தார். ஆனால் கருணாகரனுக்குச் சுமார் இருபத்திரண்டு வயதுதான் இருக்குமென்று தோன்றியது. 'இவ்வளவு இளம் பிள்ளையா மானேஜர் வேலை பார்க்கிறான்?' என்று நினைத்து அவர் அதிசயப்பட்டார்.

"இவர்கள் வெகு நேரமாக உனக்காகக் காத்திருக்கிறார்கள், தம்பி!" என்றாள் மாதவி. அவளுடைய குரலில் பரிவு இழைந்தோடியது.

"வாருங்கள்! வாருங்கள்! உங்களைப் பார்த்து ரொம்ப நாளாகி விட்டது. இவர் யார்? உங்களுடைய நண்பரா? காரணமில்லாமல் என்னை நீங்கள் தேடி வந்திருக்க மாட்டீர்கள்!" என்று வெண்கலக் குரலில் கணீரென்று பேசினான் கருணாகரன்.

"இவர் ஜில்லா மாஜிஸ்திரேட் சிவசங்கரன். உன்னைச் சிநேகம் செய்து வைப்பதற்காக அழைத்து வந்திருக்கிறேன்" என்றார் கிருஷ்ணன்குட்டி.

"ரொம்ப சந்தோஷம். என்னுடைய சிநேகத்தைக்கூடப் பெற விரும்பி ஒருவர் வருவது எனக்கு அதிசயமாக இருக்கிறது!" என்றான் கருணாகரன்.

"ஏன் தம்பி? உனக்கு என்ன குறைவு?" என்று கேட்டார் பெரியவர்.

மாதவி உள்ளே மறைந்ததைக் கவனித்தார் சிவசங்கரன்.

"எனக்கு ஒரு குறையும் இல்லை. ஆனாலும் இவர் ரொம்பப் பெரிய மனிதர் அல்லவா? அவர் என்னைத் தேடி வருவது அதிசயந்தானே?"

"இதில் என்ன அதிசயம்? நீ எவ்வளவு கெட்டிக்காரன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அது கிடக்கட்டும். இவர் வேட்டையாடுவதில் மிகவும் பிரியமுள்ளவர். உனக்கும் அதில் நல்ல தேர்ச்சி உண்டு என்று கூறினேன். உடனே உன்னைப் பார்க்க விரும்பினார். நீ இவரை ஒருநாள் மலைக்காட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்!"

"அதுதானே பார்த்தேன். என்னுடைய வெறும் சிநேகத்தை யார் விரும்புவார்கள்? நான் இப்போதெல்லாம் அதிகமாக மலைக்குப் போவதில்லை. அதிலிருந்த ஊக்கம் குறைந்து போய் விட்டது. துப்பாக்கி அநேகமாகத் துருப்பிடித்துப் போய் விட்டது. வேண்டுமானால் இவரை ஒரு தடவை அழைத்துப் போகிறேன்" என்று கூறிக் கொண்டே சிவசங்கரனின் பக்கம் திரும்பி, "துப்பாக்கி உங்களிடம் இருக்கிறதா? அல்லது அதுவும் இரவல் வேண்டுமா?" என்று படபடவென்று மூச்சு விடாமல் பேசினான் கருணாகரன்.

சிவசங்கரனுக்கு அவன் பேசியவிதம் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. சிறிதும் மரியாதை இல்லாமல் பேசுகிறானே என்று வெறுப்பு உண்டாயிற்று. இவ்வளவு வசீகரமான தோற்றமுடையவனுடைய பேச்சில் நயமே இல்லையே என்று நினைத்தார்.

"துப்பாக்கி இருக்கிறது. எனக்குச் சிறிதளவு பழக்கமும் உண்டு" என்று அடக்கமாகக் கூறினார் சிவசங்கரன்.

"சரி! வருகிற ஞாயிற்றுக்கிழமை மலைமீது ஏறிப் போகலாம். கையில் பகல் உணவுக்கு ஏதாவது கொண்டு வந்து விடுங்கள்" என்றான் கருணாகரன்.

அவ்வளவு சீக்கிரம் அவன் பேச்சை முடித்து விடவே அவன் மீது சிவசங்கரனுக்குக் கோபம் உண்டாயிற்று.

அதற்கு மேல் பெரியவர் ஏதோ இரண்டொரு வார்த்தைகள் பேசினார். எல்லாவற்றுக்கும் மிகவும் சுருக்கமாகப் பதில் சொன்னான் கருணாகரன்.


அவன் அப்படிப் பேசியதால் சீக்கிரம் புறப்படும்படி நேர்ந்தது. சிவசங்கரன் அவனை மனத்துக்குள் சபித்துக் கொண்டே கிளம்பினார்.

பெரியவர் மாதவியைக் கூப்பிடாமல், "மாதவியிடம் சொல்லு, நான் போய் வருகிறேன்" என்று கருணாகரனிடம் கூறிவிட்டுப் புறப்பட்டார். சிவசங்கர

னுக்கு அவர் மீதும் ஆத்திரம் உண்டாயிற்று. கோபத்தோடு கருணாகரனிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் சிவசங்கரன் வேகமாகச் சென்றார்.

கொஞ்ச தூரம் சென்ற பிறகு சிவசங்கரன் பெரியவரைப் பார்த்து, "இந்தப் பையனைப் பற்றி ரொம்பப் பிரமாதமாக வர்ணித்தீர்களே! கொஞ்சங்கூட மரியாதை இல்லாமல் பேசுகிறானே?" என்றார்.

"கருணாகரன் நல்லவன்தான். ஆனால் அவனுக்குப் பல காரணங்களால் மனம் கசந்து போயிருக்கிறது. அதனால் பேச்சும் துடுக்காக இருக்கும். யாருக்கும் பயப்பட மாட்டான். முகத்துக்கு நேராக மனத்தில் தோன்றியதைக் கூறி



விடுவான். சில நாட்கள் பழகினால் அவன் நல்லவன் என்பது உனக்குத் தெரிந்து போய் விடும்."

"நல்லவனாக இருந்தால் போதுமா? மற்றவர்களிடம் பிரியம் காட்டும் தன்மையும் வேண்டுமல்லவா?"

"குறைகள் இல்லாத மனிதர்கள் உலகத்தில் யார் இருக்கிறார்கள்? பிரியமாகப் பேசுகிறவன், உள்ளே விஷமாக இருக்கிறான். கொஞ்சம் கசப்பாகப் பேசினாலும் இவன் மொத்தத்தில் நல்லவன். பொய் சொல்ல மாட்டான். வேஷம் போடத் தெரியாது. அதனால் எனக்குஅவனிடம் அனுதாபம்உண்டு."

"'அது சரி! காரணமில்லாமல் வர மாட்டீர்கள்' என்று அவன் கூறியதும் எனக்குச் சுருக்கென்றது. அவன் ஏன் அவ்வாறு கூற வேண்டும்?"

"அது அவனுடைய சுபாவம். நீ அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை. அவன் மாதவியையும் உன்னையும் சேர்த்து நினைக்கவே மாட்டான்" என்றார் கிருஷ்ணன்குட்டி.

"பாருங்கள்! நான் ஒன்று சொல்கிறேன். நீங்கள் வேறு ஏதோ சொல்கிறீர்கள். உங்களுக்கு அதே ஞாபகமாக இருக்கிறது. நான் இங்கு வந்ததே தவறு என்று தோன்றுகிறது."

"என்ன சிவசங்கரா, நீ கூட இப்படியெல்லாம் பேசுகிறாயே. நீ உலகத்தை அறிந்தவன். பெரிய பொறுப்பான உத்தியோகம் வகிப்பவன். உனக்கு மனச் சஞ்சலங்களே இருக்காதென்றல்லவா நான் எண்ணினேன்?"

"சஞ்சலம் ஒன்றும் இல்லை. அவன் பேசிய விதம் என்னை அவ்வாறு நினைக்கச் சொல்கிறது."

"கருணாகரன் கிடக்கட்டும். அந்த மாதவியைப் பார்த்தாயல்லவா? எவ்வளவு அடக்கமான பெண்? வீட்டையும் பார்த்துக் கொண்டு, பள்ளியிலும் வேலை செய்து கொண்டு எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறாள்? எனக்கென்னமோ அவளிடம் ஒரு தனிப் பாசம் உண்டாகி விட்டது. பாவம்! பெற்றோர் இருந்தால் இத்தனை நாள் அவளுக்குக் கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகளுக்குத் தாயாராகி இருப்பாள்."

"ஏன் எப்போது பார்த்தாலும் நீங்கள் கல்யாணத்தைப் பற்றியே பேசுகிறீர்கள்? உலகத்தில் கல்யாணம் செய்து கொள்ளாமல் உயிர் வாழவே முடியாதா, என்ன?"

"நீ இவ்வளவு படித்தவனாக இருந்தும் இப்படிக் கேட்கிறாயே. விவாகம் செய்து கொண்டு குடும்பமாக வாழ்ந்தால் எவ்வளவு கண்யமாகவும், கௌரவமாகவும் இருக்கிறது. கோடியில் ஒருவர்தான் பிரும்மச்சாரியாகவே வாழ முடியும். அவர்களை நாம் போற்றி வணங்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் பெண்கள் விவாகம் செய்து கொள்ளாமல் வாழ்வது என்பது எனக்குச் சரியென்று தோன்றவில்லை."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"பெண்களுக்கு இயல்பாகவே தாய்மை உணர்வு அதிகம். குழந்தை பெற்று வளர்ப்பதில் தான் அவர்களுக்கு வாழ்வு நிறைவு பெறுகிறது. பொதுவாகப் பெண்களே இன்னொருவரைச் சார்ந்து வாழ வேண்டியவர்கள். இயற்கையின் நியதியே அதுதான். அதை மீறினால் அவர்களுக்கு வெளியே தெரியும்படியான கஷ்டம் ஏற்படாவிட்டாலும், உள்ளத்தில் குறையாகவே இருக்கும்."

"எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை. ஏன்? மாதவியைத் தான் பாருங்களேன். அவளைப் பார்த்தால் குறைப் படுபவளைப் போலவா தோன்றுகிறது? தளதளவென்று உடற்கட்டும், இரும்பை ஒத்த திட சித்தமும் உள்ளவளாக இருக்கிறாளே!"

அருள் வாக்கு

நமது சரீரத்தை நம்முடையதல்லவென்று நினைக்க வேண்டும் என்று சொல்வது சுலபம். அப்படிச் செய்வது கடினம்தான். யாராவது நம்மை அடித்தால் அடிக்கவில்லையென்றாவது நோகவில்லை என்றாவது வைத்துக்கொள்ள முடிகிறதா? அப்படிச் செய்ய என்ன உபாயம்? உடம்பு இல்லையென்று நினைக்க முடியாமற் போனால், லோகத்தில் எல்லா உடம்பும் நம்முடையதே என்று நினைக்க ஆரம்பிக்க வேண்டும். அதே இதற்குச் சரியான உபாயம். அப்படி நினைப்பதால் இதரர்கள் கஷ்டப்படும்பொழுது அதற்குப் பரிகாரம் செய்ய நமக்கு எண்ணம் உண்டாகிறது. இதரர்களுடைய சுகதுக்கம் நம்முடையனவாக ஆகிவிடுகின்றன. நாம் செய்யும் எந்தக் காரியமும் நமக்காக அல்லவென்னும் எண்ணம் தானாகவே ஏற்பட்டு விடும். இந்த முடிவையே, எல்லாவற்றையும் ஈசுவரனுக்கு அர்ப்பணமாகச் செய்ய வேண்டும் என்று பகவான் கீதையில் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். ஆகையால் எப்பொழுதும் பிறருக்காக உழைக்க வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஈசுவரார்ப்பணம் செய்ய வேண்டும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்.

"நீ நினைப்பது தவறு. மாதவிக்கு இப்போது இருபத்தேழு வயதிருக்கும் என்று நினைக்கிறேன். இத்தனை நாள் அவள் தன் தம்பியைக் குழந்தை மாதிரி பாவித்துக் கொண்டு, அவனுடைய நலத்திலேயே அக்கறையுடன் இருந்திருக்கிறாள். நாளைக்குக் கருணாகரன் கல்யாணம் செய்து கொண்டு விட்டால் இவள் தனித்துப் போய் விடுவாள். அப்போது தனக்கென்று யாரும் இல்லையே என்ற குறை தெரியும். அது வரையில் அவள் அதை அதிகமாக உணர மாட்டாள்."

"கருணாகரன் அவளிடம் பிரியமாக இருக்க மாட்டானா?"

"அப்படி இல்லை. இப்போதே கருணாகரனைப் பற்றி ஒரு சமாசாரம் காதில் விழுந்தது. தொழிற்சாலை மானேஜர் பதவி அவனுக்குச் சும்மா கிடைத்து விடவில்லை. தொழிற்சாலை முதலாளி விஜயராகவன் தன் மகளை இவனுக்குக் கொடுத்து விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறாராம். இவர்களும் அதை விரும்புகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அவர்கள் மணந்து கொண்டால் கருணாகரனுக்குச் சிநேகிதர்கள், செல்வம் எல்லாம் கிடைத்து விடும். மாதவியோ ரொம்பத் தன்மான உணர்ச்சி உள்ளவள். தம்பி மனைவியுடன் வசிக்க விரும்ப மாட்டாள். மாதவி உபாத்தியாயினி வேலை பார்ப்பது அவர்களுக்கு அகௌரவமாக இருக்கும். வேலையை விட்டுவிடச் சொல்வார்கள். மாதவிக்குக் கணவன் இருந்தால் இந்தத் தொல்லைகள் எல்லாம் இருக்காது அல்லவா?"

"தன்னைப் பற்றி மாதவியே இவ்வளவு தூரம் சிந்தனை செய்து பார்த்திருப்பாளா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அவளுடைய நலத்தை இவ்வளவு தூரம் நீங்கள் அலசி ஆராய்ந்து பார்த்திருக்கிறீர்களே!"


"நமக்கு யாரிடம் பிரியம் இருக்கிறதோ அவர்களைப் பற்றி நம்மை யறியாமலேயே பல விஷயங்கள் நமக்குப் புலப்பட்டு விடுகின்றன. இந்தக் காரணங்களினால்தான் நீ மாதவியை மணந்து கொண்டால் நல்லது என்று எனக்குத் தோன்றியது..இல்லை, இல்லை. நான் மறுபடியும் ஆரம்பிக்கவில்லை. நீ கவலைப்படாதே. மாதவியின் நல்ல குணத்துக்கு அவளுக்கு ஈசன் ஒரு குறையும் வைக்கக் கூடாது என்பதுதான் என் பிரார்த்தனை" என்றார் பெரியவர்.

கிருஷ்ணன்குட்டியின் தங்கமான மனத்தைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார் சிவசங்கரன். அவருக்காகவேனும் மாதவியை உடனே மணம் செய்து கொண்டு விடலாம் என்று சிவசங்கரனுக்குத்தோன்றியது. "உங்களைப் போன்ற தங்கமான இதயம் படைத்தவர்கள் இந்தக் காலத்தில்கூட இருக்கிறார்களே. இந்தக் கோர்ட்டுகளில் நடக்கும் பொய் புனைசுருட்டு வழக்குகளைப் பார்த்துப் பார்த்து எனக்கு யாரைக் கண்டாலும் நம்பிக்கை ஏற்படுவதில்லை. நீங்கள் மட்டும்தான் அதற்கு விதிவிலக்காக இருக்கிறீர்கள்" என்றார் சிவசங்கரன்.

"ரொம்பப் புகழாதே அப்பா. நீ வீட்டுக்குப் போ. நான் போய் வருகிறேன். கருணாகரனுடன் நீ சிநேகம் செய்து கொண்டால் உனக்குப் பயன் இல்லாவிட்டாலும் அவனுக்கு நல்லது. அதற்காகவாவது நீ கட்டாயம் ஞாயிற்றுக்கிழமை வேட்டைக்குப் போய் விட்டு வா" என்று கூறி விடைபெற்றுக் கொண்டார் பெரியவர்.

சிவசங்கரன் அன்றிரவு வெகு நேரம் வரை உறங்கவில்லை. மாதவி இளநீர் சீவிய தோற்றமும், மதுரமாகப் பேசியதும் அவருக்கு ஞாபகம் வந்து கொண்டே இருந்தன. (தொடரும்)

பளு மிகுந்த இயக்க வேலைகளுக்கு



காஸ்ட்ரால் ஸி ஆர் உபயோகித்து

இந்த 6 வித முக்கிய அனுகூலங்களைப் பெறுங்கள்

நீடித்த உழைப்புக் காலம்

டீஸல் எண்ணெயின் எரிபொருள்களால் ஏற்படும் ஸிலிண்டர் தேய்மானத்தையும் ரிங் ஒட்டிக் கொள்வதையும் காஸ்ட்ரால் ஸி.ஆர் தடுக்கிறது. இதனால் இன்ஜின் நீண்ட காலத்திற்கு உழைக்கும்.

அதிகப்படியான திறமை

மிகக் கடுமையான உழைப்புச் சந்தர்ப்பங்களிலும் காஸ்ட்ரால் ஸி.ஆரில் உள்ள ஆக்ஸிடேஷன் தடுப்புகள் திப்பியும் வார்னிஷும் சேருவதைத் தடுத்து திறமையை அதிகரிக்கச் செய்கின்றன.

அதிக உஷ்ணநிலை உழைப்புக்கு அதிக பாதுகாப்பு

தற்கால டீஸல் இன்ஜின்களின் உழைப்பால் அதிக உஷ்ணம் ஏறுவதால் பிஸ்டன்களின் ரிங் பெல்ட் பகுதிகள் ஒட்டிக் கொள்ள ஏதுவாகிறது. காஸ்ட்ரால் ஸி.ஆரில் இருக்கும், இதுவரை கண்டு பிடிக்கப்படாத வன்மையான அடிடிவ்கள் தீமைமிக்க எரி பொருள் வஸ்துக்களை வெவ்வேறாக நீங்கு இல்லாத முறையில் பிரித்து விடுகின்றன. இதனால் பாதுகாப்பு அதிகமாக ஏற்படுகிறது.

பாரமின்றி ஓடுவதிலுள்ள அபாயங்களைத் தவிர்க்கிறது

இலேசான சுமைகளுடன் அல்லது குறைந்த உஷ்ண நிலையில் இயங்குவதால் கரி ஏற்பட்டு எண்ணெய் எரியாமலும் இறுகிய சாறும் குழிக்குள் புகுந்து லூப்ரிகன்டை கெடுத்து விட ஏதுவாகும். காஸ்ட்ரால் ஸி.ஆர் மற்றெந்த கனரக சுத்திகரண எண்ணெயைக் காட்டிலும் கலபமாக கரி முதலான அழுக்குகளை தனித் தனியாகப் பிரிக்கிறது.

அமில எரி பொருள்களைத் தடுக்கிறது

தற்காலத்தில் அதிக ஸல்பர் சேர்க்கைக் கொண்ட டீஸல் எண்ணெய்களால் ஏற்படும் அமிலமயமான பொருள்களை எதிர்த்துத் தடுப்பதற்கான முறையில் காஸ்ட்ரால் ஸி.ஆர் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விசேஷமான அம்சம் என்ஜினுக்குச் சிறந்த பாதுகாப்பு.

அதிக சிக்கனம்—குறைந்த பராமரிப்பு


காஸ்ட்ரால் ஸி.ஆர் மேலான பாதுகாப்பு அளிப்பதால் இன்ஜின்கள் புதியனபோல் சுத்தமாக இருக்கும். இதனால் பராமரிப்புச் செலவு குறையும். பழுதுச் செலவு குறையும். மேலும் மிகச் சிக்கனமான உழைப்புச் செலவு.

காஸ்ட்ரால்

எண்ணெய்களில் மிகச் சிறந்தது

ஸி. ஸி. வேக்பீல்ட் & கோ., லிட்.

இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப் பட்டது



மாலையில் கறிகாய்க் கடையில் ஒரு பெண்மணி :—அப்பா ! இது புதுக் கத்திரிக்காய் தானே ? என்ன விலை ?

கடைக்காரர் :— ஆமாங்க ! புதுசுதான். இப்பொழுதுதானுங்கவந்தது! அப்படியே அதிலிருக்கிற ஒரு வீசையையும் எட்டணு போட்டு எடுத்துக்குங்க !



பெண்மணி :— என்னப்பா! நிறுத்துப் பார்க்காமலே சொல்றியே ?

கடைக்காரர் (கோபத்தில் மறந்து போய்):— என்ன அம்மா ! இதை நேற்றிலிருந்து நூறு பேருக்கு நிறுத்துக் காண்பித்து விட்டேன். சரியாக ஒரு வீசை தான்! வேணும்னு வாங்கிக்கொண்டுபோங்க!

★



ஆசிரியர் :— பலர் விரும்பாமலே யிருந்தால்கூட ஒருவர் விடாமல் பேசிக் கொண்டே யிருக்கிறார். அவர் யார், தெரியுமா ?

பையன் :— பள்ளிக்கூட ஆசிரியர் !

★

முதலாளி :—உங்களுக்குக் கொடுக்கிற சம்பளத்தைப் பற்றி மற்றவர்களிடம் தெரிவித்துவிடக் கூடாது. இரகசியமாகவே இருக்க வேணும் ! தெரிந்ததா?

குமாஸ்தா :—கவலைப்பட வேண்டாம் ! நான் யாருக்கும் தெரிவிக்க மாட்டேன். உங்களைப் போலவே நானும் என் சம்பளத்தை வெளியில் தெரிவிக்க வெட்கப்படுகிறேன் !

கிராமத்து லோக்கல் பண்டு ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டர் புதியதாகக் கார் வாங்கியிருந்தார். அதைப் பார்த்த அவருடைய முதல் நண்பர் "ஸார் ! நீங்கள் கார் வாங்கிய அதிர்ஷ்டம் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போகனும்!" என்றார்.



இரண்டாவது மனிதர் :—போதும் உங்கள் வாழ்த்து! அவர் புதிய கார் லாரியில் மோதி அடிபட்டுப் பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். இன்று தான் திரும்பி வந்திருக்கிறார்!

கணவர் (டெலிபோனில்):—இன்றிரவு பத்துப் பேரைச் சாப்பிட அழைத்து வரலாமென்றிருக்கிறேன்...!

பதில்;—பேஷாக அழைத்து வாருங்கள். இதில் தயக்கமென்ன ?

கணவர் :-என்ன ஆச்சரியமாக இருக்கிறதே! என் சாரதாவுக்கு எப்பொழுது மனம் இப்படி மாறிப் போயிற்று !

பதில்:—இது சாரதா இல்லை; சாரதா லஞ்ச ஹோம்...

★

பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் ஒருவன் தலைகீழாக நடக்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான். அதைக் கண்டு ஆஸ்பத்திரி அதிகாரி:-ஏண்டா! இப்படித் தலை கீழாக நின்று என்னசெய்யறே?



மற்றவர் :— நேற்று நீங்க நடந்து போகிற போது, 'ஏண்டா! பைத்தியம் ! நடந்து போகிறாய் ?' என்றீங்க....

அதிகாரி:—ஆமாம்; அதற்கு இப்பொழுது என்ன ?

மற்றவர் :— இனிமேல் நீங்கள் என்னைப் பைத்தியம் என்று நினைக்கப்படாது, பாருங்க; அதற்காகத்தான் தலைகீழாக நடக்கிறேன் !

★

நாட்டுப்புற மனிதர் :—என்னப்பா, இது! பந்து, மட்டை யெல்லாம் வாங்கிட்டு வர்றே! இதெல்லாம் என்னத்துக்கு ?



இரண்டாவது நாட்டும்புற மனிதர் :—நம்ம இடவிலே பந்தாடினவங்க இதெல்லாம் நட்டு விளையாட ஆரம்பித்த உடனே மழை வந்து விட்டது! அதனாலே நாம் இதை நட்டு வைத்தால் மழை வந்து விடுமென்றுதான் வாங்கிக் கொண்டு வந்தேன் !

★

ஊருக்குப் புதிதாக வந்தவர் :—இந்த ஊரிலுள்ள புதிய சிநேகிதர்களெல்லாம் என்னை விருந்துக்குக் கூப்பிடுகிறார்கள். யார் வீட்டுக்குப் போவது என்பதுதான் எனக்குக் கஷ்டமா யிருக்கிறது !

மற்றவர் :—ஒருதரம் அவர்கள் வீட்டுக்குப் போய் வந்தால் அந்தக் கஷ்டம் தானகப் பறந்து போய் விடும் !



அல்லாவுதீனும் அற்புத விளக்கும்

காந்தன்

எப்பொழுதும் நடக்கக் கூடாதவைகளை நினைத்து ஏங்குவது மனித உள்ளங்களின் இயல்பு. சுக வாழ்வைக் கற்பனைக் கண்ணால் கனவு கண்டு மகிழ்வதில் யாருக்குமே ஒரு தனி இன்பம் உண்டு.

பூதக் கதைகளும், பேய்க் கதைகளும், மாய ஜாலக் கதைகளும் எத்தனையோ ஆண்டுகளாக உலகில் உலவி வருகின்றன. மாயமும் மர்மமும் சிறுவர் சிறுமியர்களைத்தான் ஈடுபடுத்தும் என்பதில்லை. பெரியவர்கள் கூட அக்கதைகளைப் படிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

சினிமாப் படங்களைப் பொறுத்தவரையில் மாய ஜாலக் கதைகள், சாதாரணச் சமூகக் கதைகளை விட மேலானவை என்று சில சமயம் நினைக்கத் தோன்றுகிறது.

சுவை நைந்துபோன பழங் கதைகளையே மாற்றிப் பல ரூபங்கள் கொடுத்து மீண்டும் மீண்டும் துணிந்து வெள்ளித் திரையில் வெளியிடுவதைக் காணும்போது மனம் சலித்துப் போகிறது. மேற்கூறிய கதைகளைவிட மாய ஜாலக் கதைகள் பதினாயிரம் மடங்கு சிறந்தவை. நல்லபடியாகத் தயார் செய்த மாய ஜாலக் கதைகளில், மர்மங்களும் மாயங்களும், எதிர்பாராத 'சஸ்பென்ஸ்'களாகத் துணை நின்று படத்தைக் கடைசி வரையில் பார்க்க உதவி புரியும்.

படத்தில் விசேஷக் கருத்தோ, கதைப் போக்கில் நூதன அம்சமோ அதிகமாக இல்லாமலே கவர்ச்சிகரமான காட்சிகளிலேயே இந்த மாய ஜாலப் படங்கள் அமோகமான வெற்றி பெற்று விடுவதுண்டு.

எந்தப் படத்துக்கும் கவர்ச்சிகரமான காட்சியம்சம் இன்றியமையாதது. சிறந்த இலக்கியமானாலும், இறவாத புகழ் பெற்ற இணையற்ற நூலானாலும் புத்தகத்தின் மேல் அட்டை கவர்ச்சிகரமாக அமைந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அப் புத்தகம் விலை போகாது.

படத்தின் கவர்ச்சியைக் கூறும்போது இப்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் '' ஏக் ஜலக் '' என்னும் ஹிந்திப் படம் நினைவு வருகிறது. தென்னிந்தியச் சினிமா வானிலிருந்து வட இந்தியச் சினிமா வானத்துக்குப் பறந்து சென்று புகழுடன் விளங்கும் வைஜயந்திமாலா நடிக்கிறார் என்றால் அந்தப் படத்தின் கவர்ச்சிக்குக் கேட்பானேன்!

திரைக்கதையில் விசேஷப் பின்னல் எதுவும் இல்லை. ஆனால் வான வில்லின் வர்ண ஜாலங்களுடன் விதம் விதமான நடனங்கள் படம் முழுவதும் பின்னிக் கொண்டிருக்கின்றன. கவர்ச்சிகரமான மெட்டுக்களில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற பாட்டுக்களும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. ஒரு வாலிபன் ஒரு நடனப் பெண்ணைக் காண்கிறான்; காதல் கொள்கிறான்; நடன கோஷ்டியினரிடமிருந்து அவளைப் பிரித்து அழைத்துக் கொண்டு வந்து விடுகிறான். அவள் முதலில் அவனை வெறுக்கிறாள். நடந்து போகும் போதும், காரில்

போகும் போதும் காதல் வளர்ந்துகொண்டே வந்து, ஊடலினால் உரம் பெற்று வளருகிறது. பிறகு?.....அவளும் அவனைக் காதலிக்கத் தொடங்குகிறாள். ஒரே கவர்ச்சிதான். அப்புறம் என்னவென்றால்...? கதைதான் முடிந்து போய் விட்டதே!

ஜெய்சக்தி பிக்சர்ஸ் தயாரித்து வெளியிட்டிருக்கும் "அலாவுதீனும் அற்புத விளக்கும்" என்னும் படம் கவர்ச்சியில் சிறந்து விளங்குகிறது.

உலகப் பிரசித்தி பெற்ற அராபிக் கதைகளில் ஒன்றான இக் கதை மிக மிகப் பழையது. எண்ணும் எழுத்தும் தோன்றுவதற்கு முன்பே, இக் கதை உலகம் முழுவதும் பயின்று வந்து, மக்கள் கண்ணும் கருத்துமாகக் காதால் கேட்டு நன்கு அநுபவித்த கதை. எல்லோருக்கும் தெரிந்த இந்தக் கதையை மீண்டும் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இந்தக் கதையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பழைய கதையில் ஒரு மந்திரவாதி தான்; ஆனால் இந்தத் திரைக் கதையில் பல மந்திரவாதிகள் வருகிறார்கள். பழைய கதையில் அலாவுதீனின் தாயாரே அற்புத விளக்கை அதன் மர்மத்தை யறியாமல் மந்திரவாதியிடம் கொடுத்து விடுகிறாள். சினிமாவில் இதற்காக ஷிதாரா என்ற பாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அப் பாத்திரத்தை ஏற்று, குழைந்து நெளிந்து எழில் பொங்க நடித்திருக்கிறார், ராஜசுலோசனா.

அலாவுதீனாக நடிப்பவர் ஏ. நாகேசுவரராவ் என்றால் அவர் காதல் கட்டங்களிலும், சண்டையிடும் கட்டங்களிலும் எப்படி நடித்திருப்பார் என்று நாமே ஊகித்துக் கொள்ளலாம். ஆனால் இந்தப் படத்தில் நாகேசுவரராவின் நடிப்பில் விசேஷமாகச் சொல்லும்படி எதுவும் இல்லை. குத்துச் சண்டை, மல்யுத்தம் முதலியவற்றி லெல்லாம் இந்தப் படத்தில் நாகேசுவரராவ் சக்கைப் போடு போட்டிருக்கிறார்.

தங்கவேலுவுக்கு இந்தப் படத்தில் வழக்கமான ஹாஸ்யங்களுக்கு நிறைய இடம் இருக்கிறது. ஆனால் அவர் நடிப்பிலும் ஹாஸ்யப் பேச்சுக்களிலும் புதிதாக ஏதும் இல்லை என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

அலாவுதீனின் காதலுக்கு உகந்த அரசிளங் குமரியாக நடிப்பவர் அஞ்சலி தேவியென்றாலே போதும். 'அனார்கலி' படத்தில் அனார்கலியாக நடித்து, புகழ்பெற்ற அஞ்சலி தேவிக்கு இந்தப்படத்தில் நடிப்பது சிரமமா யிருந்திராது. மேலும் இந்தப் பாத்திரத்துக்கு அனார்கலி மாதிரி சிரமம் இல்லை. காதல் ஒருவனைக் கைப் பிடிக்கவும், அவனுடன் அரண்மனை வாழ்வு வாழவும், அவ் வாழ்வை மந்திர வாதியின் சதியினால் ஒரு விநாடியில் இழக்கவும், இழந்த வாழ்வைச் சாமர்த்தியமாக மந்திரவாதியிட மிருந்து திரும்பிப் பெறவும் எல்லாம் சுலபமாகவே நடக்கின்றன.

இந்தப் படத்தில் டி. எஸ். பாலையா பிரமாதமாக நடித்திருக்கிறார். அலாவுதீனுக்கு ஆரம்ப முதல் கடைசி வரையில் உதவியாயிருக்கிறார். பேச்சுச் சக்தியை மந்திரவாதியின் மந்திரத்தினால் இழந்த பிறகு பாலையா பிரமாதமாக நடிக்கிறார். மந்திரவாதியாக வரும் எஸ். வி. ரங்காராவின் நடிப்பு, பேச்சு, பாவம் எல்லாம் சிறப்பாயிருக்கின்றன.


நடன நிகழ்ச்சிகள் நிறைய இடம் பெற்றிருக்கின்றன. ராஜசுலோசனா நடனமாகவே ஆடித் தள்ளியிருக்கிறார். வர்ண ஜாலங்களில் காஷ்மீர் காட்சிகள் காட்டப்படுகின்றன. முக்கிய நடிகர்கள் காஷ்மீர் சென்று அந்த இன்ப லோகத்தில் நடித்திருக்கின்றனர். உண்மையில் அவை பாராட்டப்பட வேண்டியவை. மந்திர வேலைகளும் மாய ஜாலங்களும் நன்கு காட்டப்படுகின்றன. சில குறைகள் குறிப்பிட வேண்டியவை:

பூதம் உண்டாக்கிய மாளிகை மலைமேல் கொண்டு செல்லப்படுகிறது. ஆனால் அதற்கு வழி இருப்பதாகவே தெரியவில்லை. பொம்மை மாளிகை மாதிரி தோற்றம் அளிக்கிறது. ஏறிச் செல்பவர்கள் கூட வாயிலை நெருங்கவேயில்லை. ஆங்கிலப் படங்கள்மாதிரி சிறந்த உத்திகளைக் கையாண்டு காமிராவை மிகவும் சாமர்த்தியமாக இயக்கவேண்டிய படம் இது.

முடிவில், பாலையாவும் ரங்காராவும் சண்டை யிடுவதைக் கொஞ்சம் பெரிதாகக் (குளோஸ் அப்) காட்டியிருக்கலாம். பறக்கும் ஜமக்காளக் காட்சியை இன்னும் நன்றாகக் காட்டி யிருக்கலாம்.

மந்திரக் கோலுக்குப் பதிலாகக் கத்திரிக் கோலை உபயோகித்து, நிமிஷத்துக்கு நிமிஷம் நடக்கும் நடனங்களைக் கத்திரித்துப் படம் பார்ப்பவர்களுக்கு ஓரளவு சௌகரியம் செய்திருக்கலாம். அளவுக்கு மிஞ்சினால் எதுவும் சிரமம்தானே!





புதிய நாணயங்கள்
1957 ஏப்ரல் 1-உ முதல்

தற்போதைய நாணயங்களின் அதன் சரி சமமான மதிப்பு

10 நயே பைசே–(ரூபாயில் 10ல் ஒரு பாகம்)–1 அணா 7.2 பை
5 நயே பைசே–(ரூபாயில் 20ல் ஒரு பாகம்)–9.6 பை
2 நயே பைசே–(ரூபாயில் 50ல் ஒரு பாகம்)–3.84 பை
1 நயா பைசா–(ரூபாயில் 100ல் ஒரு பாகம்)–1.92 பை
(நயே பைசே என்பது நயா பைசாவின் பன்மை)

பழைய நாணயங்களான காலணா, ½ அணா, 1 அணா, 2 அணா, 4 அணா, 8 அணா நாணயங்களும் மேற்கூறிய புதிய நாணயங்களுடன் புழக்கத்திலிருக்கும். காலணா, எட்டணா நாணயங்களுக்கு நேர் சமமான புதிய நாணயங்களை முறையே 25 நயே பைசே, 50 நயே பைசே. எல்லா லேவாதேவிகளிலும் இதே விகிதத்தைக் கையாளலாம். பழைய, புதிய நாணயங்களை இரண்டும் லேவாதேவியிலோ அல்லது கணக்குகளிலோ செல்லுபடியாகும்.

நாணய மாற்றும் சாதனங்கள்

ரிஸர்வ் பாங்கு காரியாலயங்கள், ஸ்டேட் பாங்கு கிளைகள், ஏஜென்ஸி பாங்குகள், கஜானாக்கள், உப கஜானாக்கள் ஆகியவை மூலம் நாணயங்களை மாற்றிக் கொள்ளலாம்.

இப்போதுள்ள நாணயங்களைக் கொடுத்துதான் புதிய நாணயங்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். அதற்கு பழைய நாணயங்களின் மொத்த மதிப்பு 4 அணாவும் அதன் மடங்குகளாகவும் — அதாவது 4 அணா, 8 அணா, 12 அணா, 1 ரூபாய் போன்றவைகளில் — இருக்கவேண்டும்.

நாணய மாற்றுப் பட்டியல்

அணா/பைகளுக்குச் சமமான மதிப்புள்ள நயா பைசாக்களை நாணய மாற்றுப்பட்டியலில் காணலாம். (சமீபத்தில் திருத்தப்பட்ட 1906ஆம் இந்திய நாணயச் சட்டத்தின் 14(2) பிரிவில் கொடுத்துள்ள முறைப்படி பூரிதமாக்கப்பட்டுள்ளது). அதில் மாற்ற வேண்டிய மொத்த நாணயத்திற்கும் சமமான நயா பைசா பின்னங்கள் முழு நாணயங்களாக (பூரிதமாக) ஆக்கிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது ½ நயா பைசாவும் அதற்குக் குறைந்த பின்னங்களும் விட்டுவிடப்பட்டு, ½ நயா பைசாவுக்கு மேலுள்ளதை ஒரு நயா பைசா என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எந்தவொரு லேவாதேவியிலும் அணா/பைகளில் ரொக்கமாகக் கொடுத்தால் அதற்குச் சமமான நயா பைசாக்கள்.

பழைய நாணயங்கள்		புதிய நாணயங்கள்	பழைய நாணயங்கள்		புதிய நாணயங்கள்	பழைய நாணயங்கள்		புதிய நாணயங்கள்	பழைய நாணயங்கள்		புதிய நாணயங்கள்
அணா	பை	நயே பைசே	அணா	பை	நயே பைசே	அணா	பை	நயே பைசே	அணா	பை	நயே பைசே
0	3	2	4	3	27	8	3	52	12	3	77
0	6	3	4	6	28	8	6	53	12	6	78
0	9	5	4	9	30	8	9	55	12	9	80
1	அணா	6	5	அணா	31	9	அணா	56	13	அணா	81
1	3	8	5	3	33	9	3	58	13	3	83
1	6	9	5	6	34	9	6	59	13	6	84
1	9	11	5	9	36	9	9	61	13	9	86
2	அணா	12	6	அணா	37	10	அணா	62	14	அணா	87
2	3	14	6	3	39	10	3	64	14	3	89
2	6	16	6	6	41	10	6	66	14	6	91
2	9	17	6	9	42	10	9	67	14	9	92
3	அணா	19	7	அணா	44	11	அணா	69	15	அணா	94
3	3	20	7	3	45	11	3	70	15	3	95
3	6	22	7	6	47	11	6	72	15	6	97
3	9	23	7	9	48	11	9	73	15	9	98
4	அணா	25	8	அணா	50	12	அணா	75	16	அணா	100

ஒரு பரிவர்த்தனையின் இறுதியில் கொடுக்க வேண்டிய அணா, பைகளுக்குச் சமமான நயா பைசாக்கள் கண்டு பிடிக்கும்போது மட்டுமே நாணய மாற்றுப்பட்டியலில் கொடுத்துள்ளபடி பின்னம் நீக்கி முழு நாணயமாக்க (பூரிதமாக்க) வேண்டும்.

உங்களிடம் இருக்கும் நாணயத்தைப் பொறுத்து பழைய அல்லது புதிய நாணயங்களையோ அல்லது இரண்டையும் கலந்தோ கொடுக்கலாம்.

எனவே கீழ்க்கொடுத்துள்ள உதாரணங்கள் பிரகாரம் பரிவர்த்தனையின் முடிவில் பணம் கொடுக்கும்போது அல்லது சில்லறை மாற்றும்போது மட்டுமே இந்த நாணய மாற்றுப் பட்டியலை உபயோகிக்க வேண்டும்.

உதாரணங்கள் : (கொடுக்கவேண்டிய தொகை அணா பைகளிலிருந்தால்)

ஒவ்வொன்றும் 1½ அணா விதம் 12 சாமான்களுக்குக் கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை 1 ரூபாய் 2 அணா. அதை பொருள்வாங்கியவர் பழைய நாணயங்களில் கொடுக்கலாம்,

அல்லது

1 ரூபாய் 12 நயே பைசே கொடுக்கலாம். (பட்டியலில் குறிக்கப்பட்டுள்ளபடி 12 நயே பைசே. 2 அணாவுக்குச் சமம்)

மேற்கூறிய உதாரணத்தில், பொருள் வாங்கியவர் 2 ரூபாயை — எல்லாம் பழைய நாணயங்களாகக் கொடுத்து விட்டு, மீதியைக் கேட்கலாம். பாக்கி 14 அணாவை, அணா நாணயங்களிலோ அல்லது புதிய நாணயங்களிலோ அல்லது ஒரு பகுதியை பழைய நாணயத்திலும் மற்றோர் பகுதியை புதிய நாணயங்களிலும் கொடுக்கலாம். உதாரணமாக, எட்டு அணாவை பழைய நாணயங்களாகவும் பாக்கி 6 அணாவை புதிய நாணயங்களாகவும் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாணய மாற்றுப் பட்டியலைப் பார்த்தால் 37 நயே பைசே 6 அணாவுக்குச் சமம் என்று தெரியவரும்.

உதாரணங்கள் : (கொடுக்கவேண்டிய தொகை நயா பைசாக்களிலிருந்தால்)

ஒரு பொருளின் விலை 11 நயே பைசே. ஒருவர் இதை புதிய நாணயமாகவோ அல்லது 1 அணா 9 பைசாகவோ கொடுக்கலாம். (பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி 1 அணா 9 பை. 11 நயே பைசேக்குச் சமம்)

ஒருவர் 20 நயே பைசே கொடுத்துவிட்டு 11 நயே பைசே போக மீதி கேட்டால், 9 நயே பைசே அல்லது அதற்குச் சமமான பழைய நாணயங்கள் — 1 அணா 6 பை — கொடுக்கலாம்

11 நயே பைசே கொடுக்க வேண்டியவர் உங்களிடம் 4 அணா நாணயம் கொடுத்து பாக்கி கேட்கலாம். 25 நயே பைசே 4 அணாவுக்குச் சமம். எனவே திரும்பக் கொடுக்க வேண்டிய தொகை 14 நயே பைசே. இதை பூராவும் புது நாணயங்களாகவோ அல்லது அதற்குச் சமமான பழைய நாணயங்களாகவோ — பட்டியலிலுள்ளபடி 2 அணா 3பை — கொடுக்கலாம். மேலும் ஒரு அணா நாணயத்தையும் (6 நயே பைசே), புதிய நாணயத்தில் 8 நயே பைசேயும் சேர்த்துக் கொடுக்கலாம்.

ஒவ்வொரு பொருளின் அல்லது யூனிட்டின் விலையான அணா/பைகளுக்குச் சமமான நயா பைசாக்களைக் கண்டுபிடிக்கக் கூடாது. கொடுக்கவேண்டிய மொத்த தொகைக்கு சமமான நயா பைசாக்களையே கண்டுபிடிக்க வேண்டும்.

உதாரணமாக :

அ) ஒவ்வொன்றும் 3 அணா விதம் 50 சாமான்கள் வாங்கினால் முதலில் மொத்தத் தொகையையும் ரூபாய்/அணாக்களில் கண்டு பிடியுங்கள் ; நீங்கள் கொடுக்கவேண்டிய மொத்தத் தொகை 9 ரூபாய் 6 அணா.

ஆ) உங்களிடம் நயா பைசாக்கள் மட்டுமே இருந்தால், 6 அணாவுக்கு சமமான நயே பைசே எத்தனையென்று நாணய மாற்றுப்பட்டியலில் பாருங்கள்; 37 நயே பைசே என்று தெரியவரும். எனவே 9 ரூபாய் 37 நயே பைசே கொடுங்கள்.

3 அணாவுக்குச் சரியான விகிதாசாரத்தை (18¾ நயே பைசே) கணக்கிட்டு, அதை 50-ஆல் பெருக்கினால் கூட மேற்கூறிய தொகைதான்வரும். ஆனால் நாணய மாற்று பட்டியல் மூலம் 3 அணாவுக்குச் சமமான முழு நாணயமாக்கிய (பூரிதமாக்கிய) நயா பைசாக்களைக் கண்டுபிடித்து (19 நயே பைசே) அதை 50-ஆல் பெருக்குவது தவறு.

இதே போல, ஒருவரிடமிருந்து ஒரு சமயத்தில் ஒவ்வொன்றும் வேறுபட்ட விலையுள்ள பொருள்களை அணா, பைகள் மதிப்பில் வாங்கினால் முதலில் எல்லா பொருள்களுக்கும் கொடுக்கவேண்டிய மொத்தத் தொகையையும் ரூபாய், அணா, பைகளில் கணித்துக் கொள்ளுங்கள். அதை நீங்கள் புதிய நாணயங்களில் கொடுக்க விரும்பினால், மொத்தத் தொகையிலுள்ள அணா, பைகளுக்குச் சமமான நயா பைசாக்களை நாணய மாற்றுப் பட்டியலிலிருந்து கண்டுபிடியுங்கள்.

கீழ்க்கண்ட வாய்ப்பாட்டை நினைவில் வைத்துக் கொண்டால் நாணய மாற்றம் சுலபமாகிவிடும் :

4 அணா	—	25 நயே பைசே
8 அணா	—	50 நயே பைசே
12 அணா	—	75 நயே பைசே
1 ரூபாய்	—	100 நயே பைசே

உதாரணமாக :


அ) 10½ அணா கொடுக்கவேண்டியிருந்தால், முதலில் 8 அணா அல்லது 50 நயே பைசே கொடுங்கள் ; மீதமுள்ள 2½ அணாவுக்குப் பதிலாக 16 நயே பைசே கொடுங்கள்.

ஆ) 36 நயே பைசே கொடுக்கவேண்டியிருந்தால், முதலில் நாலணா அல்லது 25 நயே பைசே கொடுங்கள்; மீதமுள்ள 11 நயே பைசேக்குப் பதிலாக 1 அணா 9 பை கொடுங்கள்.

DA 96/250 TM

திடுக்கிட்டான் ராகவன். எந்த ஒரு ரகசியத்தை இத்தனை நாளும் மனத்துக்குள் பத்திரமாகப் பூட்டி வைத்திருந்தானோ, அது இவ்வளவு வருஷங்கள் கழித்து இன்று ஒரு கடிதம் மூலம் வெளியாக இருந்திருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கவே அவனுக்குத் திகிலாக இருந்தது. இருந்தாலும் அவனுடைய அதிர்ஷ்டம்தான் அந்தக் கடிதம் அவன் கையிலேயே சிக்கியிருக்கிறது!

அவன் தபால் இலாகாவின் 'டெட் லெட்டர் ஆபீஸில்' பொறுப்பு வாய்ந்த உத்தியோகம் பார்க்கிறவன். அன்று காலை காரியாலயம் வந்ததும் முதலாவதாக உடைத்த கவரில் அவனால் அனாதையாக விடப்பட்ட முதல் மனைவி கமலா அவனுடைய தற்போதைய மனைவிக்கு எழுதிய கடிதம் ஒன்று இருந்தது. கடிதத்தின்



இருள்

இ. அனீஸ்

தலைப்பில் இருந்த விலாசத்தைப் பார்த்த பிறகு தான் சாக்ஷாத் அவளே என்று ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

கடிதம் இதுதான் :—

"அன்புள்ள ருக்கு,

உன்னை அன்று இராமேசுவரத்தில் ரயில்வே ஸ்டேஷனில் சந்தித்ததை மறந்திருக்க மாட்டாய். அப்போது இருவருக்கும் விவரமாகப் பேச நேரமில்லை. இரண்டொரு வார்த்தைகள் பேசவே அவகாசம் கிடைத்தது. நீ உன் விலாசம் தந்திருந்தாய். என் முட்டாள்தனம் அதைத் தொலைத்து விட்டேன். இக்கடிதம்கூடப் போதிய விலாசமில்லாமல் எழுதுகிறேன். உன் கைக்கு இக்கடிதம் வந்து சேருமா என்பது சந்தேகம்தான். காரணம் "ருக்மிணி (மேற்பார்வை) ராகவன், தபாலாபீஸ், சென்னை" என்று விலாசமிட்டிருக்கிறேன். சமுத்திரம் போன்ற ஊரில் இப்படி விலாசம் விவரமாக இல்லாத கடிதத்தை யாருக்கு என்று விசாரித்துக் கொடுப்பார்கள்? முடியாத காரியம்தான். இருப்பினும் உனக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும் என்று இரண்டு தினங்களாகவே மனத்தில் ஒரு துடிதுடிப்பு. அதன் மூலமாகவாவது மனத்திலே உள்ள உளைச்சல் கொஞ்சம் குறையட்டுமே என்று படுகிறது. அப்படியே இக்கடிதம் உன் கையில் கிடைக்கா விட்டாலும்தான் என்ன? வேறு யார் இதைப் படித்துவிடப் போகிறார்கள்? எனக்கே அந்தக் கடிதம் திரும்பி வந்துவிடும், அவ்வளவுதானே?



நானும் நீயும் இன்று நேற்றுப் பழகினவர்கள் இல்லை. உன் அப்பா சிதம்பரம் பாங்கில் ஏஜண்டாயிருக்கும் போது என் தகப்பனார் அங்கே பெரிய அரிசி மண்டி ஒன்று வைத்து நடத்திக் கொண்டிருந்தார். இருவரும் அன்யோன்யமாகப் பழகினார்கள். அவர்களுடைய பெண்களான நாமும் அதேபோலப் பழகினோம். அப்புறம் உன் அப்பாவின் மாற்றல் என் தந்தைக்கு ஏற்பட்ட பொருள் நஷ்டம் இவை நம்மைப் பிரித்து விட்டன. நான் கிராமத்துக்கு வந்து விட்டேன். நீ பட்டணம் போய் விட்டாய். அதுமுதல் இருவருக்குமிடையே தொடர்பே இல்லாமல் போய் விட்டது. சொல்லப் போனால் நாமிருவரும் ஒருவரை யொருவர் ஓரளவு மறந்துகூட விட்டோம் எனலாம். ராமேசுவரம் சந்திப்புத்தான் நம் பழைய நட்பைப் புதிப்பித்திருக்கிறது. இப்படிப்பட்ட தோழியிடம் என் மனத்தைத் திறந்து சொல்லாமல் வேறு யாரிடம் ருக்கு சொல்லப் போகிறேன்?

என்னைக் கல்யாணம் செய்து கொண்டவருக்கு இதே ஊர்தான். ராகவன் என்று பெயர். நன்றாய்ப் படித்தவர்தான். தாயாரைத் திருப்திப்படுத்த என் கழுத்தில் தாலி கட்டிவிட்டுத் தாயார் இறந்த மறு நிமிஷம் என்னைக் கைவிட்டு விட்டார். இப்போது அவர் வேறு யாரையேனும் கல்யாணம் செய்து கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நான் வந்த வழி அது. யார் பேரில் வருத்தப்பட்டு என்ன பயன்? அவளாவது சந்தோஷமா யிருக்கட்டும். என் கழுத்தில் மாங்கல்யம் ஜ்வலிக்கிறது. அதுவே போதும். அந்தத் திருப்தியிலேயே என் வாழ்நாளை ஓட்டி விடுகிறேன்.

ராமேசுவரத்தில் என் தாயாரைப் பார்த்து, "உடம்பு ஏன் மாமி இப்படி ஆகிவிட்டது?" என்று கேட்டாயே. அவள் போய்ச் சேர்ந்துவிட்டாள். துக்கிரி நான் தான் தன்னந்தனியாக நிற்கிறேன்.

என்னைப் பற்றியே எழுதிக் கொண்டு போகிறேனே. உன் கணவர் எப்படி? தபாலாபீஸில் வேலை என்று சொன்னதாக ஞாபகம். நல்ல சம்பளம்தானே?

உனக்குக் குழந்தைகள் இல்லை என்றாய். வளையல் காப்புக் கல்யாணம் வந்தால் மறக்காமல் எழுது. வருகிறேன் கட்டாயம்.

நீ பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்பதே என்னுடைய மனப்பூர்வமான ஆசை. எல்லாவற்றையும் பற்றி விவரமாகப் பதில் எழுது.

உன் அன்புத் தோழி,
கமலா "

கடிதத்தைப் படித்ததும் "ம்" என்று அழுத்தி நீண்ட பெருமூச்சொன்று விட்டாள்


ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
தளிர்மேனிச் செல்வங்களுக்கு
மலர் மென்மையுள்ள பவுடர்
Johnson's
BABY
POWDER
Johnson & Johnson
இலவச புத்தகம்
ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது ஹிந்தி பிரதிகளில் எது வேண்டுமென்று குறிப்பிட்டு எழுதவும்.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
பி.ஓ. பாக்ஸ் 1376, டிபார்ட்மெண்ட 36D, பம்பாய்

ராகவன். ஏதோ ஒரு பெரிய ஆபத்தினின்று தப்பி விட்டது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. கடிதத்தைக் கமலாவுக்குத் திருப்பி அனுப்பி விட்டான்.

ராகவன் சென்னையில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம். திருவல்லிக்கேணியில் ஒரு வீட்டில் அறை ஒன்று எடுத்துக் கொண்டு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அந்த வீட்டின் கீழ்ப்பகுதி முழுவதையும் வாடகைக்கு எடுத்திருந்தார் ருக்மிணியின் தந்தை. அவர் சென்னையில் பாங்க் ஒன்றில் ஏஜண்டா யிருந்தார். ராகவனை அவருக்குப் பிடித்துப் போய் விட்டது. அதனால் ருக்மிணியிடம் அவன் சகஜமாகப் பேசிப் பழகுவதை அவர் தடுக்கவில்லை.

அப்போது ராகவனுக்கு ஒருநாள் உடனே வரும்படி ஊரிலிருந்து கடிதம் ஒன்று வந்தது. தாயாருக்கு உடம்பு ஏதாவது சரியில்லையோ என்று ஓட்டமாக ஓடினான். அவன் நினைத்த படியே தாயார் உடல் நலமில்லாமல் தானிருந்தாள். அவனைக் கண்டதும், "உன்னைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. அதனால்தான் எழுதினேன். வேறு உடம்புக்குப் பிரமாதமாக ஒன்றுமில்லை" என்றாள். இச்சமயம் அவனுக்குக் காப்பி கொண்டு வந்து வைத்தாள் ஒரு பெண்.

அவளைப் பார்த்த ராகவன் அவள் உள்ளே போனதும், "யாரம்மா இது? சமையலுக்காக அமர்த்திக் கொண்டிருக்கிறாயா?" என்று தன் தாயாரிடம் கேட்டான்.


உடனே அவன் தாயார், "இல்லை, அப்பா! நன்றாக வாழ்ந்த குடும்பம்தான். அப்பா பெரிய மில் வைத்து ஒருகாலத்தில் வசதியாக இருந்தவர். குடும்பம் நொடித்துப் போய்விட்டது. ஆற்றுக்கு அக்கரையில் உள்ள ஊரில்தான் குடி இருக்கிறார்கள். அவரும் இல்லை. இவள் தாயார் பலர் வீட்டில் காரியம் செய்து பிழைக்கிறாள். இவள் எனக்கு நிழல் மாதிரி. எனக்குச் செய்கிற ஒத்தாசை கொஞ்ச நஞ்சமல்ல. இரவு பகலாக என்னோடேயே இருக்கிறாள்" என்று வர்ணிக்க ஆரம்பித்து விட்டாள்.

அவள் அதோடு நிறுத்தி யிருந்தால் தேவலையே! "ராகவா....இந்தப் பெண்ணை நீ கல்யாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக இருப்பதைப் பார்த்துவிட்டால் போதும். அப்புறம் எனக்கு ஒரு ஆசையுமில்லை" என்று முடித்தாள்.

"அம்மா! கல்யாணத்துக்கு இப்போது என்ன அவசரம்?" என்றான் அவன்.

"ராகவா! அதெல்லாம் எனக்குத் தெரியாது. இந்த மாசத்திலேயே கல்யாணம் பண்ணிக்கொண்டு விடவேண்டும். நான் அதிக நாட்கள் இருக்க மாட்டேன். இதுவே என் கடைசி ஆசை. நிறைவேற்றி வையடா கண்ணு" என்று கண்ணீர் விட ஆரம்பித்து விட்டாள் அவன் தாயார்.

"வீணாக அலட்டிக்கொள்ளாதே, அம்மா!" என்று தேற்றிவிட்டுக் கொஞ்ச நேரம் யோசனையில் ஆழ்ந்தான் ராகவன். ஏதோ தோன்றவும் சமையலறைப் பக்கம் திரும்பிப் பார்த்தான். கமலா கதவோரமாக நின்று கொண்டிருந்தாள். அவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற ஆதுரம் அவள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ஏதோ முடிவுக்கு வந்தவனாய், "சரி அம்மா, உன் இஷ்டம்" என்று கூறிவிட்டான்.



திருத்துறைப்பூண்டி கனகா நியூஸ் ஏஜன்ஸியின் உரிமையாளர் திரு ஆர். பக்கிரிசாமி அவர்களுக்கும் திருமதி நீலாவதிக்கும் சென்ற மாதம் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

கல்யாணம் ஆயிற்று. பிள்ளையும் மருமகளும் குடித்தனம் செய்வதை ஆசை தீரக் காணும் பிராப்தம் இல்லை ராகவனின் தாயாருக்கு.

தாயார் இறந்து ஒரு மாதம் ஓடி விட்டது. அவன் சென்னைக்குப் புறப்பட்டான். சீக்கிரம் குடித்தனம் போட ஏற்பாடு பண்ணும்படி கமலாவின் தாயார் அவனிடம் சொன்னாள். "ஆகட்டும்" என்று அசுவாரஸ்யமாகப் பதில் சொல்லிவிட்டுக் கமலாவிடம் சொல்லிக் கொண்டதாகப் பெயர் கூடப் பண்ணாமல் புறப்பட்டான். அது கமலாவுக்குத் தாபமாக இருந்தது.

வெகு நாட்கள் அவன் கடிதமே போடவில்லை. கமலா கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதவே, திடீர் என்று ஒருநாள், "உன்னை நான் விரும்பிக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. என் அம்மாவின் ஆசையைப் பூர்த்தி செய்யவே மணம் செய்து கொண்டேன். அதனால் எனக்கு விருப்பம் உண்டாகும் போது நானாக அழைத்துக் கொள்ளுவேன். வீணாகக் கடிதம் போட்டால் என் கோபம் தான் அதிகமாகும்" என்று தீர்மானமாக எழுதி,விட்டான். இதைப் பார்த்ததும் கமலாவுக்கு அழுகை அழுகையாக வந்தது. அவள் தாயாரோ, "இன்னும் பொறுத்துப் பார்ப்போம்" என்றாள்.

காலம் ஓடியது!

ருக்மிணிக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி அவளைக் கல்யாணம் செய்து கொண்டான் ராகவன். கூட்டோடு கூடாக 'டெட் லெட்டர் ஆபீஸில்' உத்தியோகம் கிடைக்கவே கோடம்பாக்கத்தில் தனிக்குடித்தனமும் ஆரம்பித்தான்.

ஆயினும் மூன்று நான்கு வருஷங்களாகியும் அவர்களுக்குக் குழந்தையே பிறக்கவில்லை.

இச்சமயம் ருக்மிணியின் அப்பா ராமேசுவரம் புறப்பட்டார். ருக்மிணியையும் ராகவனையும் கூட அழைத்துப் போவதாக இருந்தார். கடைசி நிமிஷத்தில் ராகவனுக்கு லீவு கிடைக்காமல் போகவே ருக்மிணி மட்டும் போனாள்.

வெளியாக இருந்த ரகசியம் தெய்வ பலத்தால் மீண்டும் வெளிவராமல் காப்பாற்றப்பட்டு விட்டது; இனி அது என்றும் வெளிக் கிளம்பவே கிளம்பாது என்ற திருப்தியுடன் உல்லாச வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான் ராகவன். இச்சமயம் டில்லியில் நடக்கும் தபால் தந்தி இலாகாவின் நூற்றாண்டு விழாப் பொருட்காட்சியில் கலந்து கொள்ளும்படி அவனுக்கு உத்தரவு வரவே அவன் டில்லிக்குப் புறப்பட்டான்.

அவன் டில்லி சென்று ஒரு வாரம் தான் ஆகி இருக்கும். ருக்மிணிக்குத் திடீரென்று நிமோனியா ஜுரம் கண்டு படுத்த படுக்கையாகி விட்டதாகத் தந்தி வந்தது. பறந்து விழுந்து கொண்டு வந்து சேர்ந்தான்.

அவன் கண்ட காட்சி அவனுக்குக் கிலியை உண்டு பண்ணியது.

டாக்டர் வந்து பார்த்தார். இன்னும் ஒரு வாரத்தில் குணமாகிவிடும் என்றார். ராகவனுக்கு மனம் ஓரளவு சமாதான மடைந்தாலும், ஒன்றும் தோன்றாமல் அயர்ந்து உட்கார்ந்து விட்டான்.

ருக்மிணி கண்களில் நீர் மல்க மெல்லிய குரலில், ''எதற்காகக் கவலைப் படுகிறீர்கள்? இப்படி வந்து உட்காருங்கள். உங்களிடம் கொஞ்சம் பேசவேண்டும்'' என்றாள்.

அவன் அவளருகே வந்து உட்கார்ந்தான். உடனே ருக்மிணி ''நான் கேட்கிறேனே என்று கோபப்படக் கூடாது நீங்கள். என் சிநேகிதி கமலாவை எனக்கு முன்பு கல்யாணம் செய்து கொண்டுவிட்டுப் பின்பு எனக்காக அவளைத் தவிக்கவிட்டு விட்டீர்களே. இது நியாயமா?'' என்றாள் கோபத்துடன்.

இதைக் கேட்டதும் அவனுக்குத் தலையில் இடியே விழுந்து விட்டதுபோல் இருந்தது.

அவள் தொடர்ந்தாள்: ''நான் ராமேசுவரத்தில் அவளைச் சந்தித்த பிறகு ஒரு வாரம் முன்புதான் அவளுக்கு எழுத ஒழிந்தது. அப்போது நீங்கள் டில்லியில் இருந்தீர்கள். அவள் தந்திருந்த விலாசத்தைப் பெட்டியிலிருந்து தேடி எடுத்து ஏன் வெகு நாட்களாகக் கடிதமே எழுதவில்லை என்று கோபித்துக் கொண்டேன். பிறகு உடனே ஒரு நடை வரும்படியும் அப்படி வருவதானால் வரும் முன்பு கடிதம் போடும்படியும் அவளுக்கு எழுதினேன். அவள் நேற்று இங்கு வருவதாக நேற்று முன்தினம் ஒரு கடிதம் போட்டிருக்கிறாள். ஆனால் அது நேற்று வராமல் இன்றுதான் வந்திருக்கிறது. நேற்று இங்கே வந்தவள் குறித்த விலாசத்திலிருந்து நீங்கள் வெளியே வருவதைக் கண்டதும் விவரம் புரிந்துகொண்டவளாக வந்த வழியே ரிக்ஷாவைத் திருப்பச் சொல்லிப் போய் விட்டாள். அது நீங்கள் டாக்டரை அழைக்கப் போன சமயம் போலிருக்கிறது. அப்போது உங்களுக்கு இருந்த கலவர மனோநிலையில் நீங்கள் ரிக்ஷாவில் உட்கார்ந்திருந்த அவளைக் கவனிக்க வில்லை. அப்படியே ஸ்டேஷன் போனதும் ஒரு கடிதம் எழுதிப் போட்டு விட்டாள். இதோ பாருங்கள், இந்தக் கடிதங்களை!'' என்று கூறி அவற்றை நீட்டினாள்.

ராகவன் நிலை மிகவும் தர்மசங்கடமாயிருந்தது. அவற்றை வாங்கிப் படித்தான்.

''....என் கழுத்தில் தாலி கட்டிய அவரே தான் உன் கணவர் என்று தெரிந்தபின் எனக்கு அங்கே வர மனம் இல்லை. காரணம் நான் ஏன் என் சிநேகிதியான உன் வாழ்வில் சலசலப்பை உண்டுபண்ண வேண்டும்? என் வரை விவரம் தெரிந்த நாள் முதல் கஷ்டமே பட்டுப் பழக்கப்பட்டு விட்டேன். இது போன்ற எத்தனை கஷ்டம் வந்தாலும் தாங்கத் துணிவு உண்டு எனக்கு. உன்னை எதற்காகக் கஷ்டத்தில் சிக்க வைக்க வேண்டும் நான்? அவர் கட்டிய மாங்கல்யம் என் மார்பில் ஒளி விடுகிறது அதுவே போதும். இப்படியே நித்ய சுமங்கலியாக இவ்வுலகை விட்டுப் போய்விட்டால் போதும் எனக்கு. ருக்கு...எனக்கு உன்னிடம் எள்ளளவும்பொறாமையோ,கோபமோ கிடையவே கிடையாது. இது சத்தியம்...''

இவ் வரிகளைப் படித்ததும் குற்ற உணர்ச்சி அவன் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது. ''மன்னித்து விடு ருக்கு, மன்னித்துவிடு. நான் செய்த இத்தனை அக்கிரமங்களுக்கும் என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டும் சொல், செய்கிறேன்'' என்று கூவி அழுதான்.

அவளாலும் வந்த அழுகையை அடக்க முடியவில்லை. மெல்லச் சமாளித்துக்கொண்டு, ''வீணாக வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? நடந்தது நடந்து விட்டது. எனக்கு உடம்பு குணமானதும் கமலாவையும்கூட அழைத்துக் கொண்டுவந்து வைத்துக் கொள்ளுங்கள். நான் ஜுரத்தில் பிதற்றுகிறேனோ என்று நினைக்க வேண்டாம். நல்ல நினைவுடன்தான் சொல்லுகிறேன். அவள் மூலமாகவாவது வீட்டில் மழலைச் சொல்லைக் கேட்போம்'' என்றாள் அவள் நாத் தழதழக்க.

''ம்'' என்றான் ராகவன் தலையைக் குனிந்தபடி. இத்தனை பெரிய சமாசாரம் இவ்வளவு எளிதில் பைசலாகி விடும் என்ற நம்பிக்கையே இல்லை அவனுக்கு. அதேபோலத்தான் அவள் அன்றிரவு இறந்து விடுவாள் என்றும் அவன் எதிர்பார்க்க வில்லை!

இரண்டு வாரம் ஆயிற்று. பண்பட்ட மனம் அவனை உந்தித் தள்ளக் கமலாவிடம் போய் மன்னிப்புக் கேட்டு அவளை அழைத்து வரப்போவது எனத் தீர்மானித்தான். இதற்காக ஒரு புதிய வெள்ளிக் குங்குமச்சிமிழ் ஒன்று வாங்கி அது நிறையக் குங்குமம் வாங்கி அடைத்துக் கொண்டு புறப்பட்டான்.

ஊர் போனவுடன் அத்தனை பெரிய அதிர்ச்சி அவனுக்காகக் காத்திருக்கும் என்று அவன் கனவில்கூட நினைத்திருக்க மாட்டான். வழக்கம்போல் கோவிலுக்குப் போய் விட்டு வரும்போது கமலா கார் விபத்துக்குள்ளாகி இறந்து விட்டாள் என்ற செய்தியைக் கேட்டதும் உலகமே இருள் சூழ்ந்துவிட்டது போலிருந்தது அவனுக்கு. அந்த நடுக்கத்திலே கை தவறி விழுந்த குங்குமச் சிமிழினின்றும் சிதறிய குங்குமம் அந்த இருளிலும் செக்கச் செவேல் என்று ஒளி வீசியவாறு அவனைப் பார்த்து நகைப்பது போலிருந்தது!



காற்று ஜிலு ஜிலுவென்று வீசுகிறது. யாரோ இரண்டு பேர்கள் அதோ பேசிக் கொண்டு வருகிறார்கள்.

'' அந்தப் பூவரச மரத்தடியில் உட்கார்ந்திருக்கும் பெண்ணைப் பார்த்தீர்களா? எத்தனை அழகாக இருக்கிறாள்? ஆனால் பாவம்! பைத்தியம் போலிருக்கிறது.''

'' பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்தச் சாயந்திர நேரத்தில் இப்படித் தனியாக உட்கார்ந்து நோட்டு ஒன்றை வைத்துக் கிறுக்கிக் கொண்டிருக்குமா? ஆனாலும் நீங்கள் சொல்லுகிறது போல இவளது அழகு ரொம்பப் பிரமாதமாகத்தான் இருக்கிறது. யாரோ பாவம்!''

அவர்கள் இருவரும் என்னைக் கடந்து சென்றுவிட்டனர்.

ஐயா! உங்களை எப்படி அழைப்பது என்று தெரியவில்லை. என் பெயர் பார்வதியானதால் தங்கள் பெயர் பரமசிவமாகத்தான் இருக்க வேண்டும் என்று மனத்தினுள்ளே ஏதோ ஒன்று சொல்லுகிறது. அப்படியே இல்லாவிட்டாலும் நான் உங்களைப் பரமசிவம் என்று அழைப்பதில் ஆட்சேபணை ஒன்றும் தங்களுக்கு இல்லையே?

நீங்கள் எனக்கு எழுதியிருந்ததை நேற்றுக் காலையில்தான் பார்த்தேன். உடனே ஏதோ ஒரு

உங்களுக்கு

★★★★★ கல்கி 24–3–57 இதழில் 'உனக்கு மட்டும்' என்னும் அருமையான சிறு கதை பிரசுரமாகியிருந்தது. அதில் வரும் கதாநாயகன், 'இன்னும் வேறு ஏதாவது திருடிக் கொண்டு போயிருந்தால் அதைத் திருப்பி அனுப்பி விடு' என்று தன் உள்ளங் கவர்ந்தவளைக் கேட்டிருந்தான். 'உங்களுக்கு மட்டும்' என்னும் இர்தக் கதையில் கதாநாயகி தன்னையே அவனுக்கு உடைமையாக்கும் அழகைப் பாருங்கள். — ஆசிரியர்

மட்டும்

எஸ். சீநிவாசன்

சக்தி என்னைத் திருச்சியிலிருந்து பழனிக்கு இழுத்துக் கொண்டு வந்து விட்டது; நல்ல வேளை, மலை மேல் கடந்த பதினைந்து தினங்களில் தற்கொலை எதுவும் நிகழவில்லை என்று விசாரித்து அறிந்ததும் எனக்கு எவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டது தெரியுமா?

பரமசிவம்! நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள். குகக் கடவுள் மேல் ஆணையாகச் சொல்கிறேன். நான் தங்களை மோசம் செய்ய வில்லை. மோசம் செய்ய வேண்டுமென்று நெஞ்சில் கடுகத்தனை எண்ணமும் கொள்ளவில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் செய்த சதிதான் நீங்கள் சிறைக்குப் போகக் காரணமாய் அமைந்து விட்டது.

நீங்கள் 'எனக்கு மட்டும்' எழுதிய மாதிரி நானும் 'உங்களிடம் மட்டுமே' சொல்ல ஆயிரமாயிரம் விஷயங்கள் வைத்திருக்கிறேன், பரமசிவம். எப்படிச் சொல்வதென்றுதான் தெரியவில்லை. படிப்போ கொஞ்சம். ஏதோ முடிந்த வரையில் சொல்ல வேண்டியவைகளையெல்லாம் எழுதுகிறேன்.

அழகுக்காகத் தவம்கிடந்தவர்களையெல்லாம் விட்டு விட்டு ஆண்டவன் ஏன் இந்த அபலைப் பெண்ணிடத்தில் அதை அளவு மீறிக் கொடுத்தான் என்பது தெரியவில்லை. பத்து வயதுப் பெண்ணாக, பாவாடை சட்டையுடன் தெருவில் நடந்து போகும் போதே ஆண், பெண் அனைவரும் என்னைக் கண்டு கொஞ்சம் பிரமித்து நின்று விட்டு அப்பால் நகர்ந்தது இப்போதும் நினைவில் இருக்கிறது.

பெற்றவர்களை நான் கண்ணால் கண்டதில்லை. வளர்ந்தது மாமன் மாமியிடம். தாராபுரம் பள்ளியில்தான் ஏதோ பெயருக்கு ஐந்தாவது வரையில் படித்தேன். மாமி என்னை ஒன்றும் அவ்வளவு நன்றாக நடத்தியதாகச் சொல்ல முடியாது. எவ்வளவோ கொடுமைகள். மாமா காட்டிய அன்புதான் அவற்றைப் பொறுத்துக் கொள்ளச் செய்தது.

பருவத்தின் தலை வாசலில் அழகுப் பதுமையாக நின்ற எனக்கு என்னைக் குறித்தே எத்தனை பெருமை தெரியுமா? 'நம் அழகுக்காகவே ஒருவர் வந்து கைப்பிடித்து இருண்ட வாழ்வில் ஒளியேற்றி வைக்கப் போகிறார். நம் துயரத்துக்கும் ஒரு முடிவு வரப் போகிறது' என்ற 'ஒரு நம்பிக்கையை நெஞ்சில் வளர்த்து ஆவலே வடிவாய்க் காத்திருந்தேன்.


அப்படிக் கைப் பிடிக்க ஒருவர் முன் வராமற் போகவில்லை. ஆனால் அவர்.....?

மாமிக்கு ஏதோ வகையில் உறவினராம். மலையாள ராஜ்யத்தில் பாலக்காட்டில் வியாபாரம் பண்ணுகிறாராம். தாராபுரத்துக்கு ஏதோ வேலையாக வந்தவர் எங்கள் வீட்டுக்கு வந்து இறங்கினார். அவர் தேவைகளைக் கவனித்துப் பணிவிடை புரிய மாமி என்னை நியமித்தாள்.

கிட்டத்தட்ட முப்பத்தைந்து வயதிருக்கும் அவருக்கு. அளவுக்கு மீறின பருமன் காரணமாக விகாரமான தோற்றம். கடுமை மிதக்கும் விழிகள். பொதுவில், அச்சமூட்டும் முகத் தோற்றம்.

இந்த வர்ணனைகள் எதற்கு என்று கேட்கிறீர்களா? இரண்டு தாரம் கட்டி அவர்களுக்குக் கொள்ளி வைத்த பின் மூன்றாவதாக மாலையிட ஒரு மங்கையைத் தேடியவர் கண்களில் இந்த அபாக்கியவதி பட்டு விட்டேன்.

மாமிக்குப் 'பாரம் ஒழிகிறதே' என்று பூரண சம்மதம். புழுவாய்த் துடித்தேன் நான். என்ன என்னவோ இனிய கற்பனைகளில் நெஞ்சை நெகிழ விட்டுச் சொக்கிக் கிடக்கும் பருவம். என் அழகையும்



இளமையையும் இப்படிப்பட்ட ஒருவரிடமா சமர்ப்பிக்க வேண்டும்?

என் முடிவு தெரிந்தவுடன் மாமி சீறினாள். 'இவரை விடவா உயர்ந்தவன் ஒருவன் உன் கழுத்தில் மாலையிட வருவான்?' என்று மிரட்டிப் பார்த்தாள்.

நான் மசியவில்லை. எல்லாவற்றுக்கும் மௌனத்தைத் தான் கடைப்பிடித்தேன். மாமா என்னவோ இதில் தலையிட்டு ஒன்றுமே பேசவில்லை. அது மாமிக்கு ஒரு பலஹீனம்.

"இரு. இரு. இன்னும் இரண்டே மாதத்தில் அவர் உனக்குத் தாலி கட்டும்படி செய்கிறேன். உன்னை வழிக்குக் கொண்டு வரும் விதம் எனக்குத் தெரியும்" என்ற உறுமலோடு அப்போதைக்குப் பேசாமலிருந்தாள்.

அவர் ஊர் திரும்பி விட்டார். அதற்குப் பின்னர் பத்து நாட்களுக்கு ஒரு முறை விஜயம் செய்ய ஆரம்பித்தார். ஓரிரு தடவைகள் என்னைத் தனிமையில் கண்டு தன்னை மணந்தால் எனக்கு இன்ன இன்ன சௌகரியங்கள் கிடைக்கும் என்று நப்பாசை காட்டி மனத்தைக் கவர முயன்றார்.

யாரும் எதிர்பாராமல் மாமி மூன்று நாட்கள் காய்ச்சலில் இந்த மண்ணுலகிலிருந்து விடைபெற்று விட்டாள். அப்பா! அப்பொழுது தான் மனத்தில் எப்படிப்பட்ட ஒரு நிம்மதி பிறந்தது!

அதை அனுபவிக்க விடாமல் ஆண்டவன் பெரிய அதிர்ச்சி ஒன்றை அளித்துவிட்டான்.

மாலை மூன்று மணியிருக்கும். எங்கோ வெளியே போய் விட்டு வந்த மாமா உள்ளே நுழைந்து எதிரில் அமர்ந்தார்.

"பார்வதி! அந்தச் சபாபதி கடிதம் போட்டிருக்கிறான். நாளைக்கு வருகிறானாம். ஏராளமான நகைகள், புடவைகள் எல்லாம் உனக்காக வாங்கி வருகிறானாம். பைத்தியக்காரன்! ஒரு பெண்ணின் மனத்தைக் கவர வழி தெரியாதவன்" என்று கூறிவிட்டு மெல்லச் சிரித்தபடியே என்னை உற்றுப் பார்த்தார்.

மாமாதான். இருந்தும் நெஞ்சு படபடவென்று ஏன் இப்படி அடித்துக்கொள்கிறது?

"பயப்படாதே பார்வதி! உன்னை அவன் கையில் ஒப்படைக்க மாட்டேன். நீ வாழ்க்கைப் படவேண்டிய இடமே வேறு."

தொடர்ந்து அர்த்தம் பொதிந்த ஒரு சிரிப்பு.

"ஊரிலேயும் நாலு பேரிடம் கேட்டேன். யாரும் ஆட்சேபிக்கவில்லை. மருமான் முறை தானே, செய்துகொள்வதில் தவறில்லை என்கிறார்கள். தவிர அவள் தான் மலடியாக இருந்து மண்ணோடு போனாள். வம்சத்தை விளங்க வைக்கவாவது நான் கல்யாணம் மறுபடியும் செய்துதான் ஆகவேண்டும் என்று வேறு வற்புறுத்துகிறார்கள். ஆகவே..."

பித்துப் பிடித்தவள்போல் கிணற்றடியை நோக்கி ஓடினேன். தொடர்ந்து ஓடி வந்தவர் என்னைத் தடுத்து நிறுத்தி உள்ளே கொண்டு வந்து தள்ளினார்.

"அசட்டுத்தனமாக நடந்து கொள்ளாதே. இரவு சாப்பாட்டு நேரத்தில் எனக்கு முடிவு சொல். பாதகமான முடிவாயிருந்தால் சபாபதிக்கு வாழ்க்கைப்பட நேர்ந்துவிடும். எது உசிதம் என்று கொஞ்சம் யோசனை செய்து பார்" என்று கூறிவிட்டுப் பின்புறக் கதவைப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டு வெளியே சென்று விட்டார்.

ஆண்டவன் படத்துக்கு முன் போய் விழுந்தவள் தான். எழுந்திருந்தபோது நன்றாக இருட்டி விட்டிருந்தது. தெருவோடு போனவர்கள் யாரோ பேசிக் கொண்டு போனது காதில் விழுந்தது.

'எப்படியோ இருட்டுத்தனமாய்ப் பழனிக்கு ஓடி மலைமேல் ஏறிக் கீழே குதித்துத் தற்கொலை செய்து கொண்டிருக்கிறான். உடல் முழுவதும் நொறுங்கி அடையாளம் கண்டு பிடிப்பதே ரொம்பச் சிரமமாகி விட்டது...'


என் உடல் புல்லரித்தது. தற்கொலை செய்து கொள்ள எவ்வளவு வசதியான இடம் பழனி மலை? அங்கு போய்க் கடைசியாகச் செய்த தவறுகளுக்கெல்லாம் ஆண்டவனை ஒருமுறை மனமாரப் பிரார்த்தித்து விட்டு உயிரை விட்டு விட்டால் என்ன?

உடலில் ஒரு புத்துணர்ச்சி பிறந்தது. பெட்டிகளைத் துழாவியதில் ஒரு ரூபாய் கிடைத்தது. இருட்டில் மறைந்து மறைந்து நடந்து, பழனி பஸ்ஸைப் பிடித்து ஏறி அமர்ந்து விட்டேன்.

பழனியை நெருங்க நெருங்க, கலக்கத்துக்குப் பதில் நெஞ்சில் இனம் புரியாத ஒரு இன்பம் சுரந்து உடலைச் சிலிர்க்க வைத்தது. சாகப் போகிறவளிடத்தில் ஏன் இப்படி மகிழ்ச்சி பொங்குகிறது? அதற்குக் காரணம் பின்னால் தெரிந்தது.

மலைமேல் ஏறி, தண்டாயுதபாணியை வணங்கிவிட்டு உயிரை விடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது தான் தாங்கள் ஓடி வந்து தடுத்து நிறுத்தினீர்கள்.

ஐயா! உங்களைப்போல் எனக்கு அழகை வர்ணிக்கத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன். உங்களைப் பார்த்தவுடனேயே 'இவர்தான் நம்மை ஆட்கொள்ள வந்துள்ள



ரெங்கோன் நேஷனல் ஸ்டோர்ஸ் உரிமையாளரும் கல்வி ஏஜண்டுமான திரு ஆர். எஸ். மணி அவர்களின் மூத்த குமாரி திருமதி சாந்தாவுக்கும் திருவான்மியூர் திரு டி. ஆர். ராதாகிருஷ்ணனுக்கும் 17-3-57ல் திருமணம் விமரிசையாகச் சென்னையில் நடந்தேறியது. அதே முகூர்த்தத்தில் அவரது குமாரன் திரு எஸ். ஆர். சந்திரனுக்கு உபநயனமும் நடந்தது.

பரமசிவம்' என்று நெஞ்சில் பளீரென்று மின்னல்போல் ஒரு எண்ணம் உதித்தது.

கோவில் மணி 'டணர் டணர்' என்று ஒலிக்க, வானத் தாரகை யொன்று ஒளியைக் கக்கிக்கொண்டு இடம் விட்டு இடம் பாய, உங்கள் முகத்தையே வெறித்துப் பார்த்தபடி சில விநாடிகள் ஸ்தம்பித்து நான் நின்றேனே, உங்களுக்கு ஞாபகம் வரவில்லை?

சத்திரத்து அறையில் படுத்திருக்கும்போது என்ன என்னவோ மனோஹரமான கனவுகள். திடீரென்று அறைக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன். கதவைத் தாளிட மறந்தது அப்போதுதான் நினைவுக்கு வந்தது. பயங்கரச் சிரிப்புடன் சபாபதி எதிரில் வந்து நின்றார்!

"பெரிய சாகசக்காரியாக இருக்கிறாயே! வீட்டைவிட்டு ஓடிவந்து விட்டாயா? வெளியே படுத்திருக்கிறானே, அவன் யார்? ஆசை வார்த்தை சொல்லி உன்னை ஊரிலிருந்து இழுத்து வந்து விட்டானா? சொல்!" என்று சரமாரியாகச் சீறினார். மலையாளம் கலந்த தமிழில் இந்த அர்த்தம் தொனிக்கத்தான் என்னை மிரட்டினார்.

எனக்குப் பதில் பேசவே நா எழவில்லை. திருடப் போனவன் தலையாரி வீட்டிலேயே நுழைந்த கதையாக....

"யார் இவன் சொல்ல மாட்டாய்?" ஒரு பயங்கர உறுமல்.

"என் கணவர்!" என்றேன், எப்படியோ துணிச்சலை யெல்லாம் திரட்டியபடி.

ஒரு பயங்கர ஒலி அவரிடமிருந்து எழுந்தது.

"பைத்தியக்காரப் பெண்ணே, உனக்குத் தாலி கட்டப் போகிறவன் எதிரே நிற்கும் போது யாரைக் கணவன் என்கிறாய்? போன வாரம் வரையில் இல்லாத கணவன் இப்போது எங்கிருந்து திடீரென்று முளைத்தான்? அவனைக் காலையில் கவனித்துக் கொள்கிறேன். மாலையில் அறையைப் பூட்டிக்கொண்டு தனியாகப் போனவன் இரவில் உன்னோடு வந்திருக்கிறான். இதுவரையில் எங்கிருந்தாயோ?" என்றவர் ஏதோ நினைத்துக்கொண்டு, "இரு. உனக்காக வாங்கி வைத்திருக்கும் நகைகளைக் கொண்டு வந்து காட்டுகிறேன்!" என்று சொல்லி விட்டு வெளியே போனார்.

உடனே ஒரு காரியம் செய்தேன். உங்கள் சட்டைப் பையிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு சத்தம் செய்யாமல் வெளியே வந்து கதவைத் திறந்து ரஸ்தாவில் இறங்கிவிட்டேன். பைத்தியக்காரி, உங்களையும் எழுப்பி, கூடவே அழைத்துக்கொண்டு போக வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லையே!

ரயில் பாதை ஓரமாகவே இரவெல்லாம் நடை. எங்கே போகிறோம்? எனக்கே தெரியவில்லை. நடந்தேன். நடந்தேன். நடந்து கொண்டே யிருந்தேன்.

கிராமச் சாவடியொன்றில் ஒருவர் பத்திரிகை படிக்க நாலுபேர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நீங்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைபட்டிருப்பதை அவர் வாசித்த செய்தி மூலம் அறிந்தவள் எப்படித் துடித்தேன் தெரியுமா?

என்னை அடைய முடியாத ஏமாற்றத்துக்குச் சபாபதி தன்றாகத்தான் வஞ்சம் தீர்த்துக் கொண்டிருக்கிறார்!

கோர்ட்டில் ஏறி உண்மையைக் கூற உணர்வு உந்தியது. பிச்சைக்காரியிலும் கேடு கெட்ட நிலை. எந்தக் கோர்ட்டில் விசாரணையோ நான் என்ன கண்டேன்?

மதுரையில் இறுதி விசாரணை நடக்கும் என்று ஒரு மாதிரி தெரிந்து கொண்டேன். நான் மதுரை போய்ச் சேர்ந்த அன்றுதான் விசாரணை யெல்லாம் முடிந்து தீர்ப்புக் கூறினார்கள்! விதியின் சதி என்று சொல்லாமல் எப்படிச் சொல்வது?

ஐயா! தங்களுக்கு ஆறு வருஷத் தண்டனை என்று கோர்ட்டில் கூறியவுடன் பிச்சைக்காரி ஒருத்தி கூட்டத்தில் மயங்கி விழுந்து விட்டாள், பெரும் பரபரப்பு உண்டாகி விட்டது என்ற செய்தியை யாரும் அப்போது தங்கள் காதில் போடவில்லையா?

** ** **

நன்றாக இருட்டி விட்டது. மின்விளக்குகளெல்லாம் எரிய ஆரம்பித்து விட்டன. ஏதாவது ஒரு விளக்கடியில் அமர்ந்து மீதியை எழுதுகிறேன்.

இந்த ஆறு வருஷங்கள்-, எனக்குக் கணக்கு சரியாய்த் தெரியவில்லை-, நான் பட்ட பாடுகளை யெல்லாம் எழுதி உங்கள் மனத்தை நோக வைக்க எனக்கு விருப்பமில்லை.

ஒன்று தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் ஆறரை ரூபாயில் ஒரு சல்லிகூட நான் எனக்காகச் செலவழிக்கவில்லை.

தண்டனை முடிந்து நீங்கள் வரும்போது உங்களிடம் அதைச் சேர்ப்பிக்க வேண்டும் என்றுதான் இருந்தேன். ஏதோ மனம் வெறுத்து எனக்கு நீங்கள் கடிதம் எழுதினாலும் இன்னும் உயிரோடுதான் இருப்பீர்கள் என்று நெஞ்சில் ஏதோ சொல்கிறது. நம் எதிர்கால வாழ்வு இன்ப மயமானதாக இருக்குமாறு அருள வேண்டுமென்று அவ்வளவு பணத்துக்கும் கற்பூரங்களை வாங்கி இன்று மாலை மலையேறும்போது படிக்கொன்றாகக் கொளுத்தியபடி வடிவேலனை வேண்டினேன்.

இரண்டு நாட்கள் சாப்பிடாதது ஒரே அசதியாக இருக்கிறது.

இப்பொழுது சொல்லுங்கள். நான் வஞ்சகி இல்லையே, மோசக்காரி இல்லையே, ஆசை காட்டி மோசம் செய்தவள் இல்லையே!

பரமசிவம்! நான் சொல்வதை நீங்கள் நம்பினால் உடனே பழனி மலையேறி இந்தப் பூவரச மரத்துக்கு வாருங்கள். அதற்குள் எத்தனை யுகம் கடந்து போனாலும் உங்களுக்காக நான் காத்திருக்கிறேன்.

உங்களிடமிருந்து ஆறரை மணி நேரத்தையும், ஆறரை ரூபாயையும் தவிர இன்னொன்றையும் 'திருடி' விட்டதாகக் கூறி அதைத் திருப்பித் தரச் சொல்கிறீர்கள்.

நீங்கள் என் உள்ளத்தைத் திருடிக்கொண்டு போய் விட்டீர்களே அதை நான் அடைய விரும்புவதும் இயற்கைதானே?

உடனே இங்கு வாருங்கள். பரஸ்பரம் நாம் அபகரித்தவற்றை உரிமையாளரிடம் ஒப்படைப்போம்.

'கட்டாயம் வாருங்கள்; உங்கள் உடைமையைத் திரும்பப் பெறுவதற்காகவாவது ஒரு நடை வாருங்கள்!'


பளபளப்போடு
நறுமணமோங்கும் கேசத்திற்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட்
ஹேர் ஆயில்
(கேசத்திற்கு பரிமள தேங்காயெண்ணெய்)
ரோஜா அல்லது மல்லிகை மணமூட்டியது
இலவசம்...
பெரிய சீசா ஒவ்வொன்றுடனும் நல்லதொரு
'ப்ரைட்' ரக 'அலிடேட்' சீப்பு இலவசம்
PERFUMED
COCONUT
HAIR OIL
ECH. 2-50 TM



காட்சி—1

[பங்கய நாட்டுப் பார்த்திபனின் மாளிகை. மகாராணி தன் அறையில் அமர்ந்து வீணை வாசித்துக் கொண்டிருக்கிறாள். அவள் அருகே அவளது அருமைத் தோழி அங்கயற்கண்ணி அமர்ந்திருக்கிறாள்.]

மகாராணி (வீணை வாசிப்பதை நிறுத்தி விட்டு) : என் அருமைத் தோழி! சங்கீத விழாவுக்கான ஏற்பாடுகளெல்லாம் செவ்வனே நடந்து கொண்டிருக்கின்றன அல்லவா?

தோழி : நடந்து கொண்டிருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்தால் சங்கீத விழா மிகச் சிறந்த முறையில் அமையும் என்று தோன்றுகிறது, மகாராணி!

மகாராணி : வந்திருக்கும், வரப் போகும் சங்கீதக் கலைஞர்களுக்குத் தங்குவதற்கான வசதிகள் எப்படிச் செய்யப்பட்டிருக்கின்றன?

தோழி : மிக நேர்த்தியான முறையில் செய்யப்பட்டிருக்கின்றன. யாரும் எந்த விதமான குறையும் சொல்ல மாட்டார்கள்; சொல்ல நினைத்தாலும் சொல்ல முடியாது.

மகாராணி : அதுதான் சரி. இவ்வாண்டு விழா என்றும் இல்லாத் திருவிழாவாகச் சிறக்க வேண்டும் என்பதே என் ஆசை.

தோழி : ஆண்டவன் அருளால் தங்கள் விருப்பம் அவசியம் ஈடேறும், மகாராணி!

மகாராணி : ரொம்ப சரி. மன்னரைப் போய் ஒரு முறை பார்த்து வரலாம் என்று எண்ணுகிறேன். கலைஞர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பரிசைப் பற்றி அவரிடமும் ஒரு தடவை கலந்து கொள்வதுதானே நல்லது!

தோழி : ஆமாம், மகாராணி!

[மகாராணி எழுந்திருக்கவும், பணிப் பெண் ஒருத்தி பிரவேசிக்கவும் சரியாயிருக்கிறது]

பணிப்பெண் : மகாராணி! மன்னர் கோபாக்கிருஹத்தில் இருக்கிறார்!

தோழி : இதென்ன கூத்து?

மகாராணி : கோபாக்கிருஹத்திலா? நீ சொல்வது வேடிக்கையா யிருக்கிறதே!

தோழி : அந்தக் காலத்தில் பெண் ஒருத்தி கோபாக்கிருஹத்தில் இருந்ததாகத் தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இதுவரையில் எந்த ஆண் மகனும் இப்படி இருந்ததாகக் கேள்விப் பட்டதில்லையே! கதை, கட்டுரைகளிலும்கூடப் படித்ததில்லையே! கலி முற்றி விட்டது என்பதில் சந்தேகமே இல்லை.

மகாராணி (பணிப்பெண்ணைப் பார்த்து) : அவருக்கு என்ன கோபமாம்?

பணிப்பெண் : தெரியாது!

தோழி : அவள் என்ன கண்டாள்? நாளைக்கு நல்லபடியாகச் சங்கீத விழா நடந்தாக வேண்டுமே!

மகாராணி : உண்மையான வார்த்தை! ராமரது பட்டாபிஷேகம் நின்றாற் போல் நமது சங்கீத விழா நின்று விடாமல் இருக்க வேண்டுமேயென்று கவலையாக இருக்கிறது.

தோழி : அந்தக் கவலைதான் எனக்கும். அப்படி நின்று விட்டால் மன்னரைக் காட்டிலும் உங்களுக்குத்தான் அவமானம்.

மகாராணி : ஆமாம், ஆமாம்! அவர் கோபத்தைப் போக்க ஏதாவது வழி செய்தாக வேண்டும். இதோ இப்பொழுதே நானே நேரில் போய்ப் பார்த்து வருகிறேன்.

காட்சி—2

[மன்னர் கிரீடம் ஒரு மூலையில் கிடக்க, ஆடை அலங்காரங்கள் நலிய, கட்டிலில் பெரு மூச்சு விட்டவாறு புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருக்கிறார். மகாராணி 'ஏனோ ராஜா இந்தக் கோபம்?' என்று பாடிக்கொண்டே உள்ளே நுழைகிறாள்.]

மகாராணி (மன்னரது தலைமாட்டில் போய் நின்று கொண்டு) : மன்னர் மன்னவா! அடியாள் செய்த தவறு என்ன? இந்தக் கோபாக் கிருஹவாசம் ஏன்? வாய் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டீர்களா?

மன்னர் : (முடியாது என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைக்கிறார்.)

மகாராணி: பச்சைக் குழந்தையைப் போல் இப்படிப் பேசாமல் தலையசைத்தால் என்ன அர்த்தம்? இத்தனை பெரும் நாட்டுக்குக் கொற்றவனாக இருந்தும் உங்கள் குழந்தைக் குறும்பு போகவில்லையே!

மன்னர்: வந்து....வந்து...

மகாராணி: சொல்லுங்கள்! நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா? அல்லது இந்த நாட்டுப் பிரஜைகள்தான் யாராவது தங்கள் விஷயத்தில் தவறு செய்து விட்டார்களா? யார் என்ன தவறு செய்திருந்தாலும் அவர்கள் அதற்குத் தகுந்த தண்டனையை அடைந்தே தீருவார்கள். சொல்லுங்கள், இப்பொழுதே கவனிக்கிறேன்.

மன்னர் (குத்தலாக): இதுவே போதுமே எனக்கு! இதைக் காட்டிலும் வேறு அத்தாட்சி என்ன வேண்டும், என் அரசாங்கத்தில் அல்லி ராஜ்யம்தான் நடக்கிறது என்பதற்கு? மன்னருக்கு மகாராணி இப்படி ஆறுதல் அளிப்பது என்றால்....

மகாராணி: அபசாரம், அபசாரம்! தங்களிடம் எனக்கு ஒரு உரிமையும் அன்பும் இருக்கிறது என்ற எண்ணத்தில் இப்படிப் பேசி விட்டேன். என் தவறைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும்!

மன்னர்: என்னத்தை மன்னிப்பது? மன்னிப்பாவது? மண்ணாவது? என்னால் வெளியில் தலைகாட்ட முடியவில்லையே!

மகாராணி (துணுக்குற்று): அப்படி என்னால் தங்களுக்கு என்ன அவமானம் நேர்ந்து விட்டது? தயவுசெய்து சொல்லலாமா?

மன்னர்: எங்கு பார்த்தாலும் உன் பெயர்தான்; பேச்சுத்தான்! என்னை யார் என்று கேட்பவர்கள் கூடக் கிடையாது!

மகாராணி: அநாவசியமாக எதற்கு என் பெயரைச் சந்தியில் இழுக்கிறீர்கள்? உங்களைப்போல் தர்மவான் கிடையாது; நீதிமான் கிடையாது; புத்திமான் கிடையாது. இப்படித்தான் மக்கள் பேசுகிறார்களே ஒழிய என்னைப் பற்றி யாருமே வாய் திறக்கவில்லை.

மன்னர்: ஏன்? இப்பொழுது உன்னைப் போன்ற சங்கீத விதுஷியே கிடையாது என்று நாடு நகரமெங்கும் பேசிக் கொள்ளவில்லையா?



மகாராணி: அதைச் சொல்கிறீர்களா? அந்தப் பிச்சையை எனக்கு அளித்தவர் நீங்கள் தானே? அதனால் உங்களைப் போல் கலைஞர்களை ஆதரிப்பவர்கள் கிடையாது என்று பேசிக் கொள்கிறார்களே, அது உங்கள் காதில் விழவில்லையா?

மன்னர்: விழாமல் என்ன? நன்றாக விழுகிறது; மேளதாளத்துடன் விழுகிறது. கலைஞர்களை ஆதரிக்கும் விஷயத்தில் மனைவியின் சொல்லைக் கேட்கிறான் என்றும் பேசிக் கொள்கிறார்கள்!

மகாராணி: அப்படிப் பேசிக் கொள்பவர்கள் புத்தி யில்லாதவர்கள். சங்கீதம் என்பது ஒரு அற்புத தெய்வீகக் கலை. அது எல்லோருக்குமே இலேசில் வந்து விடாது. அதற்குப் பாக்கியம் செய்திருக்க வேண்டும். அதோடு சிறந்த சாதனையும் செய்திருக்க வேண்டும். இது தெரிந்தால் அப்படிப் பேசியிருக்க மாட்டார்கள்.

மன்னர்: அவர்கள் எப்படிப் பேசினால் என்ன? உன்னுடைய பேச்சில் தொனிக்கும் இந்த அகங்காரம் ஒன்று போதுமே! எனக்குச் சங்கீதம் கட்டுப் போட்டால்கூட வராது; விசை என்ன விலை என்று கேட்பேன் என்பதைத் தானே நீ இப்பொழுது குத்திக் காட்டுகிறாய்!

மகாராணி: வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்ற கணக்கில் அல்லவா பேசுகிறீர்கள்! அகங்காரத்தினால் கலை உணர்ச்சி வளராது. உங்களைப் போன்றவர்களின் பராமரிப்பிலே தான் அது வளர முடியும். இதை உணர்ந்தே தான் நான் பேசுகிறேன். உங்களுடைய ஒத்துழைப்பு இல்லையேல், நான் இக்கலையில் இவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்க முடியுமா?

மன்னர்: இப்பொழுதல்லவா தெரிகிறது, அது என் முட்டாள்தனம் என்று! நாளை நடக்கப் போகும் சங்கீத விழாவிலே வேறு, என் தலை அறுந்து தொங்கப் போகிறது!

மகாராணி: கைகேயியின் கோபாக்கிருஹப் பிரவேசத்தினால் ஸ்ரீராம பட்டாபிஷேகம் நின்றது. உங்கள் கோபாக்கிருஹப் பிரவேசத்தினால் இந்தச் சங்கீத விழா வேண்டுமானால் நிற்கட்டுமே! எனக்குச் சம்மதம்.

மன்னர்: அதை நிறுத்தி என் முகத்தில் கரியை அரைத்துப் பூசப் பார்க்கிறாயா? வேண்டாம் அம்மா மகாராசி, வேண்டாம். அதைச் சீரிய முறையில் நடத்தி வை.

மகாராணி: நீங்கள் கைகேயியின் அவதாரத்தை விடுவதா யிருந்தால், நாம் இருவரும் சேர்ந்து நடத்துவோம்.

மன்னர்: அதுமட்டும் முடியாது. நான் கைகேயியின் அவதாரத்தை விடவேண்டும் என்றால், நீ எனக்கு ஒரு வரம் தர வேண்டும்.

மகாராணி: வரமா? சம்பராசுர வதத்தின் பொழுது கைகேயிக்குத் தசரதர் கொடுத்ததைப்போல் நான் ஒன்றும் உங்களுக்கு வரம் கொடுத்ததாக நினைவில்லையே! என்னைக் கேலி செய்கிறீர்களா?

மன்னர்: நினைவில்லையா? அதற்குள் மறந்து விட்டாயா? இசைப்போரில் நீ வெற்றி கொண்டாடிய பொழுது என் விருப்பங்களில் ஒன்றை நிறைவேற்றி வைப்பதாக வாக்கு அளித்தாயே, நினைவில்லையா?

மகாராணி: ஓகோ! அதுவா? என்ன சொல்லுங்கள், இப்பொழுதே நிறைவேற்றி வைக்கிறேன்!

மன்னர்: நாளை நடக்கும் சங்கீத விழாவில் நான்தான் போட்டிக்கு முடிவுகூற வேண்டும்.

மகாராணி: சங்கீத ஞானமே இல்லாத உங்களால் அது எப்படி முடியும்?

மன்னர்: பார்த்தாயா, பார்த்தாயா? இது பரிகாசம் இல்லாமல் என்னவாம்?

மகாராணி: நான் பரிகாசம் - இரிகாசம் செய்யவில்லை. ராக தாள ஞானம் இல்லாத தாங்கள் தீர்ப்புக்கூற முடியாதே! தப்பும் தவறுமாகத் தீர்ப்புக் கூறினால் மக்களது நேரிடைக் கேலிக்கு ஆளாக நேருமே என்ற நல்லெண்ணத்தில்தான் கூறுகிறேன்.

மன்னர்: நான் அல்லி தர்பார் என்று சொன்னால் மட்டும் ஆத்திரப்படுகிறாயே!

மகாராணி: நடக்க முடியாத காரியத்தை எப்படிச் செய்வது என்று சொன்னேனே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. நீங்கள் வழி சொல்லுங்கள். நான் கேட்கத் தயாரா யிருக்கிறேன்.

மன்னர்: சங்கீத விழாவுக்கு இன்னும் சரியாக அறுபதே அறுபது நாழிகை இருக்கிறது. அதற்குள் எனக்கு ராக, தாள ஞானம் வந்து விடவேண்டும். அது உன் பொறுப்பு.

மகாராணி: கடுமையான நிபந்தனையை விதித்தால் ஒருத்தி எப்படி அதை நிறை வேற்ற முடியும்?

மன்னர்: அப்படியானால், சொன்ன சொல்லை நிறைவேற்றக் கையால் ஆகாதவள் என்று சொல்லிவிட்டுப் போயேன்!

மகாராணி: நீங்களே சொல்லுங்கள்! சங்கீதம் என்பது கலைக்கா, வாய்பாடா? உருப் போட்டு மனப்பாடம் செய்துவைத்து விடுவதற்கு? அதற்கு இடையறாத சாதனையும் பயிற்சியும் வேண்டும். ஆயுள் முழுதும் அப்பியசித்தாலும் அந்தக் கலைக்கு ஒரு முடிவு கிடையாது. ஆதியந்தமற்ற கடவுளை அறிவது எவ்வளவு கஷ்டமோ, அவ்வளவு கஷ்டம் சங்கீத சாகரத்தைக் கரைகாண்பது. அதனால்தான் நாதத்தையும் பிரும்மம் என்று கூறுகிறார்கள்.

மன்னர் (ஆத்திரத்துடன்): நான் உன் பிரசங்கத்தைக் கேட்கக் காத்திருக்கவில்லை. நாளைக்குள் என்னைச் சங்கீதக் கலையில் சிறிதளவாவது தேர்ச்சி பெறச் செய்து ராக, தாள ஞானத்தையாவது புரிந்து கொள்ள உன்னால் செய்ய முடியுமா, முடியாதா? சொல்லு!

மகாராணி (சிறிது யோசித்து): எதற்கும் மருந்து உண்டு. ஆனால், பிடிவாதத்துக்கு மருந்து கிடையாது. சரி, சங்கீத தேவதையின் மேல் பாரத்தைப் போட்டு என்னால் இயன்ற வரை முயற்சி செய்து பார்க்கிறேன்! உங்கள் ஞாபக சக்திதான் பெயர் போனதாயிற்றே! அது கை கொடுத்து உதவினால் நாம் கடைத் தேறி விடலாம். எழுந்து வாருங்கள், உங்கள் கோபாக்கிருஹவாசம் போதும்!

மன்னர்: நிஜமாகவா?

மகாராணி: ஆம், நிஜமாக!

[மகிழ்ச்சியுடன் இருவரும் கை கோத்துக் கொண்டு புறப்படுகிறார்கள்]

காட்சி—3

[சங்கீத மண்டபம். காணும் இடங்களில் எல்லாம் பல் வகை வாத்தியங்கள் வைத்திருக்கின்றன. சங்கீதக் கலைஞர்களும் ரசிகர்களும் ஏகபோகக் குழுமி யிருக்கிறார்கள். மன்னரும் மகாராணியும் மலர்ச்சி நிறைந்த முகத்துடன் அரியாசனத்தில் பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்திருக்கிறார்கள். முதலில் பாடகர் ஒருவர் கையில் தம்பூராவை எடுத்துக் கொண்டு தோடி ராகத்தை விஸ்தாரமாக ஆலாபனம் செய்கிறார். மன்னர் பாடகரையும் மகாராணியையும் அடிக்கொரு தடவை பார்த்தும் புன்னகையுடன் பாட்டைக் கேட்டு மகிழ்கிறார். பாடகர் ராக ஆலாபனை செய்து முடிக்கிறார்.]

மன்னர்: ஆகா! அற்புதம்! அற்புதம்! பாடகர் ஸ்வரங்களை நன்முத்து மாலைகளாகக் கோத்துச் செவிகளில் - தனருவியாகப் பாய்ச்சி விட்டார்! தோடி ராகத்தை இப்படி எந்தப்



பாடகரும் ஆலாபனை செய்து நான் கேட்ட தில்லை. இவர் பாடகர்களுள் ஒரு ரத்தினம்; ஒரு பேரரசர். சந்தேகமே இல்லை!

பாடகர்: இத்தகைய குணங்கள் பொருந்திய மன்னருக்கு நான் அடி பணிகிறேன். இசைக் கலை நுணுக்கங்களை அறிந்தவர்கள் தான் நான் பாடிய இந்த ராகத்தின் அருமை பெருமைகளை உணர முடியும். மன்னரைப் பற்றி உலாவி வந்த வதந்தி பொய் என்பதை இன்றுதான் புரிந்து கொண்டேன். இசை நுணுக்கங்களில் இத்தனை தேர்ச்சி பெற்ற மன்னர் இன்றுவரை குடத்துள் விளக்காக இருந்ததுதான் அதிசயம். மன்னரைப் போன்ற ரசிகர்கள் உள்ள இந்த நாடு சீரும் சிறப்புமாக விளங்கப் போகிறது என்பதில் ஐயமில்லை.

[பாடகர் இவ்வாறு கூறி விட்டு அமர்ந்ததும் வைணிகர் ஒருவர் வீணையை எடுத்துக் தன்யாசி ராக ஆலாபனையை அதி அற்புதமாக இசைக்கிறார். மக்கள் மெய் சிலிர்த்து நிற்கின்றனர். மன்ன

ரும் மகாராணியும் ஒருவரை யொருவர் பார்த்து மிகவும் மகிழ் கின்றனர்.]

மன்னர் : வீணைக் கம்பிகளிலே விரல்களை இவ்வளவு லாகவமாக ஓடவிட்டு மிகக் குளு மையாக ராக ஆலாபனம் செய்த தாங்கள் என் பாராட்டுக்குரியவர். ஆரோகண-அவரோ கணத்தை எத்தனை அழகாகப் பிடித்துக் காட்டி விட்டீர்கள்! தன்யாசி ராகத்தைக் கேட்க வேண்டும் என்றால் தங்கள் வீணையில் தங்கள் கையாலேயே கேட்க வேண்டும் என் பது என் முடிவான தீர்மானம்.

வைணிகர் : அரசே! நன்று, நன்று! அர சாங்க அலுவல்களிலிருந்து ஓய்வு ஒழிவு இல்லா மலிருந்தும் தாங்கள் சங்கீத ஞானத்தின் இத்தனை நுணுக்கங்களையும் எப்படித் தெரிந்து கொண்டீர்கள் என்பது ஆச்சரியமாயிருக் கிறது. தோடி, தன்யாசி ராகங்களின் சாயைகளையும் மூர்ச்சைகளையும் பாகு படுத்திப் புரிந்து கொள்வது என்பது பிரபல இசை ஆராய்ச்சியாளர்களுக்கே சிரமசாத்திய மான விஷயம். தாங்கள் சங்கீத ஞானமே அற்றவர் என்று எந்த விரோதியோ கதை கட்டி விட்டிருக்கிறான் என்றுதான் தோன்று கிறது. எனது இத்தனைநாள் சிரமத்துக்கும் உகந்த பலன் கிட்டி விட்டதாகவே எண்ணி மகிழ்கிறேன்.

[இவ்வாறு வைணிகர் கூறவே, மன் னர் மகிழ்ச்சியினால் பூரிக்கிறார். மூன்றாமவர் புல்லாங் குழலில் கானடா ராகத்தைக் கன கச்சித மாக அமிர்த வர்ஷம் போல் வர்ஷிக்கிறார். மன்னர் வியப்புடன் மகாராணியையும் புல்லாங்குழல் கலைஞரையும் பார்க்கிறார்.]

மன்னர் : சபாஷ்! புல்லாங்குழலில் இப் படியும் ராகப் பிரஸ்தாரம் செய்ய முடியும் என்பதை இன்றுதான் காண்கிறேன். ஆயர் குலச் சிறுவர் சிறுமியர்களையும் ஆவினங்களை யும் குழலோசை மயக்கிக் கட்டிப் போட் டிருக்க வேண்டும் என்பதை நூற்றுக்கு நூறு உண்மையாகவே நான் கருதுகிறேன். உங்கள் முகாரி ராகத்துக்கு ஈடு உங்கள் முகாரி ராகம்தான்!

மகாராணி (குறுக்கிட்டு) : மன்னவா!

புல்லாங் குழல் வாசிப்பவர் : என்ன சொன்னீர்கள், மகாராஜா?

மன்னர் (பதற்றத்துடன்) : இப்பொழுது நீங்கள் வாசித்தது முகாரி ராகம்தானே?

புல்லாங்குழல் (கோபமுற்று) : மகா ராஜா! உங்கள் தந்திரத்தைப் புரிந்து கொண் டேன். என்னை இப்படி அவமானப்படுத்து வதற்கென்றே வரவழைத்திருக்கிறீர்கள். இத் தனை நாள் நான் செய்த சங்கீத சாதனை அத்தனையும் இப்படி வீணாக வேண்டுமா? நான் பாடிய கானடா ராகம் உங்களுக்கு முகாரியாகவா தோன்றியது? பிலாக்கண மாகவா பட்டது? என் சங்கீதம் பிடிக்கவில்லை யென்றால் தனிமையில் கூப்பிட்டுச் சொல்லி யிருக்கலாமே! நிறைந்த சபையில் நிறுத்தி அவமானப்படுத்துவதுதான் தங்களைப்போன்ற மன்னர்களுக்கு அழகா? அல்லது மக்கள் சொல்வது போல் உங்களுக்குச் சங்கீத ஞானமே பூஜ்யம்தானா? நீங்களும் உங்கள் அரசாங்கமும்......!

மன்னர் : இசையரசே! ஏதோ தவறு நேர்ந்து விட்டது!

புல்லாங்குழல் : இசையரசும் ஆயிற்று, மண்ணாங்கட்டியும் ஆயிற்று.

[விருட்டென்று கலைஞர் எழுந்து போய் விடுகிறார். மக்களும் கச முச வென்று பேசிக் கொண்டு கலைகிறார்கள்.]

காட்சி—4

[மகாராணி முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு அந்தப்புரத்தில் தன் அறையில் அமர்ந்திருக்கிறாள். மன்னர் அவளைச் சமாதானப்படுத்த வேண்டிக் கெஞ்சும் பாவனையில் நிற்கிறார்.]

மன்னர் : தேவி! என்ன தவறு நேர்ந்து விட்டது?

மகாராணி : என்ன நேர்ந்து விட்டதா? நிறைந்த தர்பாரில் நம் மூக்கு அறுபட்டு விட்டது! இவ்வளவும் உங்கள் பிடிவாதத்தி னால் வந்த வினைதான்!

மன்னர் : என் பிடிவாதத்தினாலா? நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே!

மகாராணி : விளங்குமோ? விளங்காது தான்! நீங்கள் இப்படிச் சங்கீதப் பைத்தியம் பிடித்து அலையாமலிருந்தால் இந்தக் கதி நேர்ந்திராது. இதற்கெல்லாம் இடம் கொடுத் தேனே, என் புத்தியைச் சொல்லணும்!

மன்னர்: நீ கொடுத்த சமிக்ஞைகளை யெல்லாம் நான் சரியாகத்தானே புரிந்து கொண்டு பேசினேன்!

மகாராணி: நீங்கள் புரிந்து கொண்ட லட்சணத்தைச் சொல்ல வேறு வேண்டு மாக்கும்!

மன்னர்: என் ஞாபக சக்தியைக் குறை கூறினால் எனக்குக் கனகோபம் வந்துவிடும்! ஒரு தடவை சொன்னதை நான் என்றைக் காவது மறந்திருக்கிறேனா?

மகாராணி: மறந்தால் என்ன? மறக்கா விட்டால் என்ன? இன்றைக்கு நடந்தது ஒன்று போதுமே, ஜன்ம ஜன்மத்துக்கும்!

மன்னர்: அப்படி என்ன நடந்துவிட்டது? நீ தோட்டைத் தொட்டாய், நான் தோடி என்றேன். தலையைத் தொட்டாய், தன்யாசி என்றேன். மூக்கைத் தொட்டாய்; முகாரி என்றேன். நான் எங்கே தவறு இழைத்தேன், நீயே சொல்!

மகாராணி: நான் மூக்கைத் தொடவும் இல்லை; பாடியவர் முகாரியும் பாடவில்லை.

மன்னர்: எதற்கு இந்தப் பச்சைப்புளுகு?

மகாராணி: இல்லை. அவர் பாடியது கானடா ராகம் அல்லவா?

மன்னர்: கானடாவா? அப்படியென்றால் நீ காதை அல்லவா தொட்டிருக்க வேண்டும்! மூக்கைத் தொட்டு விட்டு என்னையே கடிந்து கொள்கிறாயே!

மகாராணி: நான் அவர் பாட்டை முடித்ததும் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகக் காதைத்தான் தொட்டேன். அதை நீங்கள் கவனித்தால்தானே?

மன்னர்: பாட்டு முடிவதற்கு முன்பே நீ மூக்கைத் தொட்டு ஜாடை காட்டவில்லை?

மகாராணி: அட! மூக்கில் ஈ உட்கார்ந்த பொழுது விரட்டினேனே, அதைப் பார்த்துத் தப்பாகப் புரிந்து கொண்டு விட்டீர்களா?

மன்னர்: அட, பிரஹசாரமே! அப் பொழுது நீ ஈயா விரட்டினாய்? மன்னித்து விடு, மகாராணி! நான் தப்பாகத்தான் புரிந்து கொண்டு விட்டேன்.

மகாராணி: இனி மன்னித்துப் பயன் என்ன? இவ்வாண்டுத் திருவிழா என்றும் இல்லாத் திருவிழாவாகச் சிறக்க வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தேன்; என் தோழி யும் என் விருப்பம் ஈடேறும் என்று சொன் னாள். கடைசியில் இப்படி அல்லவா என்றும் இல்லாத் திருவிழாவாகச் சிறந்திருக்கிறது!

[மகாராணி சிரிக்கிறாள். மன்னரும் அவள் சிரிப்பில் கலந்து கொள்கிறார்.]

படித்தும் பாருங்கள்

குஹதாஸ் நூல்கள்

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களின் சீடரும், தஞ்சை ஜில்லா செங்காலிபுரம் கிராமவாசியுமான குகதாஸ் நடராஜ சர்மா இயற்றியுள்ள அரு மையான பக்திமார்க்க நூல்களின் சிறப்பை ஸ்ரீ காமகோடி ஆசாரிய ஸ்வாமிகளின் ஸ்ரீமுகத்திலிருந்தும் ஸ்வாமிகள் குகதாஸுக்கு எழுதியுள்ள அனுக்ரக லிகிதத்திலிருந்தும் எவரும் எளிதில் அறிந்து கொள்ளலாம். எளிய தமிழ் நடையில் உள்ள குகாலய நூல் களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரு மானம் அத்யாத்மப் பயிற்சி, தெய்வ நம் பிக்கை, பக்தி மார்க்கம் முதலியவற்றை வளர்க்கவே உபயோகிக்கப்படுகின்றன. இந் நூல்களை வாங்குவோர் தாங்கள் பயன் பெறு வதுடன், சமுதாயம் அறநெறியில் செல்லுவ தற்கும் உதவி செய்தவர்களாகிறார்கள்.

விலைகள் விவரம்: தானனது ஆத்மாநுபவம் ரூ. 1—4—0; அத்யாத்மமாலா ரூ. 5-0-0. நாரத பக்தி ஸூத்ரம் முதலியவை 0-12-0; ஸ்ரீ சுப்பிரமணிய பிரசன்னமாலை 0—6—0; பூஜாவிதானம் 0-6-0; குகாலயமும் அதன் கொள்கைகளும் ரூ. 1—0—0; குகாலயப் படங்கள் (ஆறு வகை) ரூ. 2—8—0.

கிடைக்குமிடம்: காரியதரிசி, 'குகாலயம்' செங்காலிபுரம், தஞ்சாவூர் ஜில்லா.

கீர்த்தன ரத்னகரம் (2-வது பாகம்)

ஸத்குரு ஸ்ரீ தியாகப் பிரம்மம் அருளிய பஞ்சரத்ன கீர்த்தனங்களை ஏற்கனவே ஸ்வர ஸாஹித்யங்களுடனும் பதவுரையுடனும் பிர சுரிக்கும் பணியில் வெற்றி பெற்ற சங்கீத வித்துவான் ஸ்ரீ என். ராஜகோபாலன் பி. ஏ., இப்போது மேலும் இருபத்தைந்து அருமை யான கீர்த்தனங்கள் அடங்கிய இரண்டாவது பாகத்தை ஸ்வர, ஸாஹித்ய, பதவுரைகளுடன் வெளியிட்டுள்ளார். பக்தி ரசம் ததும்பும் அந்தக் கீர்த்தனங்களுக்குச் சுருக்கமாக ஆங் கிலத்திலும் உரை வழங்கப்பட்டிருக்கிறது. சங்கீத வித்யார்த்திகள், ரசிகர்கள் சகல ரும், பக்த சிகாமணியும் நாதோபாசகரு மான ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் அருமையான கீர்த்தனங்களின் கருத்துக்களையும் ராகங் களின் ஸ்வரூபங்களையும் அறிந்து கொள்வ தற்குக் கீர்த்தன ரத்னகரம் உதவியாக இருக்கும்.


கிடைக்குமிடம்: மீரா வித்யாலயா, 37, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை—28. விலை: ரூ. 1—8—0;

சினிமா டைரி 1957

தமிழ் நாட்டுச் சினிமா நட்சத்திரங்கள், சினிமாஸ்டண்ட்மாஸ்டர்கள், டைரக்டர்கள், தயாரிப்பாளர்கள், கதை, வசனம், பாடல் இயற்றுபவர்கள், சங்கீத டைரக்டர்கள், பின்னணிப் பாடக பாடகிகள், சினிமா விமரிசகர்கள் முதலியவர்களைப் பற்றிய குறிப் புக்களுடன் இந்த டைரி புதுமுறையில் வெளி யாகியிருக்கிறது. சினிமா ரஸிகர்கள் ஆர்வத்துடன் வரவேற்பார்கள்.

வெளியிட்டோர்: சுதர்ஸன் பப்ளிகேஷன்ஸ், 20, கல்லுக்காரன் தெரு, மயிலாப்பூர், சென்னை-4; விலை: ரூ. 2-0-0.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


பாருங்கள்! ஒரு அரை வில்லை
சன்லைட் தான்
இவ்வளவு சலவையும்
செய்து முடித்து
விட்டது!
அதிகப்படியான நுரையே இதைச் சாதித்தது!
பளிச்சென்று
வெண்மையாக
வெளுப்பது
ஸன்லைட் சோப்
இந்தியாவில் தயாரித்தது

[illegible] No. M. 4393
Registered as a Newspaper in Ceylon